விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 புரட்டாதி 01 சனிக்கிழமை (17.09.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 273

# பற்றி எரிந்தது கிளி.பொதுச் சந்தை



- 75ற்கும் மேற்பட்ட கடைகள் நாசம்
- கோடிக்கணக்கில் சொத்திழப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொதுச்சந்தையில் நேற்றைய தினம் இரவு ஏற்பட்ட பாரிய தீ அனர்த்தத்தி னால் 75க்கும் மேற்பட்ட கடைகள் எரிந்து நாச மாகியுள்ளன. இந்த அனர்த்தத்தில் கோடிக்கணக் கில் சொத்திழப்பு ஏற்பட்டுள்ளதால் செய்வதறி யாத நிலையில் வர்த்தகர்கள் பலர் அதிர்ச்சிக் குள்ளாகியிருப்பதுடன் கிளிநொச்சி நகர் நேற்றி ரவு முழுவதும் பெரும் அல்லோலகல்லோலமாக காட்சியளித்தது. (04ஆம் பக்கம் பார்க்க)

## போர்க்குற்ற விசாரணையில் சர்வதேச நீதிபதிகள் இல்லை

### உறுதிபடத் தெரிவித்தார் அமைச்சர் மனோ



(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற போர்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணையில் சர்வதேச நீதிபதி களின் பிரசன்னம் இருக்காது என்பதை 24ஆம் பக்கம் பார்க்க....

### வீட்டுத் திட்டத்தையும் வழங்கி

## நாவற்குழியில் 250 குடும்பங்களை விரைவாக குடியமர்த்த நடவடிக்கை



24ஆம் பக்கம் பார்க்க....

## ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)

வடமத்திய மாகாண முதல மைச்சர் பேசல ஜயரத்னவின் உத்தி யோகபூர்வ இல்லத்தில் இருந்து நேற்று ரி-56 ரக துப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

தொழிலாளர்களர் சிலர் கிணறு ஒன்றை சுத்தம் செய்து கொண்டி ருந்த போதே இந்த தோட்டாக்கள் கண்டுபிடிக்கப்பட்டன. கிணற்றுக் குள் 200க்கும் 23ஆம் பக்கம் பார்க்க....

# போர்க்குற்ற விசாரணையில் சர்வதேச நீதிபதிகள் இல்லை

## உறுதிபடத் தெரிவித்தார் அமைச்சர் மனோ



(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற போர்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணையில் சர்வதேச நீதிபதி களின் பிரசன்னம் இருக்காது என்பதை 24ஆம் பக்கம் பார்க்க....

## வீட்டுத் திட்டத்தையும் வழங்கி

# நாவற்குழியில் 250 குடும்பங்களை விரைவாக குடியமர்த்த நடவடிக்கை



24ஆம் பக்கம் பார்க்க....

# ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)

வடமத்திய மாகாண முதல மைச்சர் பேசல ஜயரத்னவின் உத்தி யோகபூர்வ இல்லத்தில் இருந்து நேற்று ரி-56 ரக துப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

தொழிலாளர்களர் சிலர் கிணறு ஒன்றை சுத்தம் செய்து கொண்டி ருந்த போதே இந்த தோட்டாக்கள் கண்டுபிடிக்கப்பட்டன. கிணற்றுக் குள் 200க்கும் 23ஆம் பக்கம் பார்க்க....

# வாழ்வின் எழுச்சி

அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III போட்டிப்பரீட்சை மாதிரி வினாத்தாள்

உள்ளே...

# நல்லிணக்கத்தை ஏற்படுத்த சமஷ்டி தீர்வு அவசியம்!

## சந்திரிகா கருத்து



(கொழும்பு)

நாட்டில் நல்லிணக்கத்தை ஏற் படுத்துவதற்கு சமஷ்டி மற்றும் ஓரளவு மத சார்பற்ற அரசியலமைப்பு அவசியம் என முன்னாள ஜனாதி பதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

தேசிய ஐக்கியம் மற்றும் நல்லி ணக்கத்திற்கான அலுவலகத்தின் ஏற்பாட்டில் கொழும்பில் இடம்பெற்ற கருத்தரங்கு 23ஆம் பக்கம் பார்க்க....

# சகலரும் ஏற்கும் வகையில் புதிய அரசியல் யாப்பு

## வாக்கெடுப்பின்மூலம் தெரிவாகுமென எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு



(திருகோணமலை)

புதிய அரசியல் சாசனமானது பொதுஜன வாக்கெடுப்பின் மூலமே நிறைவேற்றப்பட்டு நடைமுறைப் படுத்தப்படும் என்பதுடன், அதற்கு மாறாக எவரும் பொதுமக்களை ஏமாற்ற முடியாது என எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் 24ஆம் பக்கம் பார்க்க....

# மைத்திரிக்கு பேஸ்புக்கில் 11 இலட்சம் விருப்புக்கள்!

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன தனது பேஸ்புக் கணக்கில் 11 இலடசத்துக்கும் அதிகமான விருப்புக் களை (Likes) கடந்த அரசியல் வாதி என்ற சாதனையை படைத் துள்ளார். இவரது பேஸ்புக் கணக் கில் இன்றுவரை 1,105,268 விரும பிக்கள் விரும்பி இருக்கிறார்கள். இவருக்கு அடுத்த படியாக முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 1,068,970 விருப்புகளைப் பெற்று இரண்டாவது இடத்தைப் பெற்ற இலங்கை அரசியல்வாதியாக காணப்படுகின்றார்.

இதேவேளை, பேஸ்புக் கணக் கில் அதிக விருப்புகளைப் பெற்ற இலங்கையர் என்ற சாதனையை இலங்கையிலிருந்து பொலிவூட் திரைத்துறைக்குச் சென்ற ஜக்கு லின் பெர்ணான்டஸ்ஸே பெற்றுள் ளார்.

இவருக்கு அடுத்தபடியாக கிரிக் கெட் வீரர் குமார் சங்கக்காரவும் இடம் பிடித்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (செ-4)

# நான் வடக்கு; நீ கிழக்கு வேண்டாம் தமிழால் நாம் ஒன்றிணைவோம்

## முத்தமிழ் விழாவில் வடக்கு முதலமைச்சர் உரை

(கொழும்பு)

தன்மொழி அறிந்தே பிறமொழி பாண்டித்தியம் பெறவேண்டும். இல்லையேல் நாம் கலப்பினக் காடையர்கள் ஆகிவிடுவோம் என தெரிவித்த வடக்கு மாகாண முதல மைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழ்மொழி சார்ந்த எமது சமூக ஒருமைப்பாடே வடக்கு கிழக்கு மாகாணங்களின் சமரசத்திற்கும் சமஷ்டிக்கும் வழி அமைக்கும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.



தமிழ் மக்கள் பேரவையின் முத்தமிழ் விழாவின் முதலாம் நாள் நிகழ்வு நேற்று முன்தினம் மட்டக்களப்பு சுவாமி விபுலானந் தர் அரங்கில் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே முதலமைச்சர் 24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பேருந்து - உழவு இயந்திரம் விபத்து

## 7 பேர் காயம்



(திருகோணமலை)

திருகோணமலை புத்தளம் வீதியில் கன்னியா இடத்தில் பயணிகள் உல்லாச பேருந்தும் உழவு இயந்திரமும் விபத்துக்கு உள்ளானதில் 7 பேர் படுகாயங்களுக்கு உள்ளாகி உள்ளனர்.

படுகாயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு பிரதேசவாசிகளினால் அழைத்துச் செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

ஜா எல பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் 3 நாள் விடுமுறைக்காக பேருந்தில் திருகோணமலை வந்திருந்த நிலையிலேயே இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

கன்னியா வெந்நீர் ஊற்றுக்கு செல்லும் வழியில் இவ்விபத்து நிகழ்ந்துள்ளது. உப்புவெளி பொலிஸார் விபத்து தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை கடந்த 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி அதிகாலை 4.30 மணிக்கு சென்ற இ.போ.ச பேருந்து இதே வீதியில் வெந்நீர் கிணற்று சந்திக்கு அருகாமையில் அதிகாலை 5 மணியளவில் விபத்துக்கு உளளாகியது.

இதில் பயணம் செய்த 7 பேர் காயமடைந்து பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக முன்னர் அனுமதிக்கப்பட்டு இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ)

## மரண அறிவித்தல்

### திருமதி தாமோதரம்பிள்ளை அரியமலர்



மாரிசன்கூடலைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி வடக்கு தம்பையாப்புலத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை அரியமலர் 16.09.2016 (வெள்ளிக்கிழமை) காலை 7.30 மணியளவில் காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினருக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:-கணவர் தாமோதரம்பிள்ளை
(குடும்பத்தினர்)

(சி-5792)

## கள இணைப்பாளர் பதவி

**தகைமைகள்:** களத்தில் 3 வருடங்கள் பணியாற்றிய அனுபவத்துடன் கண்காணித்தல் அறிக்கையிடல் செய்யக் கூடியவர், மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் அவசியம்.

விண்ணப்ப முடிவுத் திகதி:-21.09.2016
சுயவிபரக்கோவை அனுப்பவேண்டிய முகவரி:

**SOND நிறுவனம்**
**18/10, வைமன் வீதி, யாழ்ப்பாணம்.**

(சி-5789)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## மரண அறிவித்தல்

### குமாரசாமி ஞானாம்பிகை



பிறப்பு - 10.06.1935
இறப்பு - 15.09.2016

அளவெட்டியை பிறப்பிடமாகவும் கோப்பாய், திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற சுப்பையா இரத்தினபூபதி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற குமாரசுவாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிவசிதம்பரம் சேதுப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற மகாதேவி, சிவகுமாரன், நகுலேஸ்வரி, சிவராஜா, சிறிகணேசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற குமாரசாமி தில்லைநாதன், நேசரஜனி, நித்தியவாணி ஆகியோரின் மாமியாரும் கஜேந்திரன், யாழினி, வற்சலன் பவித்ரன், கபிலன், சங்கீதன், சிவன்ஜா, கீர்த்தனா, பிரமினா, திலீபன் ஆகியோரின் பேர்த்தியும் கிரிவர்தனி, நிதுஷாயினி, ஆதினா, ஆதனன் ஆகியோரின் பூட்டியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.09.2016) ஞாயிற்றுக்கிழமை பி.ப 4.00 மணிக்கு பாலையூற்று இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருகோணமலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1203, பாலையூற்று கண்டி வீதி,
திருகோணமலை.
077 406 5768, 077 191 2060

(சி-5788)

தகவல்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவபாக்கியம் சிதம்பரப்பிள்ளை



கரம்பன் மேற்கைப் பிறப்பிடமாகவும், யாழ்.நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் சிதம்பரப்பிள்ளை 14.09.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா-லட்சுமி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-பெரியபிள்ளை தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளையின் அன்பு மனைவியும், சிவனேஸ்வரி, சிவயோகன் (பிரான்ஸ்), சிவநாதன் (சிவா-சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், யோகராஜா (ஆனந்தி), சந்திரமதி (பிரான்ஸ்), சிறிகாந்தினி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற சிவனடியான், செல்வராசா, பரிபூரணம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற அன்னலட்சுமி, உருத்திராதேவி, காலஞ்சென்ற பாலசிங்கம் ஆகியோரின், மைத்துனியும், பாலரூபன்-சந்திரரூபி (சுவிஸ்), பாலரூபி-ஜெகதீஸ்வரன் (சுவிஸ்), பாலமோகன்-சுபமதி (இத்தாலி), பாலசுபாஜினி-கோகுலன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும், ரேணுகா-அருட்செல்வன் (இந்தியா), அருட்செல்வி-தயாபரன் (ஜேர்மனி), வத்சலா-சிவகுமார் (லண்டன்), தர்சினி-காலஞ்சென்ற சாந்தகுமார் (சுவிஸ்), வாசகன்-சுதா (கனடா), கேசவன்-கௌசி (கனடா) ஆகியோரின் அன்பு அத்தையும், சுவேனிதா, கேமறனிற்ரா, பவிதன், கிருஷிகா, ரக்ஷிகா, அபிநயன், அஸ்வின், அனுஷியா, ஜெனுஷியா, துவிஷன், விதுஷன், ஆரண்யன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.09.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-குடும்பத்தினர்
மருமகன்-யோகராஜா (ஆனந்தி)
(சிவானந்தா கபே, நல்லூர்)

50/23, செட்டித்தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(5930)

### திருமதி தர்மலிங்கம் சாந்தாதேவி (சாந்தம்மா)



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 02 - 02 - 1944 | 15 - 09 - 2016 |

காலஞ்சென்ற மயில்வாகனம்-ஆச்சிமுத்து தம்பதிகளின் புதல்வி திருமதி தர்மலிங்கம் சாந்தாதேவி அகால மரணமானார்.

அன்னார் கந்தசாமி தர்மலிங்கத்தின் பாசமிகு மனைவியும், சுபாஷினி (வட மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு அபிவிருத்தி உதவியாளர்), சுதாஜினி (வட மாகாண கல்வி அமைச்சில் முகாமைத்துவ உதவியாளர்), சோபனா (முகாமையாளர்-நெல்லியடி செலிங்கோ இன்சூரன்ஸ்), சுகிர்தன் (கனடா), சுகந்தன் (Scaman) ஆகியோரின் தாயாருமாவார்.

அன்னாருடன் மருமகன் பசுபதி நந்தமூர்த்தியும் (எவர்கிறீன் போட்டோ உரிமையாளர்) அகால மரணமடைந்தார். மேலும் ஜெனார்த்தனின் பாசமிகு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் திங்கட்கிழமை (19.09.2016) காலை 9.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மயிலியதனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெற்கொழு கிழக்கு,
கொம்மாந்தறை,
வல்வெட்டித்துறை.

-குடும்பத்தினர்

(சி-5787)

# பொறுப்புக்கூறலை நிறைவேற்றுவதில் கடுமையான சவால்களை சந்திக்கிறோம்

## ஐ.நாவில் இலங்கைப் பிரதிநிதி ஆரியசிங்க

(கொழும்பு)

**சர்வதேசத்திற்கு வழங்கிய வாக்குறுதிகளுக்கு அமைய பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க பொறிமுறைகளை ஏற்படுத்தும் போது தமது அரசாங்கம் கடும்போக்குவாதிகளின் கடுமையான எதிர்ப்புகளுக்கு முகம்கொடுத்துள்ளதாக ஜெனிவாவுக்கான இலங்கைத் தூதுவர் ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.**

ஜெனிவாவிலுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 33 ஆவது கூட்டத் தொடரில் நேற்று முன்தினம் காணாமற்போனோர் விவகாரம் தொடர்பில் ஆராயப்பட்டது. இதன்போது இலங்கையில் காணாமற்போனோருக்கான நீதியை நிலைநாட்டுவதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்க பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தெளிவுபடுத்தினார். பொறுப்புக்கூறல் நல்லிணக்கம் மற்றும் மீள் நிகழாமை தொடர்பில் சர்வதேசத்திற்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவும் அது தொடர்பில் தமக்கிருக்கும் கடப்பாட்டை உறுதிப்படுத்துவதற்காகவும் நாட்டின் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளும் இணைந்து உருவாக்கியுள்ள தேசிய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இதற்கான பொறிமுறைகளை அமைப்பதற்காக மக்களின் கருத்துக்களை அறிந்து வருவதுடன் கடந்த ஓகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி காணாமற் போனோர் தொடர்பிலான அலுவலகமொன்றை அமைப்பதற்கான சட்டத்தையும் நாடாளுமன்றில் நிறைவேற்றியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அதேவேளை காணாமற்போனோர் தொடர்பிலான சான்றிதழ்களை விநியோகிப்பதற்காக மரணச்சான்றிதழ் சட்டமூலத்தில் திருத்தமொன்றையும் மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அதேவேளை உண்மையை கண்டறிவதற்கான ஆணைக்குழு. போர்க்குற்ற விசாரணைகளை மேற்கொள்வதற்கான நீதிமன்ற விசாரணைப் பொறிமுறை ஆகியவற்றையும் ஏற்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்து வருவதாகவும் இதற்காக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தொழில்நுட்ப மற்றும் நிபுணத்துவ ஒத்துழைப்புக்களையும் பெற்றுக்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பொறுப்புக்கூறல் விடயத்திலும் நல்லிணக்க விடயத்திலும் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவரும் போது கடும்போக்கு தரப்பினரின் கடுமையான சவால்களுக்கும் முகம் கொடுக்க நேரிட்டுள்ளதாகவும் ரவிநாத் ஆரியசிங்க மேலும் தெரிவித்தார். (இ-3-10)

## கடற்படை தளபதியை சந்தித்த சீனப் பாதுகாப்பு ஆலோசகர்



இலங்கைக்கான சீன உயர்ஸ்தானிரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கேர்ணல் லீ சென்கிலின் மற்றும் இலங்கைக்கான சீன உயர்ஸ்தானிரகத்தின் உதவிப் பாதுகாப்பு ஆலோசகர் லெப்டினன் கேர்ணல் சாங் ஆகியோர் இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜயகுணரத்னவை சந்தித்து கலந்துரையாடினர்.

இச் சந்திப்பு இலங்கை கடற்படை தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இரு தரப்பு உறவுகள் குறித்து இக்கலந்துரையாடலில் முக்கியமாக பேசப்பட்டுள்ளது.

இதன்போது சீனப் பாதுகாப்பு ஆலோசகர். இலங்கை கடற்படை நலன்புரி தேவைக்காக 437.000 மில்லியன் ரூபா பெறுமதியான காசோலையை இலங்கை கடற்படைத் தளபதியிடம் கையளித்தார். (இ-3-10)

## 6 மாணவர்கள் ஒரு பாடசாலை

நாட்டிலுள்ள பிரபலமான பாடசாலைகளில் மட்டுமே தமது பிள்ளைகளுக்கு கல்வி பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என பல பெற்றோர் எண்ணுகின்றனர்.

நேற்று முன்தினம் கூட அரச வைத்தியர்கள் தமது பிள்ளைகளுக்கு பிரபல பாடசாலைகளில் அனுமதி கோரி கல்வி அமைச்சில் அத்துமீறி உள்நுழைந்து ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருந்தனர்.

இந்தநிலையில் மாத்தளை பிரதேசத்தில் 6 மாணவர்களும் 4 ஆசிரியர்களுடன் இயங்கும் பாடசாலை தொடர்பில் தகவல் வெளிவந்துள்ளது.

மாத்தளை-நாவுல-தெமதலுய பிரதேசத்தில் குறித்த பாடசாலை அமைந்துள்ளது.

அதிக மக்கள் வாழும் குறித்த பிரதேசத்தில் இந்த பாடசாலையில் 6 மாணவர்கள் மட்டுமே கல்வி கற்று வருவதாகவும் இவர்கள் அனைவரும் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்கள் என இந்த பாடசாலையின் அதிபர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கல்வி அமைச்சின் அருகில் உள்ள பாடசாலையை சிறந்த பாடசாலையாக மாற்றும் வேலைத்திட்டத்தின் கீழ் அடுத்தாண்டு முதலாந்தரத்திற்காக இதுவரை ஒரு விண்ணப்பம் கூட இந்த பாடசாலைக்கு கிடைக்கவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-3-10)

### காணிக் கொள்வனவு விவகாரம்

## ரோஹித ராஜபக்ஷவிடம் விசாரணை நடத்த முடிவு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இளைய மகன் ரோஹித ராஜபக்ஷவிடம் விசாரணை நடத்த. பொலிஸ் நிதிக் குற்றப்புலனாய்வுப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. காணிக் கொள்வனவு ஒன்றில் தொடர்புபட்டுள்ள குற்றச்சாட்டின் பேரிலேயே அவரிடம் விசாரணை நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



இரத்மலானையில் அமைந்துள்ள கொட்டன் மில்ஸ் நிறுவனமொன்றுக்குச் சொந்தமான காணியொன்றை சொத்து அபிவிருத்தி நிறுவனமொன்று கொள்வனவு செய்துள்ளது.

இந்தக் காணி ரோஹிதவுக்காக வீடொன்றை நிர்மாணிக்கவே கொள்வனவு செய்யப்பட்டுள்ளதான தகவலின் அடிப்படையிலேயே நிதிக் குற்றப்புலனாய்வுப் பிரிவு விசாரணை செய்யவுள்ளதென்று மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-3-10)


## மகிந்தானந்தவை பார்வையிட சிறைச்சாலை சென்றார் மகிந்த

குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேயை பார்வையிட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெலிக்கடை சிறைச்சாலைக்கு சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின் றது.

மகிந்த ராஜபக்ஷவுடன். அவரது மகன் யோசித ராஜபக்ஷவும் சென்றுள்ளார்.

இதேவேளை நேற்று முன்தினம் கைது செய்யப் பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சானுக ரத்வத்தையையும் மகிந்த ராஜபக்ஷ பார்வையிட்டு. நலம் விசாரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## நியூசிலாந்து செல்லும் முதலாவது இலங்கை பிரதமர் ரணில்



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஒக்டோபர் மாதம் நியூஸிலாந்துக்கான சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி முதல் 3ஆம் திகதி வரை இந்த விஜயம் அமையவுள்ளதாக நியூஸிலாந்தின் பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பிரதமரின் இந்த விஜயத்தின் போது நான்கு அமைச்சர்களும் இலங்கையின் வர்த்தகர்களும் இணைந்து கொள்ளவுள்ளனர்.

இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை வரவேற்பதற்கான எதிர்பார்ப்பில் இருப்பதாக நியூஸிலா ந்து பிரதமர் கூறியுள்ளார்.

இலங்கைப் பிரதமர் ஒருவர் நியூஸிலாந்திற்கு விஜயம் மேற்கொள்ளும் முதலாவது சந்தர்ப்பம் இதுவென்பதுடன். இந்த விஜயம் மூலம் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவு வலுப்பெறும் என்றும் நியூஸிலாந்து பிரதமர் நம்பிக்கை வெளியிட்டார்.

கடந்த பெப்ரவரி மாதம் நியூஸிலாந்து பிரதமர் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-3-10)


## இலங்கைக்கு வழங்கும் நிதியை அதிகரிக்க உலகவங்கி தீர்மானம்


தொற்று அல்லாதநோயைக் கட்டுப்படுத்த உலக வங்கி இலங்கைக்கு வழங்கிவரும் நிதியினை அதிகரிக்க தீர்மானித்துள்ளது.



உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் உள்ளிட்ட பிரதிநிதிகள் மற்றும் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன ஆகியோருக்கிடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த 5 வருடங்களுக்காக தொற்றா நோயைக் கட்டுப்படுத்த உலக வங்கியானது இதுவரை 200 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியினை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

இந்த நிதியினையே 1.9 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரிக்க உள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. மேலும் உலக வங்கி வழங்கிய நிதியினை இலங்கை பிரயோசனப்படுத்தியுள்ளதாக உலக வங்கியின் பிரதிநிதிகள் மகிழ்ச்சியுடன் குறித்த கலந்துரையாடலின் போது தெரிவித்ததாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-3-10)






அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும் யாழ்ப்பாணக் கம்பன் விழா நேற்று முன்தினம் பிற்பகல் 4.30 மணிக்கு ஆரம்பமாகியது. கொழும்பு கம்பன் கழகப் பெருந்தலைவர் ஜெ.விஸ்வநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கே.ஆர்.சுந்தரமூர்த்தி குழுவினரின் மங்கல இசை, வாசஸ்பதி ரஜீந்திரனின் கடவுள் வாழ்த்து, ஸ்ரீலஸ்ரீசோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், வணபிதா ரி.ரவிராஜ் அடிகள், மௌலவி ஏ. அப்துல் சமத் ஆகியோரின் ஆசியுரைகள் என்பன இடம்பெற்றன. தொடர்ந்து நீதிபதி மா.இளஞ்செழியன் தொடக்கவுரை ஆற்றினார். கம்பவாரிதி இ.ஜெயராஜ் எழுதிய உன்னைச் சரணடைந்தேன் மற்றும் கடந்த கால கம்பன் விழாக்களின் இறுவட்டுக்கள் என்பன வெளியிட்டு வைக்கப்பட்டன. நிறைவு நிகழ்வாக கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையில் இலக்கிய ஆணைக் குழு இடம்பெற்றது.

(படங்கள் - ஐ.சிவசாந்தன், உ.சாளின், பொ.சோபிகா)

# வாகன விபத்தில் இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

துவிச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் கார் விபத்துக்குள்ளானதில் இரு இளைஞர்கள் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து சம்பவம் நேற்று இரவு 8 மணியளவில் பலாலி வீதி கந்தர்மடத்தில் இடம்பெற்றுள்ளது.

கந்தர்மடத்தை சேர்ந்தவர்களான இ.சாருஜன் (வயது 21), பா. ஜான்சன் (வயது 21) ஆகிய இருவருமே மேற்படி விபத்து சம்பவத்தில் காயமடைந்தவர்களாவர்.

ஒழுங்கை ஒன்றிலிருந்து பிரதான வீதிக்கு துவிச்சக்கர வண்டியில் பயணிக்க முற்பட்ட போதே மேற்படி விபத்து நிகழ்ந்துள்ளது.

விபத்தில் காயமடைந்த இருவரும் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள் நிலையில் இது தொடர் பான விசாரணைகளை யாழ். பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-4,30)

# பற்றி எரிந்தது ...



பகல் முழுவதும் சுறுசுறுப்பாக இயங்கிய கிளிநொச்சி நகர் இரவு 9.30 மணியளவில் மெதுவாக ஓய்ந்து போயிருந்தது.

நகரில் ஆங்காங்கே சில கடைகள் அந்த இரவு நேரத்தில் திறந்திருந்த போதிலும் தீ விபத்துக்குள்ளான பொதுச் சந்தை கட்டடத்திலிருந்த பெரும்பாலான கடைகள் பூட்டப்பட்டிருந்தன.

வழமையாக தமது வியாபார நடவடிக்கைகளை முடித்துவிட்டு நேற்று வெள்ளிக்கிழமை என்பதனால் திருஷ்டி கழிப்பிற்காக கடைகளின் முன்னால் கழிப்பு எரித்த பின்னர் அதை அணைத்துவிட்டு வர்த்தகர்கள் சென்றுள்ளனர்.

இவ்வாறு அனைத்து கடைகளும் 9 மணிக்குள் மூடப்பட்டுவிட்டன. இந்த நேரத்தில் தான் இந்த பாரிய அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

பொதுச் சந்தையில் உள்ள கடையொன்று முதலில் தீப்பிடிக்க ஆரம்பித்துள்ளது. தீ வேகமாக ஏனைய கடைகளுக்கும் பரவ ஆரம்பிக்க பொதுச் சந்தைக் காவலாளி, வீதியில் சென்றோர் கட்டடத்தில் தீ பரவுவதனைகண்டதும் உடனடியாக அனைவருக்கும் தெரியப்படுத்தி தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயற்சித்துள்ளனர்.

பொதுமக்கள் தீயை கட்டுப்படுத்த முயற்சி எடுப்பதற்கிடையில் தீ கட்ட்டம் முழுவதும் பரவி கொழுந்துவிட்டு எரிந்தது.



இதனால் கட்டடத்திற்கு அருகாமையில் கூட யாரும் செல்ல முடியாத நிலை காணப்பட்டது.

உடனடியாக சம்பவ இடத்திற்கு வருகை தந்த இராணுவம் மற்றும் பொலிஸார் தண்ணீர் பவுசர்கள் மூலம் தண்ணீரை பீய்ச்சியடித்து தீயை கட்டுக்குள் கொண்டுவர கடும் முயற்சி செய்தனர்.

இவர்களோடு தீயை கட்டுப்படுத்த கிளிநொச்சி மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து போராடினார்கள்.

அப்போதும் கொழுந்து விட்டெரிந்த தீ கட்டுப்பாட்டிற்குள் வரவில்லை. எனினும் தொடர்ந்திருந்த பொதுமக்களின் கடும் முயற்சியினாலும் வவுனியாவிலிருந்து வந்த தீயணைப்பு படையினர் மற்றும் பொலிஸ், இராணுவத்தினரின் உதவியின் மூலம் இரண்டு மணிநேர போராட்டத்திற்கு பின்னர் தீ கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது.

இவ் அகோர அனர்த்தத்தில் 75 இற்கும் மேற்பட்ட கடைகள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதோடு 30 இற்கும் மேற்பட்ட கடைகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

இவ்வாறு எரிந்து சேதமாகிய கடைகளினால் கோடிக்கணக்கான ரூபாய் சொத்திழப்பு ஏற்பட்டுள்ளதாக வர்த்தகர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

புடவைக்கடைகள், பழக்கடைகள், பல்பொருள் விற்பனை நிலையங்கள், அழகு சாதனக் கடைகள் என அனைத்து வகையான கடைகளும் வேறுபாடின்றி எரிந்து நாசமாகியுள்ளன.

தமது கடைகள் தம் கண்முண்ணே பற்றி எரிவதை கண்ட வர்த்தகர்கள் சிலர் அழுது புலம்பியும், மயங்கியும் இன்னும் சிலர் தீக்குள் பாய்ந்து சென்று தீயை அணைப்பதற்கும் முயற்சித்த சம்பவங்கள் அனைவரது நெஞ்சினையும் கனக்க வைத்தன.

கிளிநொச்சிக்கென ஒரு தீயணைப்பு படைப்பிரிவு இருந்திருந்தால் இந்தளவுக்கு அழிவு ஏற்பட்டிருக்காது என பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் வலம்புரியிடம் தெரிவித்தனர்.

மேற்படி தீயனர்த்தத்தினால் இன்றைய தினம் கிளிநொச்சி பொதுச் சந்தை திறக்கப்பட மாட்டாது என்ற அறிவித்தலையும் பொதுமக்களுக்கு வர்த்தகர்கள் விடுத்துள்ளனர்.

தீயணைப்பில் ஈடுபட்ட பொதுமக்கள் மற்றும் சில இராணுவத்தினர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்ற போதிலும் தீ அனர்த்தத்துக்கான காரணம், முழுமையான சேதவிபரம் எவையும் நேற்று இரவு வரை பெற்றுக் கொள்ள முடியவில்லை. (செ-4,312,27)



# தொலைபேசி, இணையம் மீதான வரி அதிகரிப்பினால் இளைஞர் பாதிப்பு

(கொழும்பு)

தொலைபேசி மற்றும் இணையப் பாவனைகள் மீதான வரி அதிகரிக்கப்பட்டதனால் இளைஞர் சமூகம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக சோசலிச இளைஞர் ஒன்றியம் கூறியுள்ளது.

அந்த சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் கூறப்பட்டுள்ளது.

தொலைபேசி மற்றும் இணையப் பயன்பாடானது நாட்டு மக்களின் அத்தியாவசிய தேவையாக மாறியுள்ளது என்று அந்த சங்கத்தின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் தொலைபேசி மற்றும் இணையத்தின் மீதான கட்டணத்துக்கு நூற்றுக்கு 50 வீத அளவான வரி அதிகரிப்பினால் நாட்டின் இளம் சமூகத்தினர் உட்பட பொதுமக்களும் பெரும் பாதிப்படைந்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு நாட்டு மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் இந்த அசாதாரண வரி அதிகரிப்பை உடனடியாக நீக்க வேண்டும் என்று சோசலிச இளைஞர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது. (இ-3-10)

## ஜோதிடத் தகவல்

### விசாக நட்சத்திரம் தரும் உண்மை

ஜென்ம இலக்கினத்திற்கு 9 ஆம் வீடு இளைய மைத்துனரைக் குறிக்கும். இந்த வீட்டில் பாவியர் ராகு, கேது, செவ்வாய் ஆகியன இடம்பெற்று இருந்தால் இளைய மைத்துனருக்கு ஆயுள் குறைவை ஏற்படுத்தும். குரு பகவான் கெட்டுப் போயிருந்தாலும் புதனுடன் சேர்ந்து இருந்தாலும் இளைய மைத்துனருக்கு இன்னல்கள் ஏற்படுத்தும். இவ்வாறு இல்லாமல் குரு பகவான் பலமான நிலையில் இருந்தால் இளைய மைத்துனருக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது.


After A/Ls... UGC அங்கீகாரம் கொண்ட UK Degree
பட்டப்படிப்புகளை யாழ்ப்பாணத்தில் பூர்த்தி செய்து கொள்ளும் வாய்ப்பு...
INTAKE NOW ON
edexcel PEARSON London South Bank University WOLVERHAMPTON CIOB RICS
BM Business Management
CSD Computing & Systems Development
CE Civil Engineering
QS Quantity Surveying
BMS Biomedical Science
LLB Law

BA (Hons) / BSc (Hons) / BEng (Hons) & LLB (Hons)
BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
JAFFNA 077 710 2131 077 960 3753
COLOMBO 077 283 4595
UGC Recognized TVEC Approved
18 YEARS of Trust & Excellence in Higher Education
BUILDING CAREERS - TRANSFORMING LIVES
Jaffna Campus
16, Point Pedro Road, Jaffna
ISO 9001:2008 CERTIFIED
HOTLINE : 021 2219910 Visit us on Facebook | info@bcas.lk | www.bcas.lk


## இராசி பலன்

17.09.2016
(புரட்டாதி 01, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
பிரதமை முன்னிரவு 11.24 மணிவரை
பூரட்டாதி முற்பகல் 7.22 மணிவரை
சுபநேரம் 3.03-4.33 மணிவரை
இராகுகாலம் 9.03-10.33 மணிவரை
மஹாளயபட்சாரம்பம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| சந் | கிரகநிலை சந்திராஷ்டமம் பூரம் | | |
| கேது | | | ராகு புத |
| செவ் | சனி | | குரு சூரி சுக் |

**மேடம்** — எடுத்த காரியங்களில் சில தாமதங்கள் ஏற்படலாம். மனதில் இனம்புரியாத சம்பவங்கள் தோன்றி மறையலாம், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**இடபம்** — உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கசப்பான சூழ்நிலை உருவாகும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், காரிய அனுகூலமுண்டு,

**மிதுனம்** — செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கடகம்** — ஆன்றோர்களின் சந்திப்புகள் இடம்பெறும் வாய்ப்புண்டு, சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**சிம்மம்** — எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், முயற்சிகளில் சுணக்கம் ஏற்படலாம், பிரயாண பயமுண்டு, ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி** — கற்பனை மிகுதியான நாள், எடுத்த காரியங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம்.

**துலாம்** — சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், செய்தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** — பூர்வ புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகள் பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர், எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.


**தனுசு** — நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்கள் கைகூடும்.

**மகரம்** — உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கப் பெறுவீர்கள், காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கும்பம்** — விவாதங்களை தவிர்ப்பது நல்லது, எடுத்த காரியங்களை முடிப்பதில் ஈடுபாடு காட்டுவீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**மீனம்** — பெரிய மனிதர்களின் சந்திப்பு உங்கள் தகுதியை உயர்த்தும் , மனதில் புதிய கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், முயற்சிகள் கைகூடும் நாள்.

## வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்திற்கு ஜனாதிபதி மைத்திரியால் சான்றிதழ் வழங்கல்



யாழ்.மாவட்டத்தல் கடந்த 1972 தொடக்கம் மது மற்றும் புகைத்தல் ஒழிப்பில் ஈடுபட்டு வருகின்ற வடபிரதேச நல்லொழுக்கசம்மேளனத்தின் செயலாளர் சமூகக்காவலர் செ.குமாரசிங்கவிற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் சான்றிதழ் வழங்கப்பட்டது. போதையற்ற நாடு என்னும் தொனிப்பொருளில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நிகழ்விற்கு அண்மையில் வருகை தந்த ஜனாதிபதி பல நிகழ்வுகளில் பங்குபற்றி இருந்தார். இந்நிலையில் மதுவைஒழிக்கும் நடவடிக்கையில் யாழ். மாவட்டத்தில் ஈடுபடுகின்றவட பிரதேசநல்லொழுக்க சம்மேளனத்திற்கு ஜனாதிபதி யாழ்ப்பாணத்தில் வைத்து சான்றிதழ்வழங்கிகௌரவித்தார். இ

## கலட்டி ஐக்கிய சனசமூக நிலையம் நடத்தும் பௌர்ணமி விழா இன்று

கலட்டி ஐக்கிய சனசமூக நிலையம்நடத்தும்பௌர்ணமி விழா இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும்.

நிலையத் தலைவர் சி.ஜி. திருமாலழகன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக W.C.W.O. ஆசிரியரும் முன்னாள் ரெட்பானா, சர்வோதயம், ஓகன் திட்ட இணைப்பாளருமான அ.ஜீவகன் கலந்து கொள்வார்.

கொழும்பு விவாகப் பதிவாளர் கலாபூஷணம் வதிரி சி.ரவீந்திரனின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும். (இ-3)

## இரண்டாம் நாள் வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நாரந்தனை கணேச வித்தியாலய நூற்றாண்டு விழாவின் (1916-2016) இரண்டாம் நாள் வைபவம் இன்று சனிக்கிழமைகாலை9.30மணியளவில் பண்டிதர் கணபதிப்பிள்ளை அரங்கில் இடம்பெறும். வடமாகாண மீன்பிடிபோக்குவரத்து, கிராம அபிவிருத்தி அமைச்சின்செயலாளர் சி.சத்தியசீலன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர், முன்னாள்துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம், தினக்குரல் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் இ.பிரணதார்த்திகரன், கௌரவவிருந்தினர்களான ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர். யோ. யதுநந்தனன், ஊர்காவற்றுறை கோட்டக்கல்விப் பணிப்பாளர் முகத்தியசீலன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)

## கர்நாடகாவில் தமிழர் தாக்கப்படுவதை நிறுத்தக்கோரி யாழில் உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

கர்நாடகாவில் தமிழர்கள் தாக்கப்படுவதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் நரேந்திர மோடியை வலியுறுத்தி நேற்றைய தினம்உண்ணாவிரதப்போராட்டம் ஒன்று போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் இயக்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்த உண்ணாவிரதப் போராட்டம் மருதடி லேனில் அமைந்துள்ள யாழ். இந்திய துணைத்தூதரகம் முன்பாக இடம்பெற்றது.



காவிரி ஆறு நீர்ப்பிரச்சினை காரணமாக தமிழகத்திலும் கர்நாடகாவிலும் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. இதன் காரணமாக கர்நாடாகவில் உள்ள தமிழர்கள் கர்நாடக அமைப்பினரால் கொடுமையாக தாக்கப்பட்டு வருவதும். சித்திரவதை செய்யப்பட்டு வருவதும்தொடர்ந்து கொண்டு உள்ளது.


இந்த நிலையில் குறித்த சம்பவத்தில் தமிழர்கள் தாக்கப்படுவதை உடன் நிறுத்தக் கோரியும் தமிழர்களை தாக்கியவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கக் கோரியும் மேற்படி உண்ணா விரதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. தொடர்ந்தும் தமிழர்கள் மீதான தாக்கு தலை மத்திய அரசு அனுமதிக்குமானால் கர்நாடக மாநிலத்தின் அனைத்து உற்பத்திப் பொருட்களையும் புறக்கணிப்பு செய்யுமாறு. புலம்பெயர் தமிழர்களுக்கு பிரசாரம் செய்வோம் எனவும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் இயக்கத்தின் தலைவர் வி.சகாதேவன் தெரிவித்துள்ளார். நேற்றுக் காலை எட்டு மணியளவில் ஆரம்பமாகிய இந்த உண்ணாவிரதப் போராட்டம் யாழ். இந்திய துணைத்தூதுவரிடம் மகஜர் கையளிப்பதோடு நிறைவுறும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-4)

## துர்க்கையும் பெண்களும்

சமகாலக்கலை, கட்டடக் கலை மற்றும் வடிவமைப்புக்கான ஆவணக் காப்பகத்தினால்ஒழுங்கமைக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் தொடரின் 36 ஆவது நிகழ்வு நாளை 18 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மு.ப.10 மணி முதல் நண்பகல் 12 மணிவரை இல. 199, கோவில் வீதி, நல்லூரில் அமைந்துள்ள சமகாலக் கலை, கட்டக்கலை மற்றும் வடிவமைப்புக்கான ஆவணக் காப்பகத்தில் இடம்பெறும். இந்நிகழ்வில் ''மூழ்கும்பெண்துர்க்கையும்ஏனைய பெண்களும்'' எனும் தலைப்பில் ''சாமரிதபஸ்வரகே'' உரை நிகழ்த்துவார். (இ-3)




## சமூக விஞ்ஞானப் போட்டியில் தேசிய மட்டத்திற்கு மாணவன் தெரிவு



(யாழ்ப்பாணம்)

மாகாண மட்ட சமூக விஞ்ஞானப் போட்டியில் யாழ். நடேஸ்வரக் கல்லூரி மாணவன் ஜே.சஞ்சீவன் (தரம்-11)பங்குபற்றி தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

200 இற்கு உட்பட்ட மாணவர்களைக் கொண்ட இப் பாடசாலை வகை -1 ஐச் சேர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## இலவச புலமைப்பரிசில் வழிகாட்டி நூல்களுக்கு விண்ணப்பிக்கலாம்

சக்தி கலாசார மேம்பாட்டு மன்றத்தின் தமிழ் விழா தலைவியும் ஞானோதயம் நிறுவக ஸ்தாபகருமான அமரர் செல்வநாதன் கருணாவதி (சாந்தி) யின் 31 ஆம் நாள் நினைவையொட்டி தரம் 4.5 மாணவர்களுக்கு இலவச புலமைப்பரிசில் நூல்கள் வழங்கும் நிகழ்வு நாளை இடம் பெறவுள்ளது

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு இலவச நூல்களை பெற்றுக்கொள்ள விரும்பும் அரியாலை ஆட்டோ உரிமையாளர்கள் தமது வாகன இலக்கம்.முகவரி. பிள்ளைகளின் பெயர் போன்ற விபரங்களை இன்றைய தினம் 076 865 7927 என்ற தொலைபேசி இலக்கத்துடன் அல்லது இல 159/3 நொத்தாரிஸ் வீதி அரயாலை எனும் முகவரியில் உள்ள சக்தி கலாசார மேம்பாட்டு மன்றத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (இ-9)

## புனர்வாழ்வுச் சங்கத்தின் இணையத்தள வெளியீடு

(யாழ்ப்பாணம்)

வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் இணையத்தளம் வெளியிடும் நிகழ்வு இன்று சனிக்கிழமை மு.ப 10 மணி முதல் 11.30 மணி வரை 47/2 ஆடியபாதம் வீதி திருநெல்வேலி எனும் முகவரியில் அமைந்துள்ள வலு விழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர். கே.கேதீஸ்வரன். நல்லூர் பிரதேச சபை செயலாளர் திருமதி அ.தியாகேஸ்வரி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் வீதியை விரைவாக புனரமையுங்கள்





(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆவரங்கால் சிவன் வீதியையும் சர்வோதயா சந்தியையும் இணைக்கும் வீதியில், சிவன் வீதி யின் ஒருபக்க வீதி அமைக்கும் முதற்கட்டப்பணி முடிவுற்ற நிலையில் மிகுதி வீதி அமைக்கும் பணி நிறைவு பெறவில்லை. இரண்டு மாதங்களுக்கு முன்னர் கற்கள் ஆங்காங்கே குவிக்கப்பட்டுக் காணப்பட்டன.

அண்மையில் குறித்த வீதியை புனரமைப்பிற்காக கற்கள் வீதி வழியே அடுக்கப்பட்டன.

ஆனால் இன்னும் வீதி புனரமைக்கப்படவில்லை. இதனால் இவ் வீதியால் பயணிப்போர், பாடசாலை மாணவர்கள், வயது முதிர்ந்தோர் எனப் பலர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் இவ் விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களிடம் நேரில் சென்று தெரிவித்தும் இதுவரை வீதி அமைக்கும் பணிகள் நிறைவு பெறவில்லை. எனவே விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுத்து வீதியை அமைத்து தருமாறு மக்கள்வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-3)

# உற்சவத்திற்கான ஏற்பாட்டுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய மஹோற்சவம் எதிர்வரும் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. இவ் உற்சவத்திற்கான முன்னாயத்த ஏற்பாட்டுக்கூட்டம் நாளை மறுதினம் 19ஆம் திகதி திங்கட்கிழமை வல்லிபுர ஆழ்வார் ஆலய கண்ணன் மண்டபத்தில் மு.ப 10மணிக்கு பிரதேச செயலர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் ஏற்பாட்டுக்கூட்டத்தில் சம்பந்தப்பட்ட திணைக்கள உத்தியோகத்தர்களை தவறாது கலந்து ஆலோசனைகளை வழங்கி உதவுமாறு பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த. ஜெயசீலன் அறிவித்துள்ளார். (இ-3)


## யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?

**எம்முடன் பேசுங்கள்.**

**கை கொடுக்கும் நண்பர்கள்**
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை
**021 222 8117, 077 900 8776**
வவுனியா: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)
(பி/5649)



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், வடமராட்சிப் பகுதியில் வல்வெட்டி, பழைய பொலிஸ் ஸ்ரேசன் வீதியில், வேவில் பிள்ளையார் கோவிலுக்குத் தெற்குப் புறமாக அமைந்த வீடும், வளவும் 2 பரப்பு 13 1/4 குழி (அன்னம் வளவு) உடனடியாக விற்பனைக்குண்டு.

தொடர்பு -கோபால்

(5927) T.P. No: 077 997 0130 , 077 969 8942


## "கலாவித்தகர்" பட்டமளிப்பு

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை சங்கீத சபையின் சுவிட்சர்லாந்து நாட்டின் 2011ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரை கலாவித்தகர் தேர்வில் சித்தி பெற்ற நாற்பது புலம்பெயர் நாட்டில் வாழும் மாணவ, மாணவிகளுக்கு கலாவித்தகர் பட்டமளிப்பு விழா நாளை மறுதினம் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சுவிட்சர்லாந்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்விற்கு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளரும் வட இலங்கை சங்கீத சபையின் நாற்பத்து இரண்டாவது பதவி வழித் தலைவருமான ந.தெய்வேந்திரராஜா பிரதம விருந்தினராகவும் யாழ்.பல்கலைக் கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் எஸ்.ஸ்ரீ சற்குணராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வதற்கு சுவிட்சர்லாந்து பயணமாகியுள்ளனர் என வட இலங்கைச் சங்கீத சபையின் செயலாளர் சி.சிவராஜன் அறிவித்துள்ளார். (இ-3)



அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும்

## யாழ்.கம்பன் விழா-2016

**இன்று 17.09.2016 (சனிக்கிழமை)**
**(மூன்றாம் நாள் நிகழ்வு)**

**காலை நிகழ்வு 9.30 மணி**

(கம்பன் கோட்டம், நல்லூர்)

மங்கல விளக்கேற்றல்: திரு.ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி
(ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப்பணிப்பாளர்)
கடவுள் வாழ்த்து: திரு எம்.கலைச்செல்வன்
தலைமையுரை: திரு.பொ.வாகீசன்
(ஆணையாளர்,யாழ்.மாநகரசபை)
தொடக்கவுரை : கவிஞர் சோ.பத்மநாதன்
தனியுரை: பேராசிரியர் அரங்க. இராமலிங்கம்
பொருள்:
**"தவம் செய்த தையல்"**

ஆய்வரங்கு
தலைவர்:
பேராசிரியர் அரங்க.இராமலிங்கம்
பொருள்:
**"கம்ப கடலில் சங்க முத்துக்கள்"**
"யாதும் ஊரே யாவரும் கேளீர்"
ஸ்ரீ.பிரசாந்தன்
"அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே"
இரெ.சண்முகவடிவேல்
"மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்"
இரா.ருக்மணி

**மாலை நிகழ்வு 4.30 மணி**

(ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபம், நல்லூர்)

மங்கல இசை: திரு.பி.எஸ்.பாலமுருகன் குழுவினர்
மங்கல விளக்கேற்றல்: திரு.எஸ்.பி.சாமி தம்பதியர்
(நிறுவுநர் ,தினக்குரல்)
கடவுள் வாழ்த்து: திரு.ம.தயாபரன்
தலைமையுரை: டாக்டர் ரீ.சத்தியமூர்த்தி
(பணிப்பாளர் ,யாழ்.போதனா வைத்தியசாலை)
தொடக்கவுரை : திரு.இ.இளங்கோவன்
(ஆளுநரின் செயலாளர் , வடமாகாணம்)

"உரை அரங்கு'
தலைவர்:
கலாநிதி ஆறு.திருமுருகன்
பொருள்:
**"கற்போர்க்குக் கம்பன் கவிதை..."**
விருந்து! – அரங்க. இராமலிங்கம்
மருந்து! – இரா.ருக்மணி

**இன்று சந்திக்கும் இவர்கள்**

| | |
|---|---|
| வான்மீகியாக – | இரெ.சண்முகவடிவேல் |
| கம்பராக – | இ.ஜெயராஜ் |
| சீடர்களாக – | அ.வாசுதேவா, செ.மதுரகன் |
| இராமனாக – | செ.சொபிசன் |
| கும்பர்கர்ணனாக – | லோ.பிரசன்னவருண் |
| வாலியாக – | ச.மார்க்கண்டு |
| கூனியாக – | எம்.எஸ்.ஸ்ரீதயாளன் |
| தசரதனாக – | இரா.செல்வடிவேல் |
| இராவணனாக – | த.சிவகுமாரன் |

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் (இ)

# பாராட்டு விழா



நீர்வேலி தெற்கு சமூகசேவகி இளைப்பாறிய
கூட்டுறவுப் பரிசோதகர்
**திருமதி ருக்மணி ஆனந்தவேல்** அவர்களின்
72 ஆவது அகவை நிறைவையொட்டி
அவரது பலதரப்பட்ட சேவைகளையும் பாராட்டும்
**பாராட்டு விழா**

காலம்:-18.09.2016 ஞாயிறு பி.ப.2.30 மணி
இடம்:-நீர்வேலி தெற்கு மாதர்சங்க மண்டபம்
தலைமை:- திரு.குணநாதன்
(தலைவர் நலன்புரிச் சங்கம்-UK நீர்வேலி கிளை)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(5928)

நீர்வேலி நலன்புரிச்சங்கம்-லண்டன்
நீர்வேலி நலன்புரிச்சங்கம்- UK நீர்வேலி கிளை
நீர்வேலி ஸ்ரீமுருகன் மாதர் சிக்கன கடன்வழங்கு கூட்டுறவு சங்கம்.

## யாழ்ப்பாணம் மாநகர சபை
## பாலர் பகல் பராமரிப்பு நிலையம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குரிய பாலர் பகல் பராமரிப்பு நிலையமானது இலக்கம்-77, சங்கிலியன் வீதி, நல்லூர் எனும் முகவரியில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்நிலையத்தில் காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை கட்டணத்துடனான பராமரிப்பு சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும். இப்பராமரிப்பு நிலையத்தில் தங்கள் சிறார்களை (1 1/2 வயது முதல் 5 வயது வரை) இணைத்துக்கொள்ள விரும்புவோர் அனுமதிக்கான விண்ணப்பத்தை 2016.09.20ஆம் திகதி முதல் யாழ்.மாநகர சபையின் பொதுசன தொடர்புப் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.

ஆணையாளர், மாநகரசபை ,யாழ்ப்பாணம். (சி/5781)


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா:50செவ் 1 இல்<br>உயரம்: 5'5''<br>தகைமை/தொழில்:O/L ஜேர்மன் NOT PR<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/6119 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 20செவ் 2 இல்<br>தகைமை/தொழில்:BBA/ அரச தொழில்<br>தொ.இ: G/6128 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 50செவ் 4 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/6123 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 95 சூரிசெவ் 1 இல்<br>தகைமை/தொழில்:BSc/ பொறியியலாளர்<br>தொ.இ: G/6130 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 42<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:ITலண்டன் PR<br>தொ.இ: B/6124 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 56சூரிசெவ் 7 இல்<br>உயரம்: 161cm<br>தகைமை/தொழில்:BA<br>தொ.இ: G/6132 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 24<br>உயரம்: 169cm<br>தகைமை/தொழில்:BA/ அரசதொழில்<br>தொ.இ: B/6125 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 24<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:BSc/உதவி விரிவுரையாளர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/6134 |

# கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005,021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

# நீதிமன்ற அபராதங்கள்

கிளிநொச்சி பகுதியில் நான்கு ஆமைகளை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் நபர் ஒருவருக்கு 30 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் ஆமைகளை பாதுகாப்பாக நீர்நிலைகளில் விடுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பகுதியில் நான்கு ஆமைகளை கொண்டு சென்ற ஒருவரை கைது செய்த கிளிநொச்சிப் பொலிஸார் குறித்த நபரை கடந்த 14 ஆம்திகதிபிற்பகல்கிளிநொச்சிமாவட்ட நீத வான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியதையடுத்து 30 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் நான்கு ஆமைகளையும் பாதுகாப்பாக நீர் நிலைகளில் விடுமாறும் கிளிநொச்சி மாவட்ட நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா உத்தரவிட்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

கிளிநொச்சி பகுதியில் கஞ்சா வைத்திருந்த ஒருவருக்கு ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி பகுதியில் ஆயிரத்து 200 மில்லி கிராம் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த ஒருவரை கைது செய்த கிளிநொச்சிப் பொலிஸார் குறித்த நபரை கடந்த 14 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

கிளிநொச்சிப் பளைப்பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி அரச சீல் சாராயம் விற்பனை செய்த மற்றும் உடைமையில் வைத்திருந்த இரண்டு பேருக்கு அறுபதாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் இருபது நாட்கள் சமூக சேவையில் ஈடுபடுமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி அரச சீல் சாராயத்தை பணத்திற்கு விற்பனை செய்த மற்றும் 175 மில்லிலீற்றர் கொண்ட 150 போத்தல்களை உடைமையில் வைத்திருந்த ஒருவரைக் கைது செய்த பளைப் பொலிஸார் குறித்த நபரை கடந்த 14 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த குற்றவாளிக்கு 40 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் சமுதாயம் சார் சீர்திருத்த கட்டளைச்சட்டத்தின் கீழ் இருபது நாட்கள் சமுக சேவையில் ஈடுபடுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேபோன்று பளைப்பகுதியில் 175 மில்லிலீற்றர் அளவுகொண்ட பதினொரு போத்தல்களை உடைமையில் வைத்திருந்த மற்றும் விற்பனை செய்த ஒருவருக்கு இருபதாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு குறித்த இருவருக்கும் மொத்தம் அறுபதாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் 20 நாட்கள் சமூகசேவையில் ஈடுபடுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

கிளிநொச்சி பளைப்பகுதியில் சுமார் நான்கு இலட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரக்குற்றிகளை சட்டவிரோதமாக கொண்டு சென்றவருக்கு ஒரு இலட்சம் ரூபா தண்டப்பணமும் ஒருமாதகால கட்டாய சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பளைப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் லொறி ஒன்றில் சுமார் நான்கு இலட்சம் ரூபா பெறுமதியான முதிரைமரக்குற்றிகளைக் கொண்டுசென்ற ஒருவரை கடந்த 30ஆம்திகதி கைது செய்து மறுநாள் 31ஆம்திகதி குறித்த குற்றச்சாட்டுடன் தொடர்புபட்ட சந்தேக நபரை கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியதையடுத்து கடந்த 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த குற்றச்சாட்டுடன் தொடர்புபட்ட சந்தேகநபரை கடந்த 14 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையுடுத்து குறித்த குற்ற வாளிக்கு ஒரு இலட்சம் ரூபா தண்டப்பணமும் ஒரு மாத கால கட்டாய சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது. (2-15)



முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பனிக்கன் குளம் கிராம சேவையாளர் 100 நாள் வேலைத் திட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சனசமூக நிலையக் கட்டடம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

பனிக்கன்குளம் கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் தவசீலன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான திருமதி சாந்தி சிறீஸ்கந்தராசா மற்றும் சாள்ஸ் நிர்மலநாதன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான க.சிவநேசன், கமலேஸ்வரன் மற்றும் பல அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.

# விவசாயிகளுக்கான மானிய உர விநியோகத்திட்ட கலந்துரையாடல்

## கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் இன்று

(கிளிநொச்சி -01)

கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வருட கால போக நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கான மானிய உர விநியோகத்திட்டம் தொடர்பான முக்கிய கலந்துரையாடல் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தலைமையில் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.





இக் கலந்துரையாடலின் போது கடந்த கால யுத்தத்தையடுத்து காணி ஆவணங்களை விவசாயிகள் அது சார்ந்த திணைக்களங்கள் ஆகியவை இடம்பெயர்வு காரணமாக இழந்த நிலையை அடுத்து அரசினால் முன்னெடுக்கப்படும் மானிய உரத்திட்டத்தினை எவ்வாறு மேற்கொள்வது என்பது தொடர்பான முக்கிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

எனவே இக்கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகளை தவறாது கலந்து கொள்ளுமாறு இரணைமடு கமக்கார அமைப்புக்களின் சம்மேளனத்தினால் கேட்டுக் கொள்ளப்படுகின்றது. (2-15)

# ரயர் வெடித்ததில்

## மண் அகழ்வு இயந்திரம் ஏற்றிய வாகனம் பள்ளத்தினுள் கவிழ்ந்தது



(மல்லாவி)

மாங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வன்னிவிளாங்குளம் துயிலும் இல்லம் சந்திக்கு அண்மையாகவுள்ள வீதியில் மண் அகழ்வு இயந்திரம் ஒன்றை ஏற்றிப் பயணித்துக்கொண்டிருந்த வாகனத்தின் சில்லின் ரயர் திடீரென வெடித்தது. இதனை அடுத்து சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த வாகனம் அருகிலிருந்த பள்ளத்தினுள் வீழ்ந்ததுடன் ஏற்றிச் செல்லப்பட்ட மண்அகழ்வு இயந்திரமும் வீதியின் குறுக்கே வீழ்ந்து பலத்த சேதமடைந்த சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 6மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மல்லாவியிலிருந்து மாங்குளம் நோக்கி வாகனம் ஒன்றில் மண் அகழ்வு இயந்திரம் ஒன்று ஏற்றிப் பயணித்துக் கொண்டிருந்த வேளை வன்னிவிளாங்குளம் துயிலும் இல்லம் சந்திக்கு அண்மையாக உள்ள வீதி வளைவில் வாகனம் திரும்ப முற்பட்டவேளை வாகனத்தின் ரயர் வெடித்தது.

இதனையடுத்து சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த வாகனம் வீதியின் அருகிலிருந்த பள்ளத்தினுள் வீழ்ந்தது.

இதனையடுத்து மண் அகழ்வு இயந்திரம் வீதியின் குறுக்கே வீழ்ந்து பலத்த சேதமடைந்துள்ளது.

இச்சம்பவத்தின் போது சாரதி காயங்கள் எதுவுமின்றி மயிரிழையில் உயிர்தப்பினார்.

தகவலறிந்த மாங்குளம் பொலிஸார் அவ்விடத்திற்கு விரைந்து சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். (2-15)

# நீதிமன்ற அபராதங்கள்

கிளிநொச்சி நாச்சிக்குடா பகுதியில் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புபட்ட மூவரையும் எதிர்வரும் 22ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறும் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி நாச்சிக்குடாப்பகுதியில் திருட்டுச்சம்பவம் ஒன்றுடன் தொடர்புபட்ட மூன்றுபேரை கடந்த 13ஆம் திகதி கைது செய்த நாச்சிக்குடா பொலிஸார் குறித்த மூவரையும் சான்றுப்பொருளையும் கடந்த 14ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த மூவரையும் எதிர்வரும் 22ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

கிளிநொச்சி. பளை ஆகிய பகுதிகளில் அனுமதிப்பத்திரமின்றியும் அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறியும் மணல் ஏற்றிய எட்டுப்பேருக்கு சுமார் நான்கு இலட்சம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் மணல் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி . பளை ஆகிய பகுதிகளில் அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறி உழவு இயந்திரங்களில் மணல் ஏற்றிய நான்கு பேர் கைது செய்யப்பட்டு கடந்த 14ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த நான்கு பேருக்கும் தலா 25 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் மணல் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப்பளைப்பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி டிப்பர் வாகனத்தில் மணல் ஏற்றியவருக்கு ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் மணல் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் ஏழு நாட்கள் சமூக சேவையில் ஈடுபடுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. ஏற்கனவே நீதிமன்றினால் தண்டிக்கப்பட்டு மீண்டும் பளைப்பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய ஒருவருக்கு அறுபதாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் 14 நாட்கள் சமூக சேவையில் ஈடுபடுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேபோன்று அனுமதிப்பத்திரமின்றி டிப்பர் வாகனத்தில் மணல் கொண்டு சென்றவருக்கு ஐம்பதாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் ஏழு நாட்கள் சமூக சேவையில் ஈடுபடுமாறும் உத்தரவிடப்பட்டதுடன் மணல் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப் பகுதியில் இலக்கத்தகடு எதுவும் இல்லாது உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிய ஒருவருக்கு எழுபதாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் மணல் பறிமுதல் செய்யப்பட்டு ஏழு நாட்கள் சமூகசேவையில் ஈடுபடுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அனுமதிப்பத்திரமின்றியும் அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறியும் மணல் ஏற்றிய எட்டுப்பேரை கடந்த 11.12.13 ஆகிய தினங்களில் பளை மற்றும் கிளிநொச்சி பொலிஸார் கைதுசெய்து கடந்த 14ஆம் திகதி பிற்பகல் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து மணல் பறிமுதல் செய்யப்பட்டதுடன் நான்கு இலட்சம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் சமுதாயம் சார் சீர்திருத்த கட்டளைச் சட்டத்தின் கீழ் சமூகப்பணிகளில் ஈடுபடுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. (2-15)




ஜப்பான் அரசின் நிதியுதவியுடன் திருவையாறு கிராமத்தில் தூயவன் முன்பள்ளி கட்டடத்திறப்பு விழா நேற்று காலை 9 மணியளவில் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் க.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும். பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் நாடாவை வெட்டி கட்டடத்தைத் திறந்து வைத்தார். இதன்போது முதியோர் கௌரவிப்பும் இடம்பெற்றது.

(படங்கள்- திருவையாறு செய்தியாளர்)

# வ.மாகாண அவசர அம்புலன்ஸ் சேவையை சர்வதேசத் தரத்திற்கு உயர்த்த நடவடிக்கை

வடக்கு மாகாணத்தில் கடந்த ஜனவரி மாதம் முதல் சுகாதார திணைக்களத்தால் அவசர அம்புலன்ஸ் சேவையொன்று நடத்தப்பட்டு வருகின்றது. இச்சேவையின் கீழ் வடக்குமாகாணத்தில் எப்பிரதேசத்திலும் 24 மணி நேரமும் விபத்துக்களின் போதும் அவசர மருத்துவ நிலைகளின் போதும் வைத்தியசாலைக்கு செல்வதற்கு அவசர அம்புலன்ஸ் சேவையை இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும்.

இத்திட்டத்தின் கீழ் 100 வைத்தியசாலைகளைச் சேர்ந்த அம்புலன்ஸ் வண்டிகள் தற்போது இணைக்கப்பட்டுள்ளன. இத்னை சர்வதேச தரத்திற்கு உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சரின் ஊடகப்பிரிவினால் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்கு மாகாண சுகாதார திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இலவச அம்புலன்ஸ் சேவையை மேலும் தரமுயர்த்த லண்டன் அம்புலன்ஸ் சேவையின் உதவி கோரப்பட்டது. இதற்கமைவாக இச்சேவையை மேலும் வினைத்திறனுடைய சேவையாக மாற்றும் நோக்குடன் இச்சேவையில் ஈடுபடும் அம்புலன்ஸ் சாரதிகளுக்கும் உதவியாளர்களுக்கும் உயிர்காப்பு முதலுதவி சம்பந்தமான பயிற்சிகளை வழங்க தீர்மானிக்கப்பட்டது. இதன் முதல் கட்டமாக ஐக்கிய இராச்சியத்தின் லண்டன் அம்புலன்ஸ் சேவையைச் சேர்ந்த இரண்டு வளவாளர்கள் வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 12 வைத்திய அதிகாரிகளுக்கு கடந்த மாதம் 29 ஆம் திகதி முதல் ஒருவார கால பயிற்சியை வழங்கினார்கள்.

அடுத்த கட்டமாக பயிற்சியை நிறைவு செய்த வைத்திய அதிகாரிகளினால் கடந்த 5 ஆம் திகதி முதல் ஒரு வாரகாலத்திற்கு தெரிவு செய்யப்பட்ட முதல் தொகுதி அம்புலன்ஸ் சாரதிகளுக்கும் உதவியாளர்களுக்கும் பயிற்சி வழங்கப்பட்டது. மேலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் சகல அம்புலன்ஸ் சாரதிகளுக்கும் உதவியாளர்களுக்கும் இப்பயிற்சி வழங்கப்படும்.

இச்சேவை பற்றிய விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் நோக்குடன் வடக்கு மாகாணம் முழுவதும் விளம்பர பதாதைகளை அமைப்பதற்கும் மேற்படி நிறுவனம் நிதி உதவியை வழங்கியிருந்தது என அந்த செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(2-250)




# இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலய வி.மைதானம் தொடர்பான கலந்துரையாடல்



(குருமன்காடு)

வவு/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தன் விளையாட்டு மைதானம் விடுவிப்பது தொடர்பான கலந்துரையாடலொன்று நேறறு முன்தினம் முறபகல் 10 மணியளவில் வவுனியா மாவட்ட செயலகத்தில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கே.கே. மஸ்தான் மற்றும் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் றோகண புஸ்பகுமார ஆகியோருக்கிடையில் விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் இலங்கை விமானப்படை ஆக்கிரமித்து வைத்திருக்கும் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தை பாடசாலை சமூகத்தினரிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியின் செயலாளரிடம் கே.கே. மஸ்தானால் கோரிக்கை வைத்ததற்கு அமைவாக பாடசாலைக்கு சொந்தமான அக்காணியை கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள அதேநேரம பாடசாலை மைதானத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதாக வன்னிபாராளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸதான் தெரிவித்தார். (2-250)

# இராணுவப் பயிற்சி முகாம்களை குடியிருப்புக்களற்ற பிரதேசங்களுக்கு இடமாற்றம் செய்ய வேண்டும்

## ஜனாதிபதிக்கு சிவசக்தி ஆனந்தன் எம்.பி.கடிதம்

(கொழும்பு)

மக்கள் குடியிருப்புக்கள் மத்தியில் அமைந்துள்ள ராணுவ பயிற்சி முகாம்களை குடியிருப்புக்களற்ற பிரதேசத்திற்கு மாற்ற வேண்டும் என தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரியுள்ளார்.

அவர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் இவ்வாறான இராணுவ பயிற்சி முகாம்கள் இருப்பதாக குறிப்பிட்டுள்ள சிவசக்தி ஆனந்தன், பயிற்சியின் போது நடத்தப்படும் துப்பாக்கிப் பிரயோகம், குண்டுத் தாக்குதல் ஆகியவற்றால் அந்த பயிற்சி முகாம்களின் அயலில் உள்ள மக்கள் உடல் உள ரீதியான பாதிப்புக்கு உள்ளாகியிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இத்தகைய இராணுவ பயிற்சி முகாம்களை மக்கள் குடியிருப்புப் பிரதேசங்களில் இருந்து குடியிருப்புக்களற்ற பகுதிகளுக்கு அகற்றுமாறு கடிதம் ஒன்றின் மூலம் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

மன்னார் மாவட்டம் சன்னார் என்ற இடத்தில் மக்கள் குடியிருப்புக்கு அருகில் அமைந்துள்ள இராணுவ பயிற்சி முகாமில் இருந்து எழுகின்ற குண்டுச் சத்தங்கள் மற்றும் நில அதிர்வு காரணமாக, மக்கள் பெரும் அச்சத்திற்கு உள்ளாகியிருப்பதாக புதிய அரசியலமைப்பு தொடர்பான மக்கள் கருத்தறியும் அமர்வொன்றின்போது அப்பகுதி பிரதிநிதி ஒருவர் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தார்.

இராணுவப் பயிற்சியின் போது எழுகின்ற குண்டுச் சத்தங்கள் காரணமாக வயதானவர்கள், நோயாளிகள், குழந்தைகள் என பலரும் அச்சமடைந்து அடங்கி ஒடுங்குவதாகவும், அச்சம் காரணமாக கர்ப்பிணிப் பெண்களுக்கு கர்ப்பம் கலைய நேர்ந்ததாகவும் அந்த அமர்வின் போது சுட்டிக்காட்டப்பட்டது.

இதேபோன்று வவுனியா மாவட்டத்தின் செட்டிகுளம் மற்றும் வவுனியா சாந்த சோலை ஆகிய பகுதிகளில் குடிமனைகளுக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ பயிற்சி முகாம்கள் காரணமாக அந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் பாதிக்கப்பட்டிருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, இந்த இராணுவ பயிற்சி முகாம்களை மக்கள் குடியிருப்புப் பிரதேசங்களில் இருந்து காட்டுப்பகுதிக்கு இடமாற்றம் செய்ய வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பி னர் சிவசக்தி ஆனந்தன் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் கோரியுள்ளார். (2-250-281)

# வசதியுடனான பொதுநூலகத்தை அமைத்துத் தருமாறு கோரிக்கை

(மல்லாவி)

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட மாங்குளம் நகரத்தை அண்டிய 11 கிராமங்களில் மக்கள் மீள்குடியேறி 7வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் பொதுநூலக வசதியோ அல்லது பொதுநோக்கு மண்டபங்களில் தினசரி பத்திரிகைகள் வாசிப்பதற்குரிய வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்தி கொடுக்கப்படாமையால் தமக்குரிய அறிவுத்தேடல்களை பெற முடியாதுள்ளதாக பாடசாலை மாணவர்கள், பிரதேச மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட மு/மாங்குளம் மகா வித்தியாலயம் , மு/சண்முகரட்ணம் ஆரம்ப வித்தியாலயம், மு/திருமுறிகண்டி இந்து தமிழ் வித்தியாலயம்,மு/பனிக்கன்குளம் அ.த.க.பாடசாலை,மு/கரிப்பட்டமுறிப்பு அ.த.க. பாடசாலை,ஒலுமடு தமிழ் கலவன் பாடசாலை, மு/பெரிய புளியங்குளம் அ.த.க. பாடசாலை, மு/அம்பகாமம் அ.த.க. பாடசாலை,மு/புளுமச்சிநாதகுளம் அ.த.க.பாடசாலை ஆகிய 9 பாடசாலைகளில் சுமார் 2 ஆயிரத்து 500 மாணவர்கள் கல்வி பயின்றுவரும் நிலையில் அநேகமான பாடசாலைகளில் நூலக வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை.

நூலக வசதி ஏற்படுத்தப்படாத பாடசாலை மாணவர்கள் தமது கற்றலுக்குரிய அறிவுத்தேடல்களை பொது நூலக வசதிகளைப் பயன்படுத்திக்கூட பெற முடியாத அவலநிலை காணப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதேபோல் மாங்குளம் நகரத்தை அண்டிய பகுதிகளில் உள்ள 11 கிராமங்களில் சுமார் 2ஆயிரத்து 500 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றன.

இக்கிராமங்களிலும் பொதுமக்கள் தினசரி பத்திரிகைகளை கூட வாசிக்க முடியாத அவல நிலை காணப்படுகின்றது.

இடப்பெயர்வின் பின் மக்கள் மீள்குடியேறியபோது மாங்குளம் நகரத்தில் 2மாடிகளைக் கொண்ட நவீன வசதிகளை உள்ளடக்கியதாக பொது நூலகம் ஒன்று அமைத்து தரப்படும் என புதுக்குடியிருப்பு பிரதேச சபையினால் கடந்த 2011 ஆம் ஆண்டிலிருந்து வாக்குறுதிகள் வழங்கப்பட்டு வருகின்ற போதிலும் இன்றுவரை நிறைவேற்றப்படாத நிலையில் காணப்படுகின்றது.

எனவே புதுக்குடியிருப்பு பிரதேச சபையினர் இதனை கவனத்திலெடுத்து நவீன வசதிகளைக் கொண்ட பொது நூலகம் ஒன்றை மாங்குளம் நகர பகுதியில் அமைத்து தர வேண்டும் எனவும் கிராமங்கள்தோறும் குறைந்தது பொது நோக்கு மண்டபங்களில் தினசரி பத்திரிகைகளை பார்வையிடுவதற்குரிய வசதிகளை யாவது ஏற்படுத்தித்தர வேண்டும் என பாதிக்கப்பட்ட கிராமங்களில் பொதுமக்கள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (2-15)

# கிராமத்தின் ஊடாக பயணிப்பதற்கு வழித்தடம் வழங்கப்பட்டும் பேருந்துகள் செல்வதில்லை

## பொதுமக்கள், மாணவர்கள் வீதியில் போராட்டம்



வவுனியா ஆச்சிபுரம் கிராமத்தில் பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் ஆகியோர் பேருந்தை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது கிராமத்திற்கூடாக பேருந்துகள் பயணிப்பதால் வழித்தடம் இருந்தும் பேருந்துகள் தமது கிராமத்தினூடாக செல்லாமையினால் இப்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த சில நாட்களாக பேருந்துகள் கோவில்குளம் சிதம்பரபுரம் பிரதான வீதியினூடாக பயணிப்பதால் ஆச்சிபுரம் கிராமத்தில் வசிக்கும் சுமார் 400 குடும்பங்கள் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருவதுடன் பாடசாலை மாணவர்களும் பல கிலோமீற்றர் தூரம் நடந்தே பாடசாலைக்கு செல்ல வேணடியும் உள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந் நிலையில் நேற்று முன்தினம் பேருந்தொன்று பல கீலோமீற்றருக்கு அப்பால் பாடசாலை மாணவர்களை இறக்கி விட்டு சென்றுள்ளதுடன் அன்றைய தினம் காலை கிராமத்தனூடாக தனது பயணத்தை மேற்கொண்ட சமயமே அப்பகுதி மக்களால் பேருந்து வழி மறிக்கப்பட்டு போராட்டம் நடத்தப்பட்டது.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் பொது மக்களுடன் கலந்துரையாடியிருந்ததுடன் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் உள்ளிட்ட பிரதிநிதிகளும் சம்பவ இடத்திற்கு வருகைதந்து மக்களுடன் கலந்துரையாடியிருந்தனர்.


இதன் பிரகாரம் பேருந்தை பாடசாலை நேரங்களில் சேவையில் ஈடுபடுத்த முடியும் என்பதுடன் பாதை சீரின்மை மற்றும் ஆட்டோக்கள் பேருந்தின் கட்டணத்திற்கே பலரை ஏற்றி சேவையில் ஈடுபடுவதனால் தமக்கு வருமானம் போதாதுள்ளதாகவும் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

இதேவேளை பொதுமக்களால் பொலிஸ் நிலையத்தல் முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது.(2-250)



வடமராட்சி 1991 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தர மாணவர்களால் வெள்ளி விழா நிகழ்வும் ஆசிரியர் கௌரவிப்பும் அண்மையில் கரணவாய் மூத்த விநாயகர் கோவில் மண்டபத்தில் நடைபெற்றபோது...

# முடிந்தால் தேர்தலை நடத்துமாறு அரசிற்கு மகிந்த ராஜபக்ஷ சவால்



முடிந்தால் தேர்தலொன்றை நடத்துமாறு மைத்திரி - ரணில் அரசாங்கத்திற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சவால் விடுத்துள்ளார். தற்போதைய அரசாங்கத்தின் தூரநோக்கற்ற நடவடிக்கைகளால் பாரிய பாதுகாப்பு ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் நெருக்கடிகளுக்குள் தள்ளப்பட்டு ஸ்திரமற்ற நிலை ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள அவர் இதனால் மக்கள் தற்போதைய அரசாங்கத்தின் மீது கடும் அதிருப்தி அடைந்துள்ளதாகவும் குற்றம்சாட்டியுள்ளார்.

இதனாலேயே அரசாங்கம் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை காலவரையறையின்றி ஒத்திவைத்துள்ளதாகவும் மகிந்த தெரிவித்துள்ளார். "கூட்டு எதிர்க்கட்சியினருக்கு மக்கள் ஆதரவு இல்லை என்றும் அதனாலேயே கூட்டு எதிர்க்கட்சியினரான நாம் இன்னமும் வாகனங்களில் மக்களை ஏற்றிச்சென்று கூட்டங்களை நடத்துவதாகவும் அரசாங்கத்தில் உள்ளவர்கள் எம்மீது குற்றம்சாட்டுகின்றனர். மக்கள் செல்வாக்கு யாருக்கு இருக்கின்றது என்பதை தெரிந்து கொள்ளவேண்டுமானால் முதலில் அரசாங்கம் தேர்தலொன்றை நடத்தவேண்டும். அதனை விடுத்து கூட்டு எதிர்க் கட்சியினருக்கு மக்கள் ஆதரவு இல்லை. கட்சிக்கே ஆதரவு இருக்கின்றது என்று தாங்களாகவே தீர்மானத்திற்கு வரக்கூடாது. முடிந்தால் தேர்தலை நடத்துங்கள். அதற்குப் பின்னர் தெரியும் யாருக்கு மக்கள் செல்வாக்கு இருக்கின்றது என்று. ஆனால் கூட்டு எதிர்க் கட்சியினருக்கு இந்த அரசாங்கம் அஞ்சுகின்றது. அதனால் தான் தேர்தல்களை நடத்தாது ஒத்திவைத்து வருகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-3-10)

## நிறுவுநர் நாளும் பரிசளிப்பு விழாவும்

யாழ். நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் நிறுவுநர் நாளும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 22 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


பாடசாலை அதிபர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக புளொட் அமைப்பின் தலைவர் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன். சிறப்பு விருந்தினர்களாக யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அருணாசலம் அகிலதாஸ், லண்டன் பழைய மாணவர் சங்க உறுப்பினர் திருமதி. பாலசவுந்தரி சிவகுமார், ஓய்வுநிலை இலங்கை வங்கியின் வங்கியாளர் பழைய மாணவர் ஆறுமுகம் இராசநாயகம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதுடன் நிறுவுநர் நினைவுப் பேருரையினை ஓய்வுநிலை ஆங்கில ஆசானும் பழைய மாணவருமான தம்பு நமசிவாயம் பஞ்சாட்சரம் நிகழ்த்தவுள்ளார். (இ-3)

## மகிழ்ச்சியான குடும்பத்தை கட்டியெழுப்புதல்



வாழ்வின் எழுச்சி சமூக அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் மகிழ்ச்சியான குடும்பத்தினைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டம் அண்மையில் நெடுந்தீவு பிரதேச செயலக மண்டபத்தில் சமுர்த்தி முகாமையாளர் கியூமன் தலைமையில் நடைபெற்றபோது...

# மணிவிழா வாழ்த்து



### கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரியின்
### விஞ்ஞான பாட ஆசான்
### திரு.அம்பலவாணர்-சிவஞானசுந்தரம்

**சேவை விபரம்**

15.03.1990-30.01.1998- மு/ திருமுறிகண்டி இந்து வித்தியாலயம்
01.02.1998-31.08.2000- கிளி/அக்கராயன் மகா வித்தியாலயம்
01.09.2000-17.01.2005- கிளி/ புதுமுறிப்பு விக்னேஸ்வரா மகா வித்தியாலயம் (பதில் அதிபர்)
18.01.2005-30.07.2010 - கிளி/ கோணாவில் மகா வித்தியாலயம்
01.08.2010-08.01.2012- கிளி/ சிவநகர் அ.த.க.பாடசாலை
09.01.2012- 16.09.2016- கிளி/ கிளிநொச்சி இந்துக் கல்லூரி (வகுதித்தலைவர்)

செயலாளர்- கிளிநொச்சி திருநெறிக்கழகம்
செயலாளர்- உருத்திரபுரீஸ்வரர் சிவாலயம்
செயலாளர்- சமாதானத்திற்கான சர்வமத ஒன்றியம் (கிளிநொச்சி)

**எமது கல்லூரியில் விஞ்ஞானபாட ஆசிரியராகவும் வகுதித்தலைவராகவும் கடமையாற்றி 16.09.2016 அன்று ஓய்வு பெறும் திரு.அம்பலவாணர் சிவஞானசுந்தரம் அவர்கள் தனது ஓய்வுக்காலத்தில் சீரும், சிறப்புமாக வாழ்ந்து எமது கல்லூரிக்கும் எமது மாவட்டத்திற்கும் கல்வி, சமய, சமூகப் பணிகளை ஆற்ற வேண்டும் என வாழ்த்துகின்றோம்.**

**17.09.2016 இன்று சனிக்கிழமை எமது கல்லூரியில் நடைபெறும் மணிவிழா நிகழ்வுகளிலும் ஞானதீபம் மலர் வெளியீட்டு நிகழ்விலும் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

(சி-5785)

வாழ்த்துவோர்:
**கல்லூரிச் சமூகம்,**
**கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி.**

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—88

## நுண்ணீர்ப்பாசன தொழில்நுட்பம் -காலத்தின் தேவை



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

நீரின்றி இவ்வுலகமேது! நாம் வாழும் பூமியின் 71 சதவீதமான மேற்பகுதி நீரினால் சூழப்பட்டது. இதில் 96.5 சதவீதம் கடல்நீரினாலானது. நீராவியாக வானிலும் நீராக ஆறுகளிலும் குளங்களிலும் பனிக்கட்டியாகவும் பூமியில் காணப்படுகின்றது. இந்நீரானது ஓரிடத்தில் நீண்ட காலத்திற்கு நிலையாக நிற்பதில்லை. அது நீர்வட்டம் என்னும் சுழற்சியில் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு சுழன்று கொண்டேயிருக்கின றது. பூமியின் மேற்பரப்பிலுள்ள நீரின் 96 சதவீதம் உவர்நீராக கடலில் காணப்படுகின்றது. மிகுதி நீர்தான் நாம் எமது தேவைக்கு பயன்படுத்தக்கூடியதாக இருக்கின்றது. அதிலும் நிலத்தடி நீர் என்பது வடபகுதியைப் பொறுத்த வரையில் முக்கியமானது. தென்பகுதியைப் போல வடபகுதியில் மலைகளும் அருவிகளும் இல்லாத காரணத்தினாலும் இலங்கையின் மூன்றின் இரண்டு பகுதி வரண்ட வலயமாக உள்ளதாலும் இங்கே உள்ள ஆறுகள் குளங்களிலுள்ள நீரும் நிலத்தடி நீரும் தான் அனைத்து தேவைகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றன. ஆக மொத்தத்தில் எமது தேவைக்காக கிடைக்கக்கூடிய நீரினிளவு சொற்பமே. அதனை நாம் வினைத்திறனாக பயன்படுத்த முயலவேண்டும்.

எமது வாழ்வுக்கான அடிப்படைத் தேவையாக உள்ள நீரே பல உயிர்களைக் உடைமைகளுக்கும் உயிர்களுக்கும் உலை வைக்கும் கர்நாடக தமிழ் நாட்டு கலவரமாகினும் சரி இந்த பொதுச் சொத்தை பயன்படுத்துவதற்கு உரிமை கோருவதிலேயே முடிவடைந்திருக்கின்றது. இயற்கை வளத்தை பொதுச் சொத்தாகிய நீரை எமது என உரிமை கொள்ள எவருக்கும் உரிமையில்லை. வரும் போது கொண்டு வந்ததுமில்லை, பின்னர் போகும் போது கொண்டு செல்வதுமில்லை . இடையில் கம்பீரமான உரிமை கோரல்கள் இருக்கும் போதும் இவ்வுடலை விட்டு போகும் போது ஒரு சொட்டு நீர்விட்டு ஆன்மாவை வெளியேற்றுவதிலும் சரி நீரின் மகத்துவம் எவருக்கும் புரிவதில்லை.

ஆக மொத்தத்தில் எமக்கு பயன்படுத்த கிடைக்கும் நீரை பாதுகாக்கும் அதேவேளையில் அதனைச் சிக்கனமாகவும் பயன்படுத்த நாம் முயல வேண்டும். அள்ள அள்ள செயலை என்னவென்பது.

நீர்அறுவடை (water harvest) என்பது இங்கே அவசியம் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியதாகும். மழையினால் கிடைக்கின்ற நீரினை நாம் சேமித்து வைப்பதற்கான வழிவகைகளை கண்டறிய வேண்டும். சீர்செய்யப்பட்ட குளங்களில் அதிகளவான நீர் சேமித்து வைக்கப்படல் முக்கியமானதாகும். அந்த நீர் இங்குள்ள கிணறுகளிலுள்ள நீர்மட்டம் குறைவடையாதிருக்க வைத்திருக்கும். சேமிக்கும் பழக்கம் முந்தையவர்களிடமிருந்தது. இப்போது அதனை கேட்கத்தான் முடிகிறதே தவிர பார்க்க முடியவில்லை. முன்பு ஆண்ட மன்னர்கள் திட்டங்களைத் தீட்டி முன்னோக்கி யோசித்து கட்டிய அணைகளை பராமரிக்கக்கூட எம்மால் முடியவில்லை. பின்னர் தனது என உரிமை மட்டும் எப்படி கோரமுடியும் என தற்போதைய

நுண்ணீர்ப்பாசனம் என்பது எமக்கு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் தந்த வரப்பிரசாதம் என்றே கூறவேண்டும். நீரின் தேவையை அறிந்து அதற்கேற்ப அளவானதாக நீரை வழங்கும் பொறிமுறையே அது. தாவரத்திற்கு தாவரம் தேவைப்படும் நீரினளவு மாறுபடும். ஆனால் இவ்வகை நுண்ணீர்ப்பாசன முறைமூலம் தேவையானளவு நீரை வழங்குவதனால் செலவும் மிச்சம். அதேநேரம் வினைத்திறனாக வழங்கவும் முடியும். இவ்வகை நுண்ணீர்ப்பாசன முறைமூலம் நீரை மீதமாக்க முடிவதுடன் அதனை வேறு பயிர்களை வளர்க்கவும் பயன்படுத்த முடியும். இலவசமாக வருகின்றதென்றால் அதனை வீணாக்க வேண்டும் என்பதல்ல. எளிமையாக, சிக்கனமாக எவ்வளவிற்கு எம்மை நாம் மாற்றிக்கொள்கின்றோமோ அதற்கிணைவாக எமக்கான மதிப்பும் உயர்வடைகின்றது






நீர்ப்பாசனமாகும். வேர்ப்பகுதிக்கு தேவையான நீரினை வழங்குவதன் மூலம் ஏனைய பகுதிகளில் வளரும் களைகளையும் இலகுவாக கட்டுப்படுத்த முடியும். விசிறல் நீர்ப்பாசனமானது விசிறல் கருவிகள் குழாய்களில் பொருத்தப்பட்டு அதன் மூலம் விசிறப்படுதலாகும். இரண்டு முறைகளிலும் நீரினை மீதப்படுத்துவதற்கான வழிகள் உண்டு.

குறிப்பிட்ட தொழில் நுட்பத்தை முறையான முறையில் விவசாய பெருமக்களுக்கு அறிமுகப்படுத்த தவறுவதும் இவ்வாறான நுண்ணீர்ப்பாசனத்தை தொடர்ந்து செய்யும் போது ஏற்படும் பிரச்சி னைகளுக்கு அவ்வப்போது தீர்வுகாண வேண்டியதும் இன்னும் பயன்படுத்தும் கருவிகள் பழுதடையும் போது அல்லது மாற்ற வேண்டி யேற்படின் இவற்றை உடனடியாக வாங்க முடியாது.

எனவே அதற்கான வசதி வாய்ப்பினை ஏற்படுத்தும் போது இன்னும் பல தொழில்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 105

காவு கொள்ளும் நிலையிலிருக்கின்றதனை நாம் காணலாம். சுனாமி அலையாகவும் வெள்ளப் பெருக்காகவும் இயற்கை சீறிச்சினக்கும் போது ஏற்படும் அழிவுகளை நாம் அறிந்தும் கண்ணாரக் கண்டும் இன்னும் அனுபவப்பட்டும் இருக்கின்றோம். நீரில் ஆரம்பித்து நீரேந்து பகுதியில் முடிவுற்று பல்லாயிரம் மக்களின் கண்ணீரையும் உருவாக்கி முடிவடைந்த உள்நாட்டுப் போரும் சரி காவிரியை மையப்படுத்தி வருகின்றது என நினைத்துக் கொண்டு இருக்கின்ற நீரை நாம் சிக்கனமாக பயன்படுத்தத் தவறினால் நாடு வரண்ட பூமியாகிவிடும். இந்த நிலைமையை யாழ்ப்பாணத்து மக்கள் சரிவர உணராவிட்டால் ஒருகாலத்தில் யாழ்ப்பாணம் பாலைவனமாகிவிடும் என்று அடித்துக் கூறிய புலமையாளரின் கூற்றினை ஏளனம் செய்கின்ற செயலையும் நாம் காணமுடிகின்றது. நீரை அரசியலாக்கி அரசியலை நீராக்கி என்றுமே நிலைக்காததாக மாற்றியிருக்கும் எம்மவர் குறுநில மன்னரொருவர் வியந்தார். சாதாரண ஒரு பாலத்தை கட்டவோ மாறாக மக்களுக்கான பாதைக்காக அல்லது வாய்க்காலுக்காக ஓரங்குல நிலத்தினை வழங்க விருப்பமில்லாத மனிதர்கள் இருக்கின்றவரை எப்படி மாதம் மும்மாரி மழைபொழியும்? இயற்கையை அனுசரித்து விவசாயஞ் செய்து வாழ்ந்து வந்த பரம்பரை தற்போது இயற்கையை செயற்கையினுள் உருவாக்கி அதனில் பயிருஞ் செய்ய முனைந்திருப்பதை என்னவென்பது. என்பதனைப் புரிந்துகொள்க.

நுண்ணீர்ப்பாசனம் (Micro irrigation) என்பது வரையறுக்கப்பட்ட தொடராக இணைக்கப்பட்ட குழாய்கள் மூலம் கட்டுப்படுத்திய அளவில் குறிப்பிட்ட அளவு நீரை தாவரங்களுக்கு வழங்குதலாகும். இவ்வாறு நுண்ணீர்ப்பாசன முறையில் தூவல் நீர்ப்பாசனமும் (Drip irrigation) விசிறல் நீர்ப்பாசனத்தையும் (Sprinkler irrigation) வழங்க முடியும். தூவல் நீர்ப்பாசனமானது தாவரத்தின் வேர்ப்பகுதியை நோக்கிய நுட்பங்கள் விரைவாக உள்வாங்கப்படும். எமக்கு கிடைத்திருக்கும் நுண்ணீர்ப்பாசன முறைகளை பயன்படுத்தி அவற்றிலிருந்து பயனை நாம் விரைந்து பெறுவதுடன் இவ்வாறான தொழில்நுட்பங்களின் மேலுள்ள நம்பிக்கையையும் நாம் கட்டியெழுப்ப முடியும். நீருக்கு நாம் தான் பரிகாரம் கண்டு கொள்ள வேண்டும். சரியான திட்ட மிடலுக்கூடாக நாம் பயணிக்க முற்பட்டால் இந்த எளிய வகை தொழில்நுட்பம் முழுமையாக பயன்படும்.

# முழு அடைப்பால் முடங்கியது தமிழகம்


முழு அடைப்புக்கு ஆதரவு தெரிவித்து கோயம்பேட்டில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள தனியார் பேருந்துகள்...

(சென்னை)

**கர்நாடகாவில் தமிழர்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்தும் காவிரிப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வலியுறுத்தியும் தமிழகத்தில் நேற்று முழு அடைப்பு போராட்டம் நடந்தது.**

பொதுப் போக்குவரத்தை பாதிக்காத வண்ணம் பாதுகாக்க மாநிலம் முழுவதும் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். புகையிரத மறியல், பேருந்து மறியலில் ஈடுபடுபவர்களைக் கைது செய்யும் வகையில் பொலிஸார் தயார் நிலையில் வைக்கப்பட்டனர்.

போராட்டத்தை முன்னிட்டு மாநிலம் முழுவதும் பரவலாகக் கடைகள் மூடப்பட்டிருந்தன.

கர்நாடக அரசுக்கு சொந்தமான பாடசாலைகள், வங்கிகள், வர்த்தக நிறுவனங்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டது.

தமிழகத்துக்கு காவிரியில் தண்ணீர் திறக்குமாறு கர்நாடக அரசுக்கு உச்ச நீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டது. இதைத் தொடர்ந்து, கர்நாடகத்தில் வன்முறை வெடித்தது. பெங்களூர் உட்பட பல இடங்களிலும் தமிழக பதிவெண் கொண்ட வாகனங்கள் அடித்து நொறுக்கப்பட்டன. நூற்றுக் கணக்கான வாகனங்கள் தீவைத்துக் கொளுத்தப்பட்டன. தமிழர்களின் வணிக நிறுவனங்கள் சூறையாடப்பட்டன. தமிழர்கள் கண்மூடித்தனமாகத் தாக்கப்பட்டனர்.

கர்நாடகாவில் தமிழர்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்தும், காவிரிப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வலியுறுத்தியும் நேற்று 16 ஆம் திகதி முழு அடைப்பு, வீதி மற்றும் புகையிரத மறியல் போராட்டத்திற்கு தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு தலைவர் ஏ.எம்.விக்கிரமராஜா, தமிழக அனைத்து விவசாயிகள் சங்கங்களின் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் பி.ஆர்.பாண்டியன் அழைப்பு விடுத்தனர்.

இப்போராட்டத்துக்கு தி.மு.க. காங்கிரஸ், பா.ஜ.க., தே.மு.தி.க., ம.தி.மு.க., பா.ம.க., த.மா.கா., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், ம.ம.க., விடுதலை சிறுத்தைகள் உட்பட பல்வேறு கட்சிகளும் பல்வேறு அமைப்புகளும் ஆதரவு தெரிவித்துள்ளன. (இ-3-10)

பாரதச் செய்தி

## முழு அடைப்பு; மறியல் மு.க.ஸ்டாலின் கைது



(சென்னை)

காவிரி பிரச்சினையில் நிரந்தரத் தீர்வு காண மத்திய அரசை வலியுறுத்தியும் கர்நாடக் மாநிலத்தில் தமிழர்களுக்கு எதிராக நடைபெறும் வன்முறை போராட்டங்களுக்கு கண்டனம் தெரிவித்தும் தமிழகம் - புதுச்சேரியில் நேற்று வெள்ளிக்கிழமை முழு அடைப்பு போராட்டம் நடைபெற்றது. காலை 6 மணிக்கு தொடங்கிய இந்த போராட்டம் மாலை 6 மணி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

போராட்டம் காரணமாக தமிழகத்தின் பல்வேறு இடங்களில் புகையிரத மறியல் போராட்டங்கள் நடைபெற்றன. மறியலில் ஈடுபட முயன்ற முக்கிய தலைவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சென்னை எழும்பூரில் வீதி மறியலில் ஈடுபட்ட மு.க.ஸ்டாலின் உட்பட தி.மு.கவினர் கைது செய்யப்பட்டனர். வேலூர் காட்பாடியில் துரைமுருகன் தலைமையில் தி.மு.கவினர் மறியலில் ஈடுபட முயன்றனர். அவர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மாநிலம்முழுவதும்நேற்று கடைகள் அடைக்கப்பட்டுள்ளன. பல்வேறு அரசியல் கட்சிகள் சார்பில் மறியல் போராட்டங்களும் ஆங்காங்கே நடைபெற்றன. (இ-10)

## முழு அடைப்பு போராட்டத்திற்கு ஆதரவு; மறியலுக்கு முயன்ற வைகோ கைது



(திருச்சி)

திருச்சியில் புகையிரத மறியலில் ஈடுபட முயன்ற வைகோ உள்ளிட்ட ம.தி.மு.கவினரை பொலிஸார் கைது செய்தனர்.

காவிரி நதி நீர்ப் பிரச்சினையில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டும் வகையில் மத்திய அரசு நிரந்தரத் தீர்வு காண வலியுறுத்தியும் கர்நாடகாவில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களில் தமிழர்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்தும் நேற்று தமிழகத்தில் முழு அடைப்பு போராட்டம் நடைபெற்றது.

இதற்கு பல்வேறு அரசியல் கட்சிகள் ஆதரவு தெரிவித்து வீதி மறியல் மற்றும் புகையிரத மறியல் போராட்டங்களை நடத்தின. ம.தி.மு.கவும் இந்த முழு அடைப்பு பேராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக நேற்றுமுன்தினம் திருச்சியில் நடந்த ம.தி.மு.க. திறந்த வெளி மாநாட்டிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தநிலையில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ மறியல் போராட்டத்தில் ஈடுபடுவதற்காக காலை 9 மணியளவில் திருச்சி சந்திப்பு புகையிரத நிலையத்திற்கு தொண்டர்களுடன் பேரணியாக வந்தார்.

பின்னர் மறியலில் ஈடுபடுவதற்காக புகையிரத நிலையத்திற்குள் தொண்டர்களுடன் உள்ளே செல்ல முயன்றார். அப்போது அங்கு பாதுகாப்புக்கு நின்ற திருச்சி மாநகர பொலிஸ் உதவி ஆணையர் அசோக்குமார் தலைமையிலான 100இற்கும் மேற்பட்ட பொலிஸார் வைகோ உட்பட அனைவரையும் தடுத்து நிறுத்தினர்.

இதையடுத்து புகையிரத நிலையம் முன்பு வைகோ தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தின் போது கர்நாடகாவை கண்டித்து கோஷம் எழுப்பப்பட்டது. அணை கட்டாதே. அணை கட்டாதே மேகதாது அணை கட்டாதே. அணை கட்டினால் எங்கே போகும் ஒருமைப்பாடு. நிறுத்து. நிறுத்து. தமிழர்கள் மீதான தாக்குதலை உடனே நிறுத்து. வஞ்சிக்காதே. வஞ்சிக்காதே. தமிழகத்தை வஞ்சிக்காதே என்று மத்திய அரசையும் கர்நாடக அரசையும் கண்டித்து கோஷம் எழுப்பப்பட்டது.

மேலும் மத்திய அரசு காவிரி ஆற்றின் குறுக்கே அணை கட்டுவதை உடனே தடுத்து நிறுத்த வேண்டும். காவிரி மேலாண்மை வாரியத்தை உடனே அமைக்க வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து தடையை மீறி போராட்டம் நடத்தியதாக வைகோ உட்பட 130 பேரை பொலிஸார் கைது செய்தனர். (இ-3-10)

## சென்னையில் சாலை மறியலில் ஈடுபட்ட கனிமொழி உள்ளிட்ட தி.மு.கவினர் கைது



கர்நாடகத்தில் தமிழர்கள் தாக்கப்பட்டதை கண்டித்து சென்னை அண்ணாசாலையில் மறியலில் ஈடுபட்ட கனிமொழி உள்ளிட்ட தி.மு.கவினரை பொலிஸார் கைது செய்தனர். கர்நாடகத்தில் தமிழர்கள் தாக்கப்பட்டதை கண்டித்து தமிழகம் முழுவதும் தி. மு. கவினர் நேற்று திடீர் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கனிமொழிஎம்.பி. நேற்றுக் காலை திடீரென்று அண்ணா சாலையில் அமர்ந்து மறியலில் ஈடுபட்டார். கர்நாடகத்துக்கு எதிராக கோஷம் எழுப்பினார்.

அவருடன் மாவட்டச் செயலாளர் ஜெ. அன்பழகன், விஜயதாயன்பன், பகுதி செயலாளர் காமராஜ், மதன்மோகன், பகுதி துணை செயலாளர் சேப்பாக்கம் சிதம்பரம் உள்ளிட்ட சேப்பாக்கம்- திருவல்லிக்கேணி நிர்வாகிகள் 700 பேர் மறியலில் ஈடுபட்டனர். அவர்கள் மத்திய- மாநில அரசுகளுக்கு எதிராக கோஷம் எழுப்பினர்.

காவிரி நீர் பொதுச் சொத்து. அதை யாரும் தடுக்கக்கூடாது. கர்நாடகமே வன்முறையை நிறுத்து போன்ற கோஷங்களை எழுப்பினர். மறியல் போராட்டத்தால் அண்ணா சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. (இ-10)

## தொடரும் போர்ச்சூழல் காரணமாக

# 2 லட்சத்து 35,000 அகதிகள் இத்தாலிக்குச் செல்லத் தயார்!

### ஐக்கிய நாடுகள் சபை தகவல்

(ரோம்)

**லிபிய நாட்டில் உள்ள 2 இலட்சத்து 35 ஆயிரம் அகதிகள் இத்தாலிக்கு செல்லத் தயார்நிலையில் உள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.**



பதற்றமான சூழல் நிலவி வரும் சிரியா. ஈராக் உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் இருந்து மக்கள். அகதிகளாக ஐரோப்பிய நாடுகளை நோக்கி சென்ற வண்ணமுள்ளனர்.

இந்நிலையில்.லிபிய நாட்டில் உள்ள 2 இலட்சத்து 35 ஆயிரம் அகதிகள் இத்தாலிக்கு செல்லத் தயார் நிலையில் உள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. லிபியாவில் உள்ள ஐக்கிய நாடுகள் ஆதரவு மிஷனின் தூதர் மார்டின் கெப்ளர் பேட்டி ஒன்றில் இதனைக் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில். "பாதுகாப்பை உறுதி செய்தல் என்பது தான் முக்கியமான விடயமாக உள்ளது. ஒருங்கிணைந்த. வலிமையான இராணுவம் நம்மிடம் இருந்தால். தீவிரவாத அச்சுறுத்தல். மனித கடத்தல் ஆகிய சவால்களை சமாளிக்கலாம்.

லிபியா விவகாரத்தில் பேச்சுவார்த்தை. நிலைத்தன்மை மற்றும் ஒற்றுமை தேவையாக உள்ளது.

ஜெனரல் ஹாப்தரை தொடர்பு கொண்டிருக்கிறேன். அவரை சந்திப்பதற்கு தயாராக உள்ளேன்" என்று தெரிவித்தார். (இ-3-10)

---

# தன்சானியாவில் கண்டெடுக்கப்பட்டது எம்.எச்.370 விமானத்தின் பாகம் தான்

### மலேசியா உறுதி செய்தது



(கோலாலம்பூர்)

தன்சானியாவில் கண்டெடுக்கப்பட்டது 2014ஆம் ஆண்டு மாயமான எம்.எச். 370 விமானத்தின் பாகம் தான் என்பதை மலேசியா அரசு உறுதி செய்துள்ளது.

மலேசியாவின் கோலாலம்பூர் நகரில் இருந்து சீனாவின் தலைநகர் பீஜிங்கிற்கு கடந்த 2014 ஆம் ஆண்டு மார்ச் 8 ஆம் திகதி சென்ற மலேசியன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த எம்.எச். 370 ரக விமானம் நடுவானில் மாயமானது.

இதில் பயணம் செய்தவர்கள் குறித்த விபரம் தெரியவில்லை. விமானத்தை தேடும் பணி இந்திய பெருங்கடல் பகுதியில் தொடர்ந்து நடைபெற்றுவந்தது. எனினும்விமானத் தேடுதல் வேட்டையில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. தொடர்ந்து மர்மம் நீடித்து வருகிறது.

இந்திய பெருங்கடல் பகுதியில் உள்ள பல்வேறு கடற்கரையில் கண்டுபிடிக்கப்பட்ட சிதைவுப் பாகங்கள் ஆய்வகங்களுக்கு கொண்டு செல்லப்பட்டன.

மாயமான விமானத்தின் பெரிய அளவிலான உதிரிப் பாகம் கடந்த ஜூன் மாதம் கிழக்கு ஆபிரிக்காவின் தன்சானியா நாட்டில் உள்ள பெம்பா தீவில் கண்டெடுக்கப்பட்டது.

இந்நிலையில். தன்சானியாவில் கண்டெடுக்கப்பட்டது எம்.எச்.370 விமானத்தின் பாகம் தான் என்பதை மலேசியா உறுதி செய்துள்ளது.

முன்னதாக. ஆய்விற்காக அவுஸ்திரேலியாவிற்கு இந்த உதிரிப்பாகம் கொண்டு செல்லப்பட்டது. ஆய்வு முடிவில் கண்டெடுக்கப்பட்டது எம்.எச்.370 விமானத்தின் பாகம் தான் என்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக மலேசிய போக்குவரத்து துறை தெரிவித்துள்ளது. (இ-10)

---

# அமெரிக்க ஜனாதிபதியாக செயற்பட ஹிலாரிக்கு உடற்தகுதி உண்டா?

### வைத்தியர் பரபரப்பு அறிக்கை

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதியாக செயற்படத்தக்க அளவுக்கு ஹிலாரி கிளின்டனுக்கு உடல் தகுதி இருக்கிறதா? என்பது பற்றி வைத்தியர் பரபரப்பு அறிக்கை அளித்திருக்கிறார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வாக்குப்பதிவு நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது. தேர்தல் களமும் பரபரப்பாகி வருகிறது. இந்த நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன் நியூயோர்க் நகரில். அமெரிக்க தாக்குதல் நினைவு நாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருந்த ஹிலாரி கிளின்டனுக்கு (வயது-68). திடீர் உடல்நலக்குறைவு ஏற்பட்டது. இதனால் அவர் அவசர அவசரமாக அந்த நிகழ்ச்சியில் இருந்து வெளியேறினார்.

அவர் தனது தேர்தல் பிரசாரத்தையும் தற்காலிகமாக நிறுத்தினார். அவரது உடல்நிலை குறித்து பல்வேறு வதந்திகள் பரவத்தொடங்கின. இந்த நிலையில் அவருக்கு நிமோனியா தாக்கி இருப்பதாக தகவல்கள் வெளியாகின.

**வைத்தியர் அறிக்கை**

இதையடுத்து ஹிலாரி கிளின்டன். தனக்கு சிகிச்சை அளித்த வைத்தியர் லிசா பார்டாக் அளித்த மருத்துவ அறிக்கையை நேற்று முன்தினம் வெளியிட்டார். அதில் இடம்பெற்றிருக்கும் முக்கிய தகவல்கள் வருமாறு.

ஹிலாரி தனக்கு தேவையான அனைத்து தடுப்பூசிகளையும் போட்டுக்கொண்டிருக்கிறார். நிமோனியா தடுப்பூசியும் போட்டிருக்கிறார்.

ஹிலாரியின் இரத்த அழுத்தம். கொழுப்பு ஆகியவற்றின் அளவு. அவர் ஆரோக்கியமாக இருக்கிறார் என்று கூறக்கூடிய அளவுக்கு இருக்கிறது.

அவரது மேமோகிராம் பரிசோதனை (மார்பக ஊடுகதிர் பரிசோதனை). அல்டிராசவுண்ட் ஸ்கான் பரிசோதனை முடிவுகள் இயல்பாக இருக்கின்றன.

அவர் தைரொய்ட் ஒவ்வாமை மருந்துகளை எடுத்து வருகிறார். ஆரோக்கியமாக இருக்கிறார்.

2012 ஆம் ஆண்டு அவருக்கு மூளை அதிர்ச்சி ஏற்பட்டு. அதன் காரணமாக அவரது மூளைக்கும். மண்டையோட்டுக்கும் இடையே இரத்த உறைவு ஏற்பட்டதைத் தொடர்ந்து அதற்கு தேவையான மருந்துகளும் எடுத்துக்கொண்டிருக்கிறார்.

ஆன்டிபயோட்டிக் மருந்துகள் எடுத்தும். ஓய்வு எடுத்தும் ஹிலாரி நலம் பெற்று வருகிறார். அவர் ஆரோக்கியமாக இருக்கிறார். அவர் அமெரிக்க ஜனாதிபதியாக செயற்படுவதற்கு ஏற்ற தகுதியுடன் இருக்கிறார்.

இவ்வாறு வைத்தியர் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அதில் ஹிலாரி எடுத்து வருகிற மருந்துகளின் பெயர்களும் கூட பட்டியலிடப்பட்டுள்ளன. (இ-3-10)

---

# தாய்வான், சீனாவை சூறையாடிய கோரப் புயலுக்கு 11 பேர் பலி!

### மற்றுமொரு புயல் நெருங்கி வருகிறது

தாய்வான்மற்றும்சீனாவை சூறையாடிய கோரப் புயலுக்கு 11 பேர் பலியாகியுள்ளனர். இந்த ஆண்டு உலகை பதம்பார்த்த புயல்களில் மிகவும் பலமிக்கதாக கருதப்படும் 'மெராண்ட்டி' புயல் மணிக்கு சுமார் 227 கிலோமீற்றர் வேகத்தில் தாய்வான் மற்றும் சீனாவின் கடலோரப் பகுதிகளை சூறையாடியபடி கரையை கடந்தது.

தென்சீன கடல் பகுதியில் மையம் கொண்டிருந்த புயல் தாய்வான் மற்றும் சீனாவில் உள்ள சியாமன் பகுதியை தாக்கியது.

அதிசக்திவாய்ந்த இந்த சுப்பர் புயலுக்கு 'மெரான்ட்டி' என்று பெயரிடப்பட்டு இருந்தது.

இந்த புயல் சீனாவை தாக்கியபோது அதிகாலையில் மணிக்கு 227 கிலோமீற்றர் வேகத்தில் கடும் காற்று வீசியது. இதனால் மரங்கள். மின் கம்பங்கள் முறிந்து விழுந்தன. வீடுகளின் கூரைகளும் பறந்தன.

தாய்வான் மின்சாரம் இல்லாமல் 5 இலட்சம் பேர் தவிக்கின்றனர். சீனாவிலும் அதுபோன்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

கோசியாங் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த 10 சரக்கு கப்பல்கள் நங்கூரம் அறுந்து புயல் இழுத்து சென்றது. அதில் 140.000 தொன் கன்டெய்னர்கள்கொண்ட ஒரு கப்பல் இரண்டு கிரேன்கள் மீது பலமாக மோதின. இதுதவிர மீன்பிடித் துறைமுகத்தில் உள்ள ஏராளமான சிறு படகுகள் மூழ்கி விட்டன. கடற்கரை ஓரத்தில் வைக்கப்பட்டு இருந்த கன்டெய்னர்கள் ஆங்காங்கே தூக்கி வீசப்பட்டன.


கடந்த 22 ஆண்டுகளாக இல்லாத அளவுக்கு புயல் தாக்குதல் அதிகமாக இருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த புயலால் தாய்வான் நாட்டில் ஒருவர் இறந்துள்ளார். இரு நாடுகளிலும் பல இலட்சம் பேர் பாதுகாப்பான இடத்துக்கு அப்புறப்படுத்தப்பட்டு உள்ளனர். அங்கு தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதுவரை 800 மி.மீற்றர் மழை பெய்துள்ளது. இதனால் எங்கு பார்த்தாலும் வெள்ளக்காடாக காட்சி அளிக்கிறது.

பியூஜியான் மாகாணத்தில் 7 பேர். ஜெஜியாங் மாகாணத்தில் 3 பேர் என சீனாவில் நேற்று புயலின் தாக்கத்துக்கு 10 பேர் பலி யான நிலையில் 'மெரான்ட்டி' புயலுக்குபலியானோர்எண்ணிக்கை 11 ஆக உயர்ந்துள்ளது.

பியூஜியான் மாகாணத்தில் மட்டும் சுமார் ஒன்றரை கோடி வீடுகள் மின்சாரம் துண்டிக்கப்பட்ட நிலையில் இருளில் மூழ்கி கிடக்கின்றன. இந்நிலையில். மலாக் காஸ் என்ற மற்றொரு புயலும் சீனாவை நோக்கி நெருங்கி வருகிறது. நாளை இந்தப் புயல் சீனாவை கடக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-10)

# உரிமை, உயரிய சேவை பெற்றுக்கொடுக்கப்படும்

## பிரதமர் ரணில் வாக்குறுதி



(கொழும்பு)

**தொழிற்றுறைப் பிரச்சினைகளைத் தீர்த்தல், தொழிற்றுறை உரிமைகளைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் வரி செலுத்தும் மக்களுக்கு உயரிய சேவையொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில், தனது பேஸ்புக் கணக்கில், செய்திக் குறிப்பொன்றைப் பதிவேற்றம் செய்துள்ள அவர், மக்களுக்கு உயரிய சேவையை வழங்குவதே, அரசாங்கத்தின் முதற்கட்ட கடமையும் பொறுப்புமாகும் என்றும் தெரிவித்துள்ளார். "எந்தவொரு நபரும் மற்றுமொரு நபரை விட வரப்பிரசாதங்களைப் பெற்றுக்கொள்வதில்லை. அதேபோன்று எந்தவொரு தொழிற்றுறையும் ஏனைய தொழிற்றுறைகளை விட விசேட வரப்பிரசாதங்களைப் பெற்றுக்கொள்ளவில்லை. அவ்வாறு இந்த அரசாங்கம் கருதுவதும் இல்லை" எனவும் அவர் அந்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-3-10)

## பொருளாதார நெருக்கடிக்கு பயப்படவில்லை

# அதிகாரத்தை தக்கவைக்கவே தேர்தலை நடத்தினேன்-மகிந்த

2015 ஆம் ஆண்டு நாட்டில் பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்படும் என்பதால் நான் முன்கூட்டியே தேர்தலை வைத்து, அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ள முயற்சித்ததாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் அவர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

தற்போதைய அரசாங்கத்தின் முக்கிய தலைவர்கள் எனது அமைச்சரவையில் முக்கிய அமைச்சர்களாக இருந்துள்ளனர். எனவே, அங்கு உண்மைகளை மறைக்கக்கூடிய வாய்ப்பு இல்லை. யாராவது அமைச்சரவையில் இருந்துகொண்டு முக்கிய அமைச்சையும் தன்னகம் வைத்துக்கொண்டு நாட்டு நடப்பை தெரியாமால் இருப்பாரானால் அவர் எவ்வாறு நாட்டையாளுவார். நான் மட்டும் முன்கூட்டியே தேர்தலை நடத்தவில்லை. 1982 ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்த்தன, 1999 ஆம் ஆண்டு சந்திரிகா குமாரதுங்க எனப் பலர் உள்ளனர். எவ்வாறாயினும், பொருளாதார நெருக்கடிகளுக்கு பயந்து நான்முன்கூட்டியே தேர்தலை நடத்தியமை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-3-10)

# நாட்டை கூறுபோட நினைப்போருக்கு நாம் சாட்டையடி கொடுக்க வேண்டும்

## சு.க.வினருக்கு அமரவீர அறிவுறுத்து

(கொழும்பு)

மகாநாயக்க பீடத்து பிக்குகள் கூட்டு எதிரணிக்கு தகுந்த பாடம் கற்பித்துள்ளது போல இனவாதத்தை தூண்டி அல்லது நாட்டை கூறுபோட நினைப்பவர்களுக்கு நாமும் சாட்டையடி கொடுக்க தயாராக இருக்க வேண்டும் என மீன்பிடி மற்றும் கடல்வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

மீன்பிடி மற்றும் கடல்வளங்கள் அபிவிருத்தி அமைச்சகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

விமல் வீரவன்ச புதிய அரசியலமைப்பு பற்றி குறைகூற வேண்டுமானால் அல்லது அது தொடர்பில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமானால் முதலில் கூட்டு எதிரணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன மீதே எடுக்க வேண்டும். ஏனெனில் அரசியலமைப்பு உருவாக்க குழுவில் அவரும் இருந்தார்.

கூட்டு எதிரணியில் உள்ளவர்கள் புதிய அரசியலமைப்பு அமைக்கப்படுவதற்கு முன்னரே எதற்காக இனவாத்தை தூண்டி வேடிக்கை பார்க்க நினைக்கின்றார்கள் என தெரியவில்லை. இந்த அரசியலமைப்பு பௌத்த சமயத்துக்கு எதிரானதெனவும் நீதிமுறைமைகளுக்கு உட்படவில்லை எனவும் பொய்யான பிரசாரங்களை பரப்பி மக்கள் மத்தியில் மோசமானவர்களாக சித்திரிக்கப்படுகின்றார்கள் என்பது அவர்களுக்கு தெரியாமலுள்ளது வேடிக்கையாகவுள்ளது.

பாராளுமன்றத்தில் எந்தவொரு சட்டமூலம் கொண்டு வந்தாலும் அதனை எதிர்த்துக்கொண்டு கூச்சலிட மட்டுமே தெரிந்தவர்கள் இவர்கள். அவர்களின் கருத்துக்களை புரிந்துகொண்டு தக்க பதிலடி மகாநாயக்க தேரர்கள் கொடுத்துள்ளனர். எனவே அவர்களுக்கு புரிந்தது இவ்வாறான இனவாதிகளுக்கு



புரிய வேண்டும்.

இவர்களே முன்னாள் ஜனாதிபதியின் ஆட்சியை கவிழ்த்தவர்கள். அமைச்சரவையை புறக்கணித்து மூன்று பேர் கொண்ட குடும்ப ஆட்சியென வீதியில் இறங்கி கோஷமிட்டவர்களே ஆட்சியை கவிழ்க்க காரணமானவர்கள். ஊடகங்கள் மத்தியில் இன்றும் இனவாதத்தை தூண்டி ஐக்கிய தேசிய கட்சியை வளர்த்து விட்டவர்களே இவர்கள். ஐக்கிய தேசிய கட்சியின் அடுத்த தேர்தல் வெற்றிக்காக செயற்படுபவர்களே இவர்கள். எனவே நாட்டின் ஒருமைப்பாட்டுடன் கட்சியின் கொள்கைத் திட்டங்களுடன் ஒன்றுபட்டு செயற்படக்கூடியவர்கள் இன்று எம்முடன் உள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் என்ற வகையில் தனிப்பட்ட வகையில் கட்சி அமைப்பதற்கு எதிர்ப்பையே கொண்டுள்ளோம். தங்களது தனிப்பட்ட தேவைகளுக்காக அல்லது ஐக்கிய தேசிய கட்சியுடன் ஒப்பந்தத்தை மேற்கொள்பவர்கள் செய்வதை நாம் ஒரு பொருட்டாக கொள்ள முடியாது. தங்களது பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள அவர்கள் அரங்கேற்றும் நாடகம் வியப்பாகவுள்ளது. இனவாதத்தைத் தூண்டும் வகையில் செயற்படுபவர்கள் எம்முடன் என்றும் இணைந்திருக்க முடியாது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

நாம் அவர்களுடன் எத்தனையோ தடவை பேச்சுவார்த்தைகளை நடத்தினோம். அவர்களின் சுய இலாபத்திற்காக கட்சியை காட்டிக்கொடுத்து ஐக்கிய தேசிய கட்சியை வளர்த்து வருகின்றனர். எனவே எமது நிலைப்பாடு என்றும் உறுதியானது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3-10)

## இன்று ஒரு தகவல்

### சூடாக இருப்பவர்களைக் குளிர வைப்பது எப்படி?

சண்டை போடுபவர்கள்; நியாயம் பேசுபவர்கள்; அன்பு காட்டுகிறவர்கள்.

இந்த மூன்று வகையினருள் அன்பு காட்டுகிறவர்கள் எவ்வளவோ தேவலை என்று எண்ணினால் அது தவறு. இவர்களது எண்ணப்படி நாம் நடந்து கொள்ளாவிட்டால் அல்லது அவர்களது பேச்சைக் கேட்காவிட்டால் இவர்கள் ஒரு படி மேலே போய், நியாயம் பேசுபவர்களாக ஆகி, சட்டம் பேசுபவர்களாக மாறி, தர்க்க பூர்வமாக வாதிட்டு,அப்புறமும் நாம் வழிக்கு வராவிட்டால் சண்டை போடுகிறவர்களாக ஆகிவிடுகிறார்கள்.

ஒரு தாய் தன் மகனை எங்கேயும் வெளியே போகக்கூடாது என விரும்புகிறாள். அவனோ போய்த்தான் தீருவேன் என்கிறான்.பணமும் கேட்கிறான்.அவ்வளவு தான் உனக்காக நான் எவ்வளவு பாடுபட்டேன் என் பேச்சை நீ கொஞ்சமாவது மதிக்கிறாயா?என்று அந்தத்தாய் இரண்டாம் நிலைக்கு – அதாவது நியாயம் பேசுபவளாக உயர்கிறாள்.ஆமா, நீ கிழிச்சே! என்கிறான் மகன். போச்சு! அவள் முதல் நிலைக்குப் போய்விடுகிறாள்.

நாம் செய்ய வேண்டியதெல்லாம் இந்த முதலாவது இரண்டாவது நிலையில் இருப்பவர்களை மூன்றாவது நிலைக்கு இறக்கிக் கொண்டுவருவது தானே தவிர மூன்றையும் இரண்டையும் ஒன்றிற்கு உயர்த்துவது அல்ல.

ஓர் உதாரணம் பார்ப்போம்.

ஓர் ஹோட்டல் உரிமையாளரிடம் வாடிக்கையாளர் வந்து, என்னையா ஹோட்டல் நடத்துறீங்க? ஹோட்டலா இது நரகம் ! ஓர்ஸ்ட் சர்வீஸ்! தண்ணீரே வரலை! பெல் அடிச்சாப் பையன் வரலை என்று கத்துகிறார் என்று வைத்துக் கொள்வோம். பதிலுக்கு முதலாளியும் கத்தினால் அது எரிமலை விடயமாகி விடும். ஹோட்டல் முதலாளி அப்படிச் செய்யக் கூடாது.

வாடிக்கையாளரிடம் காட்டப்படும் இந்த அலட்சியம் மெல்ல அவரைக் கவிழ்த்துவிடும்.

ப்ளீஸ்! உக்காருங்க சார். உக்காந்து மெதுவாப் பேசுவோமே! நீங்க இப்படிக் கத்தினா என்னைப் பற்றி மட்டுமல்ல, உங்களைப்பற்றியும் தப்பா நினைக்க சான்ஸ் இருக்கு சார் என்கிற பாணியில் பேசினால் போதும்.ஓர் ஆச்சரியம் நிகழும். அந்த வாடிக்கையாளர் சரசரவென இறங்கி, இரண்டாவது நிலைக்கு வருவார்.அப்புறம் அவரை மூன்றாவது நிலைக்கும் இறக்குவது அவ்வளவு கடினமில்லை.

கோபப்பட்டு கத்துபவர்களின் சூட்டை இறக்க முதலில் நாம் நம் குரலில் கனிவைக் குழைக்க வேண்டும். அவர்கள் கோபம் நியாயமானது தான் என்பதை நாமும் ஏற்பதாக காண்பித்துக் கொள்ள வேண்டும். அவர்கள் இறங்கி வந்ததும் தான் அவர்கள் செய்த தவறை அவர்களுக்கு உணர்த்த முயல வேண்டும். மாறாக, கோபத்தின் உச்சாணிக் கொம்பில் இருக்கும் போது உணர்த்த முயற்சி செய்யக் கூடாது. காரணம் எடுபடாது.


மனித நல்லுறவு என்பது நமக்குப் பல நன்மைகளைச் செய்வதோடு, நல்ல பெயரையும் சம்பாதித்துக் கொடுக்கிறது.

இவை போக, ஆறறிவு பெற்றிருக்கிறோம் என்பதை அர்த்தப்படுத்தவும் சக மனிதர்களுடன் நல்லுறவு வைத்துக் கொள்வதும் மிக முக்கியம்.


**லேனா தமிழ்வாணன்**





தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் 2016 இற்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் ஊடாக தமிழரசுக் கட்சியின் கிராமமட்ட தலைவரினால் சுதந்திரபுரம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு மூன்று தையல் இயந்திரங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (படம்:-புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)



சிறுவர்களின் ஆன்மீக வலுவூட்டலுக்கான யானை பவனி கடந்த 5 ஆம் திகதி ஆவணிச் சதுர்த்தி அன்று சித்தன்கேணி சிவன் கோவிலில் இருந்து வடக்கம்பரை அம்மன் ஆலயம் வரை சென்றடைந்தது. வீணாகான குருபீடத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ் மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன், வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வீணாகான குருபீடத் தலைவர் சபா.வாசுதேவக் குருக்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.(படங்கள்:பொ.சோபிகா)







கவிஞர் வ.க. பரமநாதனின் காலம் தந்த வலிகள் நூல் வெளியீடும் மூத்தோர் கௌரவிப்பு நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றது. இதில் இணுவிலைச் சேர்ந்த வைத்தியர் பாலசுப்பிரமணியத்தை யாழ். பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கம் கௌரவிப்பதை படத்தில் காணலாம்.




யாழ்ப்பாணம் தமிழ்ச்சங்கம் நடத்திய பாரதி விழா தலைவர் கலாநிதி. திருமதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் அண்மையில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.



வட்டு இந்து வாலிபர் சங்கத்தின் கனடாக் கிளையைச் சேர்ந்த தங்கராசா ரூபனின் நிதி அனுசரணையுடன் சில்லாலையைச் சேர்ந்த கொலஸ்ரிகா என்ற வயதான தாய் ஒருவருக்கு சுமார் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான கோழிக்கூடு மற்றும் கோழிகள் என்பன அவரின் வாழ்வாதாரத்திற்காக அவரது வீட்டில் வைத்து சங்கத்தின் முன்னாள் தலைவரும் தற்போதைய கனடாக் கிளை உறுப்பினருமான ச.லோகேஸ்வரனால் வழங்கப்பட்டது.





யாழ்.வாதரவத்தை வீரவாணியில் அமைந்துள்ள ஞானவாணி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் கலாநிதி.க.சர்வேஸ்வரன் கலந்துகொண்டார்.








தந்தை செல்வா அகில இலங்கை சமூக அபிவிருத்தி மன்றத்தினரால் தெரிவுசெய்யப்பட்ட 200 பயனாளிகளுக்கான இலவச மூக்குக்கண்ணாடி வழங்கும் நிகழ்வு அண்மையில் நல்லூரில், தந்தை செல்வா அகில இலங்கை சமூக அபிவிருத்தி மன்றத்தின் தலைவர் லயன்.ஏ.மனோகரன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பயனாளிகளுக்கான கண்ணாடிகளை வழங்கி வைத்தார். (படங்கள்:-கிஷோர்)

# வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம்- III

## சமூகப் பொது அறிவு (பயிற்சிக்குரியது)

தொகுப்பு: T.Thirumurugan (B.A. Dip.In Poli. Ed.Dip.In.HR)

01.இலங்கையில் காணப்படும் மாவட்டசமுர்த்தி அலுவலகங்கள் எத்தனை?
1. 20 2. 22 3. 23 4.25

02.பொதுநலவாயநாடுகளின் அமைப்பில் உள்ளநாடுகளின் எண்ணிக்கை?
1. 54 2. 53. 3.52 4. 51

03.இலங்கையில் போதைப்பொருள்பாவனைதொடர்பானதகவல் வழங்க அறிமுகப்படுத்தப்பட்ட தொலைபேசி இலக்கம்?
1. 1984 2. 1918 3.1985 4. 2929

04.இலங்கையில் புகையிலை பயிர்ச் செய்கையைஅறிமுகப்படுத்தியவர் யார்?
1. போர்த்துக்கேயர் 2. ஒல்லாந்தர்
3. ஆங்கிலேயர் 4. அரேபியர்

05.இலங்கையில் வடமாகாணத்தில் அச்சுவேலியில் இயங்கிவரும் கைத்தொழில் பேட்டைக்கு உதவிவழங்கும் நாடுஎது?
1. அமெரிக்கா 2. சீனா 3. இந்தியா 4.ஜப்பான்

06.சார்க் அமைப்பில் வறுமைக்கோட்டுக்கு உட்பட்டநாடு எது?
1.இந்தியா 2. மாலைதீவு 3. ஆப்கானிஸ்தான் 4.நேபாளம்

07.இங்கிலாந்தின் தற்போதைய பிரதமர் யார்?
1.டேவிட் கமரூன் 2.தெரசாமே
3.பிரிஸ் வெல்லா 4.லொக்கு கேத்தா

08.உலகில் நீளமானஅதிவேக ரயில் (புல்லட்) பாதையை உருவாக்கிக் கொண்ட நாடுஎது?
1.சீனா 2.ஜப்பான் 3.இந்தியா 4.அமெரிக்கா

09.2017 ஆண்டு ஐ.நா.பொதுசெயலாளர் பதவிக்குபோட்டியிடும் நபர்?
1. அன்டோனியோகுட்டெரெஸ் 2.பான்கீ மூன்
3.ஒபாமா 4.டேவிட் கமரூன்

10.இலங்கையின் மொறாக்கத்தை நீர்ப்பாசன திட்டத்திற்குஉதவிவழங்கும் நாடுஎது?
1. ஜப்பான் 2.டென்மார்க் 3. சீனா 4.அமெரிக்கா

11.இலங்கையில் தற்போதைய கல்வி அமைச்சர் யார்?
1.நிமால் சிறிபால டி சில்வா 2.அகிலவிராஜ் காரியவசம்
3.கருஜயசூரிய 4.மங்கள சமரவீர

12.இலங்கையின் மக்களின் ஆயுள் எதிர்பார்ப்புயாது?
1.74.9% 2.78.2% 3.76.3% 4.73.4%

13.2016 நடைபெற உள்ள அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் எத்தனையாவது ஜனாதிபதியை தேர்ந்தெடுக்க நடைபெறவுள்ளது?
1. 44 2. 45 3.48 4. 49

14.ஐ.தே.க. தனது எத்தனையாவதுஆண்டு நிறைவை கொண்டாடியது?
1. 65 2. 68 3.70 4. 80

15.இலங்கை எந்தநோயினைமுற்றாக ஒழித்ததாகஅண்மையில் அறிவித்தது?
1. டெங்கு 2.யானைக்கால்
3.மலேரியா 4.சிக்கின்குனியா

16.பாரதலக்ஸ்மன் கொலைவழக்கில் மரணதண்டனைபெற்றவர் யார்?
1.றொஹான் 2.மொஹான் பீரிஸ் 3.துமிந்த சில்வா 4.ஹிருணிகா

17.அடுத்த ஒலிம்பிக் நடைபெறவுள்ள இடம் எது?
1.பிரேசில் 2.டோக்கியோ 3.லண்டன் 4.பிரான்ஸ்

18.டெரிபல் என்பது எதை அளவிட பயன்படுத்தப்படும்
1.ஒளி 2.ஒலி 3.கதிர்வீச்சு 4.வெப்பம்

19.பராஒலிம்பிக் நடைபெறவுள்ள நாடு எது?
1.பிரேஸில் 2.இத்தாலி 3.சீனா 4.அமெரிக்கா

20. 'Six Machine' என்பது யாருடைய வாழ்க்கை வரலாறு?
1.யுவராஜ் சிங் 2.கிறிஸ் கெய்ல் 3.சேவாக் 4.சச்சின்

21.மாலைதீவின் தேசியகீதத்திற்கு இசையமைத்த இலங்கையர்?
1.மொஹமட் ரபிக் 2.அமரதேவா
3.செனுகிகப் 4.வில்லியம் கோபல்லாவ

22.இலங்கையின் மிக நீளமான பாலம் எது?
1.கன்னியா பாலம் 2.களனி பாலம்
3.நாவற்குழிபாலம் 4.புங்குடுதீவு பாலம்

23.மஞ்சள் ஆறு எனஅழைக்கப்படும் நதி?
1.நைல் நதி 2.குவாங்கோ 3.மிசுசிமிசுப்பி 4.இந்து நதி

24.அதிக இஸ்லாமியர்கள் வாழும் நாடு?
1.இந்தோனேசியா 2.ஈராக் 3.சவுதிஅரேபியா 4.ஈரான்

25.யேசுகிறிஸ்துவின் மிக உயரமானசிலை உள்ளநாடு?
1.வத்திக்கான் 2.பிரேசில் 3.பலஸ்தீனம் 4.லண்டன்

26.உலகிலேயே மிகப்பெரியதேசியகொடி கொண்டநாடுஎது?
1.இந்தியா 2.அவுஸ்திரேலியா 3.டென்மார்க் 4.அமெரிக்கா

27.காகிதம் எந்நாட்டவரால் கண்டுபிடிக்கப்பட்டது?
1.சீனா 2.ஜப்பான் 3.இத்தாலி 4.ரஷ்யா

28.'ஹாமொனி என்ற இசை யாரால் தோற்றுவிக்கப்பட்டது?
1.A.R.ரகுமான் 2.இளையராஜா
3.ஜோன் ரிக்ஸ் 4.ரிச்சார் மெக்

29.2018 கொமன் வெல்த் போட்டிஎங்கேநடைபெறஉள்ளது?
1.அவுஸ்திரேலியா 2.இந்தியா
3.நேபாளம் 4.பூட்டான்

30.இலங்கையின் தொழில் அற்றவர் சதவீதம்?
1. 4.6% 2. 4.4% 3. 4.2 % 4.4.8%

31.திவிநெகும அபிவிருத்திக் திணைக்களத்திற்கு பொறுப்பானஅமைச்சர் யார்?
..........................................................................................

32.சமுதாய அபிவிருத்தி நிகழ்ச்சி கருதிவெளிவரும் பத்திரிகையாது?
..........................................................................................

33.கிராமிய அபிவிருத்தியை மேற்கொள்ளும் நோக்கில் உருவாக்கப்பட்டசெயற்றிட்டம் யாது?
..........................................................................................

34.சர்வதேச வறுமைஒழிப்புதினம் எப்போதுஅனுஷ்டிக்கப்படுகிறது?
..........................................................................................

35.சமுர்த்தி அதிகார சபை எப்போது உருவாக்கப்பட்டது?
..........................................................................................

36.வாழ்வின் எழுச்சி திணைக்களம் உருவாக்கப்படுவதற்கு ஏதுவானசட்ட மூலம் யாது?
..........................................................................................

37.பால் உற்பத்தியின் தன்னிறைவை எய்துவதற்கான தேசிய கொள்கையை வெல்வதற்காக மத்திய வங்கி அறிமுகப்படுத்திய திட்டம்?
..........................................................................................

38.இலங்கையிலே இறால் வளர்ப்பிற்கானகண்டல் தாவரவனங்கள் பாரியளவில் அழிக்கப்பட்டுள்ள இரண்டு மாகாணங்களில் பெயர் குறிப்பிடுக?
..........................................................................................

39.தற்போதைய கடும் மழைமற்றும் நீடித்தவரட்சிஆகியகாலநிலைமாற்றங்களினால் தாக்கம் செலுத்தும் முக்கியகாலநிலைதோற்றப்பாடு யாது?.
..........................................................................................

40.உலக நாடுகளினால் மரணதண்டனைஅமுல்படுத்துவதற்கு எதிராக செயற்படும் அரசசார்பற்ற சர்வதேச ஒழுங்கமைப்பு யாது?
..........................................................................................

41.ஐக்கிய நாடுகள் சபையின் மூலம் எப்போது சர்வதேச சிறுவர் தினம் பிரகடனப்படுத்தப்பட்டது?
..........................................................................................

42.சார்க் வலய நாடுகளுக்கிடையே குறைந்த மக்களைகொண்ட 2 நாடுகளை குறிப்பிடுக?
..........................................................................................

43.இலங்கை கல்வித்துறையிடம் காணப்படும் 3 அமைச்சுக்களைகுறிப்பிடுக?
..........................................................................................

44.உலகிற்கு இலவசகல்வி முறையைஅறிமுகப்படுத்திய நாடு எது?
..........................................................................................

45.இலங்கையின் முதல் முதலில் தமிழில் வெளிவந்த செய்தித்தாள் எது?
..........................................................................................

46.இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ளதேசிய தொழில் தகைமைச் சான்றிதழ் (NVQ) அறிமுகப்படுத்திய நாடு யாது?
..........................................................................................

47.உலகில் முதலாவது நாணயத்தாளை வெளியிட்டநாடு எது?
..........................................................................................

48.உலக ஆசிரியர் தினத்திற்கு சிபார்சுசெய்த இலங்கையர் யார்?
..........................................................................................

49.இலங்கையின் கட்டாயக் கல்விக்கானவயதெல்லையாது?
..........................................................................................

50.அண்மையில் 150 முதலாவது ஆண்டுநிறைவைக் கொண்டாடிய திணைக்களம் எது?
..........................................................................................

## விடைகள்

1. 3
2. 2
3. 1
4. 1
5. 3
6. 3
7. 2
8. 1
9. 1
10. 3
11. 2
12. 1
13. 2
14. 3
15. 3
16. 3
17. 2
18. 2
19. 1
20. 2
21. 2
22. 1
23. 2
24. 1
25. 2
26. 3
27. 1
28. 2
29. 1
30. 1
31. S.B.திசாநாயக்கா
32.சமாஜா
33.கமநெகும
34.ஒக்டோபர் 17
35. 1996
36. 2013 ஆண்டு 1ஆம் இலக்கவாழ்வின் எழுச்சிசட்டம்
37. பாற்பண்ணை கடன் திட்டம்
38.மேல் மாகாணம், வட மாகாணம்
39. எல்நினோ
40.சர்வதேச மன்னிப்புச் சபை
41. ஒக்டோபர் 01
42. மாலைதீவு, பூட்டான்
43 கல்வியமைச்சு,உயர்கல்வி அமைச்சு, வாழ்க்கை தொழில் மற்றும் தொழில்நுட்ப கல்வியமைச்சு
44. நெதர்லாந்து
45. உதயதாரகை
46.அவுஸ்திரேலியா
47.சீனா
48.மென்டிஸ்
49.6-14
50.பொலிஸ் திணைக்களம்.

## குற்றம்சாட்டப்பட்டவர்களை நீதிக்குமுன் கொண்டு வருதல் உள்ளிட்ட

# இன்னும் பல்வேறு விடயங்களை இலங்கை செய்ய வேண்டியுள்ளது

## ஐ.நா.செயற்குழு சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**இலங்கையில் சாத்தியமான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும் இன்னும் பல விடயங்களை செய்யவேண்டியுள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபையின் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான செயற்குழு தெரிவித்துள்ளது.**

குற்றச் சம்பவங்களுக்கு காரணமானவர்கள் நீதிக்கு முன் கொண்டுவரப்பட வேணடும் என்பதே முக்கியமானதாகும் என்று செயற்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் அமைக்கப்படவுள்ள காணாமற்போனோர் தொடர்பான அலுவலகம் போன்ற விடயங்கள் முன்னேற்றகரமானவையாகும் என்று குழு தெரிவித்துள்ளது.

தமது இலங்கை விஜயத்தின்போது இந்த விடயங்களை தாம் அவதானித்ததாக நேற்று முன்தினம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் குறித்த குழு அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக நீதிப் பொறிமுறைகளின்போது சர்வதேச பங்களிப்புக் குறித்து இலங்கை ஆராயவேண்டும் என்றும் அந்தக்குழு பரிந்துரை செய்துள்ளது.

இதேவேளை, இந்த அமரவின் போது கருத்துரைத்த இலங்கையின் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கான வதிவிடப் பிரதிநிதி ரவிநாத ஆரியசிங்க, தமது நாடு, ஐக்கிய நாடுகளின்செயற்குழு, ஒத்துழைப்புடன் செயற்படும் என்று தெரிவித்துள்ளார்.

உண்மையை கண்டறிதல், நீதிக்கான உறுதி மற்றும் மீண்டும் எழாத பிரச்சினை என்பவை தொடர்பில் தமது அரசாங்கம் உறுதியுடன் செயற்படுவதாகவும் ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்தார். (இ-3-10)

## வரிச் சலுகை வழங்கப்பட்டுள்ள பியர் நிறுவனத்தால் பாரிய இழப்பு

மலேசியா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளில் இருந்து இலங்கையில் பியர் இறக்குமதி செய்யும் நிறுவனம் ஒன்று கடந்த 3 மாதங்களில் மாத்திரம் அதிக வருமானத்தை ஈட்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள குறித்த நிறுவனத்திற்கு மாத்திரம் நிதி அமைச்சு பாரிய வரிச்சலுகையை வழங்கியுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன் காரணமாக குறித்த நிறுவனத்தினால் இறக்குமதி செய்யப்படும் பியர் பானங்களுக்கு விசேட வரிச் சலுகை வழங்கப்பட்டுள்ளதால அரசு க்கு 10 இலட்சத்துக்கு அதிக மான சுங்கவரி இழப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற போதை ஒழிப்பு மாநாட்டில் கலந்துகொண்ட ஜனாதிபதி நாட்டில் உள்ள பெண்களில் அதிகமானோர் பியர் குடிப்பதற்கு பழகிவிட்டதாகவும் இலங்கையில் அதிகளவு பியர் விற்பனை செய்யப்படுவது வடக்கில் என்றும் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-3-10)

## இலங்கை - இந்தியாவிற்கிடையில் மீண்டும் ஒரு ஒப்பந்தம் கைச்சாத்து

இலங்கை - இந்தியாவிற்கிடையில் நேற்று முன்தினம் மீண்டும் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை மாவட்ட கடற்றொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின்வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் குறித்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்திய கடல்வள பாதுகாப்பு அமைச்சர் மற்றும் இலங்கை கடற்றொழில் அமைச்சர் மகிந்த ஆகியோருக்கிடையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

குறித்த ஒப்பந்தத்தின் கீழ் 300 மில்லியன் பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் இலங்கைக்கு வழங்கப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.


மேலும் குறித்த ஒப்பந்தம் மூலம் 75.000 மீனவர்கள் மற்றும் விவசாயிகள் நிவாரணங்களை பெறவுள்ளதாக கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது. (இ-3-10)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 838

றொகான்





தர்சி




சிவகுமார்





குட்டி மணி




சங்கர்




தர்மா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தமிழர் விவகாரத்தில் காலம் கடந்த ஞானம்!

அண்மையில் ஒரு சந்திப்பின் போது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் சமாதான முயற்சிகளைப் பற்றியும் இனப்பிரச்சினைக்கான தீர்வைப்பற்றியும் பேசிக் கொண்டிருந்தனர்.

நாட்டின் பிரதான கட்சிகள் இரண்டும் இணைந்து ஆட்சியை அமைத்திருந்தாலும் இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்டுவதற்கான முயற்சிகள் மிகக் கடினமாகத்தான் உள்ளன என்று ரணில் விக்கிரமசிங்க சந்திரிகாவிடம் சொல்லியிருக்கிறார்.

இதற்கு இப்படிக் கடினமான ஒரு பணியைத்தான் மிகமிகக் கடினமான காலத்தில் நாங்கள் புலிகளோடு முன்னெடுத்திருந்தோம். அப்போது அதை ஐ.தே.க. இலகுவாகக் குழப்பிப் பலமான எதிர்ப்பைக் காட்டியது. அப்பொழுது சமாதானம் எட்டப்பட்டிருந்தால் இன்று இந்த நாட்டுக்கு இத்தனை பெரிய இழப்புகளும் நெருக்கடிகளும் வந்திருக்காது மட்டுமல்ல இப்பொழுது நீங்கள் சமாதானத்தை உருவாக்குவதற்காகவும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காகவும் இப்படியெல்லாம் சிரமப்படவும் வேண்டியிருக்காது என்று சந்திரிகா குமாரதுங்க பதில் சொன்னாராம்.

அது உண்மையே என்று கூறியிருக்கிறார் ரணில்.

தன்னுடைய அந்தத் தவறுகளுக்காக இப்பொழுது அவர் வருந்தக்கூடும். அந்தத் தவறுகளின் அறுவடையாக தீர்வை எட்டிச் சமாதானத்தை உருவாக்க வேண்டிய பொறுப்பையும் நெருக்கடியையும் தான் சந்தித்துக் கொண்டிருக்கிறேன் என்பதும் புரிந்திருக்கும்.

இப்படி இலங்கையின் இனப்பிரச்சினையைப் பற்றியும் அதற்கான தீர்வு முயற்சிகளின் போது தாம் விட்ட தவறுகள் மற்றும் நடந்து கொண்ட முறைகளைப் பற்றியும் தமது அணுகுமுறைகளைப் பற்றியும் காலம் கடந்த ஞானம் அல்லது காலம் பிந்திய உண்மை விளங்குதல்கள் பலரிடமும் பல இடங்களிலும் ஏற்பட்டிருக்கின்றன. இவற்றை ஒவ்வொருவரும் பகிரங்கமாக வெளிப்படுத்தி வருகின்றனர்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியில் தாம் தவறு விட்டிருக்கிறோம் என்று இந்தியா கூறியிருக்கிறது. இலங்கைக்கான முன்னாள் இந்திய தூதுவர் ஜே.என்.டிக்ஸித் உட்பட பெரும்பாலான இந்தியத் தலைவர்களும் பிரதானிகளும் தங்கள் தவறை வெளிப்படுத்தியிக்கிறார்கள்.

இலங்கையில் நடந்த இறுதிப் போரின் போது ஐக்கிய நாடுகள் சபை பொறுப்பாக நடந்து கொள்ளத் தவறியதை உணர்ந்திருக்கிறது என்று பான் கீ மூனின் அண்மையில் இலங்கைக்கு மேற்கொண்டிருந்த விஜயத்தின் போது சொல்லியிருக்கிறார்.

ராஜீவ்காந்தியை கொன்றதும் இந்தியாவுடன் பகைத்ததும் பெரியதொரு தவறு. அதைப்போல முஸ்லிம் மக்களை வெளியேற்றியதும் அவர்களோடு முரண்பட்டதும் வரலாற்றுத் தவறே என்று புலிகள் தெரிவித்திருந்தனர்.



**ஆயிரக்கணக்கில் உயிர்கள் பலியான பின்னரும் இன்னும் தொடரும் வரலாற்றுத் தவறுகள்**

புலிகளுடனான அணுகுமுறையில் அமெரிக்காவின் தவறுகளும் அவசர நிலைப்பாடுகளும் உண்டு என இலங்கைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதர் ஜிவ்ரி லுன்ஸ்ரெட் கூறியிருக்கிறார்.

சமாதான முன்னெடுப்புக்களில் மேலும் நாங்கள் கவனமுடன் செயற்பட்டிருக்க வேண்டும் என சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதில் பிரதான பாத்திரத்தை ஏற்றிருந்த நோர்வே தெரிவித்திருக்கிறது. எரிக்சோல்கெய்ம் இதைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்.

சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதில் தவறுகள் நடந்திருக்கின்றன. அதற்காகப் பகிரங்க மன்னிப்புக் கோருகிறேன் என கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கான ஏற்பாடுகளையொட்டி யாழ்ப்பாணம் வந்திருந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியிருந்தார். கடந்த காலத்தில் ஏற்பட்டிருந்த அரசியல் நெருக்கடிகளுக்கும் தவறுகளுக்கும் நாமும் ஒரு வகையில் பங்காளராகவும் பொறுப்பாளிகளாகவும் இருந்திருக்கிறோம். அந்தத் தவறுகளை ஒரு பாடமாகக்கற்றுக்கொண்டு புதியதொரு அரசியல் பிரவேசத்தை புதியதொரு அரசியற் செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும் என்று சிந்திக்கிறோம் என இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நாடு திரும்பியிருந்த முன்னாள் வடக்கு, சிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் சொல்லியிருந்தார்.

கடந்த அரசாங்கங்கள் இழைத்த தவறுகளை இனி மேலும் தொடரக்கூடாது. நமது காலத்திலேயே இன முரண்பாடுகளுக்கான தீர்வைக்கண்டு நிரந்தர சமாதானத்தை உருவாக்கி விடவேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியிருந்தார்.

ஏற்கனவே நடந்த தவறுகளையெல்லாம் தொடர்ச்சியாக நாமும் விடுவோமானால் அர்த்தமில்லை. அது நாட்டை சீரழித்து விடும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருக்கிறார்.

இப்படிப் பகிரங்கமாகவே தமது காலத்தவறுகளைப் பற்றிச் சொன்ன தரப்புகள் எல்லாம் அந்தத் தவறுகளை பின்நாட்களில் திருத்திக் கொண்டனவா? என்றால் நிச்சயமாக இல்லை என்றே சொல்ல முடியும். ஒரு சிலர் மெய்யாகவே தமது தவறுகளை உணர்ந்து அவற்றுக்கான பொறுப்புக் கூறலை முன்வைத்து புதிய பயணங்களை மேற்கொள்வதற்கு ஆயத்தமாக உள்ளனர். குறிப்பாக வரதராஜப் பெருமாள் போன்றவர்களின் பகிரங்க நிலைப்பாடுகளும் புதிய செயற்பாடுகளும் அந்த வகையில் அமைந்திருப்பதாகத் தெரிகின்றன.

ஆனால் ஏனைய தரப்பினர் அப்படியல்ல. அவர்கள் தமது முகத்துக்கு நேரே எழுப்பப்படும் கேள்விகளுக்கு சமாதானத்தைச் சொல்வதற்காகவே இந்தப் பதிலைச் சொல்லியிருக்கிறார்கள் என்று தெரிகிறது. அப்படியல்ல அவர்களும் தமது தவறுகளை மெய்யாகவே உணர்ந்திருக்கிறார்கள் என்றால் அந்த மெய்யுணர்வின் வழியாக–உண்மையை உணர்ந்ததன் வழியாக அவர்கள் முதலில் தமது தவறுகளுக்குப் பொறுப்புக் கூறியிருப்பர். அதாவது தமது தவறுகளுக்கான பொறுப்பை ஏற்றிருப்பர். அது கற்றுக்கொண்ட பாடங்களின் முதற்படியாக அமைந்திருக்கும். அப்படிக் கற்றுக் கொண்ட பாடங்களின் வழியாக உண்மையை உணர்ந்து பொறுப்புக் கூறுவதாக இருந்தால் நிச்சயமாக அவர்கள் தொடர்ந்து தவறுகளை இழைப்பதற்கு காரணமாக இருந்திருக்க மாட்டார்கள். ஆனால் நடந்தது என்ன? நடந்துகொண்டிருப்பது என்ன? அதே தவறுகள் தானே!

ஏனென்றால் இவர்கள் விட்ட தவறுகள் ஒன்றும் சாதாரண தவறுகளல்ல. மிகப் பாரதூரமான தவறுகள். பல ஆயிரக்கணக்கான உயிர்களைப் பலியெடுத்த தவறுகள். பல தலைமுறைகளின் வாழ்க்கை அழிவுக்குக் காரணமான தவறுகள்.தலைமுறைகளின் வழியாக உருவாகிவந்த அடையாளங்களின் அழிவுக்குக் காரணமான தவறுகள். ஆகவே தான் இவை வரலாற்றுத் தவறுகள் என்றாகியுள்ளன.

உண்மையில் இவை படுகொலைகளோ உயிர்ப்படுகொலை, அடையாளப்படுகொலை, வாழ்வுப் படுகொலை, சுற்றுச்சூழல் படுகொலை, அரசியற் படுகொலை எனப்பல நிலையிலான கொலைகள். கொலையென்றால் அது குற்றம். கொலைக் குற்றத்துக்கான தண்டனை எப்படியானது என்று அனைவருக்கும் தெரியும்.

ஒரு உயிரைக் கொலை செய்தாலே அல்லது ஒரு உயிர் பலியாகக் காரணமாக இருந்தாலே அதற்கு ஆயுள் தண்டனையோ, மரணதண்டனையோ விதிக்கப்படும். ஆனால் இத்தனை ஆயிரக்கணக்கானவர்களின் கொலைக்கும் உயிரிழப்புக்கும் காரணமானவர்கள் எந்தத் தண்டனைக்கும் உட்படாமல் தப்பி பொது வெளியில் அதே பிரமுகர் முகத்தோடு உலா வருகின்றனர். இதையெல்லாம் வெறுமனே ஒரு வார்த்தையில் தவறுகள் நடந்து விட்டன என்று சொல்லி இலகுவாகக் கடந்து சென்றுவிட முடியாது. அல்லது இது நிலைமைக்கேற்ப சமாளித்துக் கொள்ளும் தந்திரோபாய வார்த்தையுமல்ல.

இந்தத் தவறுகளுக்கான பரிகாரம் இரண்டு வகையில் அமைய வேண்டும். ஒன்று தவறுகளை மெய்யாகவே உணர்ந்து அவற்றைப் பொறுப்பேற்பது.

இது மிகக் கண்ணியமான ஒரு செயற்பாடு. உண்மையுணர்வதன் வழியாக நிகழும் பெரும் பண்பாட்டு நிகழ்ச்சி. மனிதநேயத்தின் அடிப்படைகளை அதன் வேர்களைப் பலப்படுத்தும் 'உலகப்பொதுமைக்குரிய அறத்தின்பாற்பட்ட செயலாகும். அப்படித் தவறுகளைப் பொறுப்பேற்கும் போது அவற்றுக்குப் பரிகாரம் காண வேண்டிய ஒரு கடப்பாடு ஏற்படும்.

இரண்டாவது பரிகாரம் காண்பது. அதாவது தவறுகளுக்கான நிவாரணம் வழங்குதல் அல்லது நீதியை வழங்குதல்என்பதாகும். இறுதிவிளைவாக நீதியை வழங்கும் போதே தவறுகளை இழைத்ததற்கான கொலைகளுக்கான பரிகாரத்துக்கான பாதிப்பங்கை வழங்கியதாக அமையும். இறந்தவற்றையும் அழிந்தவற்றையும் நிச்சயமாக மீட்டெடுக்க முடியாது. அதன் வழியாக பாதிக்கப்பட்ட தரப்பினர்கள் அனுபவிக்க நேர்ந்த அவலத்தையும் இழப்பின் சுமையையும் வலியையும் குறைக்க முடியுமே தவிர பாதிக்கப்பட்ட தரப்பினர் கோருகின்ற நீதியை வழங்கி விடவும் முடியாது. ஆகவே குறைந்த பட்சம் பாதிக்கப்பட்ட மக்களின் உளநிலையில் ஆறுதலையும் சமனிலையையும் அடைவதற்குரிய வகையில் தமது நீதி வழங்கலையும் நியாயச் செயற்பாடுகளையும் முன்னெடுக்க வேண்டும்.

ஆனால் அப்படியான எந்த நம்பிக்கைச்செயல்களும் பொறுப்புக்குரிய தரப்பினரால் முன்னெடுக்கப்படவில்லை. இதுவே ஏமாற்றமளிப்பதாகும்.

இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் ஒரு எல்லைக்கு மேல் தலையிட முடியாது என்று ஒரு சப்பைக் கட்டு சாட்டுப்போக்கைச் சொல்லி விட்டு ஐ. நாவும் அமெரிக்காவும் இந்தியாவும் தங்கள் நலன்களை அடைவதில் அக்கறையாக இருக்கின்றன. பாதிக்கப்பட்ட தரப்பாகிய தமிழ், முஸ்லிம் மக்களின் ஆதரவைப் பெறுவது இந்தச் சக்திகளுக்கு இன்று ஒரு தவிர்க்க முடியாத ஒரு தேவையாகும். கொழும்பில் தமக்குச் சாதமான ஒரு நிலையை உருவாக்குவதற்கு தமிழ், முஸ்லிம் தரப்பினரின் ஆதரவு தேவை. எனவே தமிழ், முஸ்லிம் மக்களின் மனதை அதற்குத் தோதாக மாற்றம் செய்ய வேண்டும் என்பதற்காகவே தமது தரப்பில் தவறுகள் நடந்து விட்டன என்ற ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தை இவை வழங்குகின்றன. இது பொய் மனதின் தந்திரோபாயச் செயலே.

இல்லை இதை நாம் உண்மையாகவே உணர்ந்தே செய்திருக்கிறோம் என்று இவர்கள் சொன்னால் இந்த வார்த்தைக்கு செயல்பூர்வமான வடிவத்தைக் கொடுக்க வேண்டும்.

அது இவற்றினால் முடியாத ஒன்றல்ல. இன்றைய உலக யதார்த்தத்தின்படி அமெரிக்கா, ஐ.நா., இலங்கை அரசு, சந்திரிகா, ரணில், மைத்திரி, இந்தியா என எல்லாத் தரப்புகளுமே ஒரே நேர்கோட்டில் தான் நிற்கின்றன. இனப்பிரச்சினைத் தீர்வில் தவறான அணுகு முறையைக் கடந்த காலத்தில் கடைப்பிடித்து விட்டோம் என இவை அனைத்தும் சொல்கின்றன என்றால் இன்னும் தாமதமேன்? இனியாவது சரியாக நியாயமாக உரிய தீர்வுக்கு முயற்சிக்கலாம். ஒத்துழைக்கலாமே. இப்போதாவது தங்களின் பாவச் செயல்களுக்கான பரிகாரத்தைக் காணலாம்.

ஆனால்இவைஒருபோதுமே அப்படிச் செய்யப் போவதில்லை. ஏனென்றால் இங்கே நடந்து கொண்டிருப்பது அரசியலாகும். அரசியல் என்பது நலன்களின் அடிப்படையிலானது. அதிலும் நாடுகளின் அரசியல் ஆதிக்கச் சக்திகளின் அரசியல் என்பது முற்றுமுழுதாக நலன்களின் அடிப்படையன்றி வேறில்லை. அவற்றில் அறம் என்பது சார்நிலைப்பட்டதே. சார்நிலைப்பட்ட நீதி முறைமையே இவற்றின் அகராதியில் உள்ளது.

இதற்கு எதிராக நீதியான ஒரு தீர்ப்பைப் பெற வேண்டுமானால் அதற்கு மிகக்கூர்மையான புத்திசாலித்தனமான செயற்பாடுகளும் ஒன்றுபட்ட அர்ப்பணிப்பும் கொண்ட நடவடிக்கைகளுமே உதவும். பாசாங்கு வார்த்தைகள் எச்சிறு பரிகாரத்தையும் தந்து விடாது. அது ஒப்புக்கு அழும் நாடகமே.

தரையை அல்லது கடலைப் பார்க்கும் போது பின்னணியில் வானம் தொடுவதாகத் தெரியும். அதை நோக்கி நாம் நகர்ந்து சென்றால் கிட்டப் போய்த்தொட்டுவிடலாம்போலிருக்கும்.

உண்மையில் அங்கே வானம் தொடுவதில்லை. எவ்வளவு தூரம் போனாலும் வானத்தை நாங்கள் தொடவும் முடியாது. அது ஒரு தோற்றம் மட்டுமே.

ஏறக்குறைய இப்படியான ஒரு நிலையில் தான் இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வைப் பற்றிய அறிவிப்புகளும் நம்பிக்கைகளும் உள்ளன. சில சந்தர்ப்பங்களில் அவை உண்மை போலத் தோற்றமளிக்கின்றன. ஆனால் அது ஒரு கானல்.

புதிய அரசியலமைப்புத் திருத்தமும் பெரும்பாலும் இப்படியான ஒரு நிலையில் தானிருப்பதாகத் தோன்றுகிறது. அடுத்த வரவு செலவுத் திட்டத்திற்குள் அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக அரசாங்கம் அறிவித்திருந்தது. ஆனால் இப்பொழுது பிரதமர் அதை ஒத்திப் போட்டிருக்கிறார். புதிய அறிவிப்பின்படிஅதுஅடுத்தஆண்டு முற்பகுதியில் தான் வரவு செலவுத்திட்டத்தின் பின்னர் தான் பாராளுமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படும் என்று கூறியிருக்கிறார்.

தொடுவானத்தை யாரும் தம் கைகளால் தொட்டதாக யாரும் அறிந்ததில்லை.

**கருணாகரன்**

## புலிச்சந்தேக நபரைச் சுட்டுக்கொன்ற மேஜருக்கு ஜனாதிபதியால் பொதுமன்னிப்பு வழங்கப்படலாம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இயக்க சந்தேக நபர் ஒருவரைச் சுட்டுக்கொன்ற குற்றச்சாட்டில், ஒத்தி வைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதித்தும், 2 மில்லியன் ரூபா இழப்பீடு செலுத்துமாறும் நீதிமன்றத்தினால் உத்தர விடப்பட்ட ஓய்வுபெற்ற இராணுவ மேஜர் தர அதிகாரிக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படலாம் என்று கூறப்படுகிறது.

1998ஆம் ஆண்டு பருத்தித்துறை இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகள் இயக்க சந்தேகநபர் ஒருவரை.லெப்.விமல் விக்கிரமகே என்ற அதிகாரி சுட்டுக்கொன்றார்.

சந்தேக நபர் கைவிலங்கிடப்பட்டிருந்த நிலையில் இந்தக் கொலை இடம்பெற்றது.

எனினும், சந்தேக நபர் தப்பிச் செல்ல முயன்ற போதே, தவறுதலாகச் சுட்டுக் கொல்லப்பட்டார் என்றே விமல் விக்கிரமகேக்கு எதிராக சட்டமா அதிபரால் வழக்குத் தொடுக்கப்பட்டது.

இந்த வழக்கு நடந்து கொண்டிருந்த போது, மேஜர் வரை பதவி உயர்வு பெற்ற விமல் விக்கிரமகே ஓய்வு பெற்றிருந்தார்.

இந்த வழக்கின் தீர்ப்பு அண்மையில் கொழும்பு மேல் நீதிமன்றினால் அறிவிக்கப்பட்டது.

குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதையடுத்து ஒத்திவைக்கப்பட்ட இரண்டு ஆண்டு சிறைத்தண்டனையும், கொல்லப்பட்டவரின் குடும்பத்தினருக்கு 2 மில்லியன் ரூபா இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

மேஜர் விமல் விக்கிரமகே இழப்பீட்டைச் செலுத்துவதற்கு உதவும் வகையில் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணி, நிதிசேகரிக்கும் பரப்புரை ஒன்றை மேற்கொண்டுள்ளது.

இந்த நிலையில் அவருக்கு ஜனாதிபதியால் பொது மன்னிப்பு அளிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.

எனினும், மேஜர் விமல் விக்கிரமகே பொதுமன்னிப்பைக் கோரவோ, இழப்பீட்டைச் செலுத்துமாறு இராணுவத்தைக் கோரவோ இல்லை என்று அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

மேஜர் விமல் விக்கிரமகே இராணுவத்தில் பணியாற்றிய போது, சேவையில் நல்ல பதிவுகளைக் கொண்டிருந்தவர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொசான் செனிவிரத்ன தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3-10)

# இனவாதப் பூச்சாண்டி காட்டி சிங்களவர்களை தூண்டாதீர்

## அமைச்சர் மனோ கணேசன் கண்டிப்பு

இனவாத பூச்சாண்டி காட்டி சிங்கள மக்களை தூண்டி விட முயற்சிக்க வேண்டாம். இது சகவாழ்வுக் காலம். நாம் இலங்கையர் என்று முதலில் சொல்லுவோம். இரணடாம், மூன்றாம், நான்காம் இடங்களை இனத்துக்கும், மொழிக்கும், மதத்துக்கும் வழங்குவோம். இதை சிங்கள சகோதரர்களுக்கும் நான் சொல்கிறேன்என அமைச்சர்மனோ கணேசன் தெரிவித்தார்.

"சிங்களவர்களே எழுந்து நில்லுங்கள்" என்று அநாகரிக தர்மபால அன்று சொன்னார். "இலங்கையர்களே எழுந்து நில்லுங்கள்" என்று இன்று நான் சொல்கிறேன். இதைத்தான் ஜனாதிபதியும் சொல்கிறார்.

தென்னாபிரிக்காவில் உதித்த தேசிய தலைவர் நெல்சன் மண்டேலா, ஆட்சிக்கு வந்ததும் வெள்ளையர்களை வெறுக்கவில்லை. அவர்களையும் உள்வாங்கித்தான் நாட்டை உருவாக்கினார். அதே நாட்டின் பக்கத்து நாடான சிம்பாவேயில், ஆட்சிக்கு வந்த ரொபர்ட் முகாபே வெள்ளையர்களை வெறுத்து ஒதுக்கினார். இதனால் அந்நாடு அழிந்தது. அதுவேதான் இலங்கையிலுமநடந்தது. 1948ஆம்ஆண்டு ஆட்சி பலம் வந்தவுடன் நீங்கள் தமிழர்களை ஒதுக்கினீர்கள். இதனால் நாடு அழிந்தது. ஒரு காலத்தில், தென்னிலங்கை சிங்கள தலைவர்கள் வடக்கே சென்று சமஷ்டி முறைமையை முன் வைத்தார்கள். அப்போது தமிழ் தலைமை அதை நிராகரித்தது. அப்படி தெற்கில் இருந்து வந்த சமஷ்டி யோசனையை நிராகரித்த தமிழர்கள், பிற்காலத்தில் 180 பாகை தலைகீழாக மாறி, ஏன் தனி ஒரு நாட்டை கோரினார்கள் என்ற கேள்விக்கு விடை தேடுங்கள். உரிய விடை கிடைக்கும் எனறும் தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர், தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.


சிங்கள மொழியிலான அரசியல் விவாதத்தில் அமைச்சர் மனோ கணேசன், பொது எதிரணி எம்.பி கெஹலிய ரம்புக்வெல, விமல் வீரவன்ச, கட்சி பேச்சாளர் முஹமட் முஸம்மில், மேல்மாகாண முதல்வர் இசுறு தேவப்பிரிய ஆகியோர் கலந்துகொண்டனர். இதில் ஒன்றுபட்ட எதிரணியினருடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்ட அமைச்சர் மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

இந்த நாட்டின் பிரதான பிரச்சினைகள் யுத்தம், பயங்கரவாதம் என அடுக்கிக் கொண்டு போகாதீர்கள். இந்த யுத்தத்திற்கு மூல காரணம் உள்ளது. அது இனப்பிரச்சினை. அதுதான் முதல பிரச்சினை. அதற்கு நாம் பதில் தேடுவோம். இந்த நாட்டுக்கு முதலில் வெளி நாட்டுக காரர்களை அழைத்து வந்ததும், ஐநா சபையில் சென்று முறையிட்டதும் தமிழர்கள அல்ல. அதை செய்தது மகிந்த ராஜபக்ஷ. 1988ல் சிங்கள மக்கள் மத்தியில் ஒரு மனிதவுரிமை காவலனாக தன்னை காட்டிக்கொண்டு, துணைக்கு வாசுதேவ நாணயக்காரவையும் அழைத்துக்கொண்டு அவர் ஜெனீவா போனார். மறந்துவிட்டதா? தெற்கில் இருந்ததுதான் முதலில் சமஷ்டி கோரிக்கை வடக்குக்கு சென்றது மறந்து விட்டதா? பண்டார நாயக்கவை சுட்டுக் கொன்று முதன்முதலில் அரசியல படுகொலை கலாசாரம் தெற்கில்தான் ஆரம்பமானது, மறந்து விட்டதா? அரசுக்கு எதிராக ஆயுதம் தூக்கும் கலாசாரம் ஜேவிபியால் 1971ல் முதன் முதலாக தெற்கில்தான் ஆரம்பமானது, மறந்துவிட்டதா?

ஆகவே எல்லாவற்றுக்கும் தமிழர்களை மாத்திரம் தூற்ற வேண்டாம். இனவாத பூச்சாண்டி காட்டி சிங்கள மக்களை தூண்டிவிட முயற்சிக்க வேண் டாம். இது சகவாழ்வுக் காலம். நாம் இலங்கையர் என்று முதலில் சொல்லுவோம். இரண்டாம், மூன்றாம், நான்காம் இடங்களை இனத்துக்கும், மொழிக்கும், மதத்துக்கும் வழங்குவோம். இதை உங்களுக்கும் சிங்கள சகோதரர்களுக்கும் நான் சொலகிறேன்.

இதற்கு பதிலளித்த பொது எதிரணி எம்.பி கெஹலிய ரம்புக்வெலவும், விமல் வீரவன்ச கட்சி பேச்சாளர் முஹமட் முஸம்மிலும், சிங்கள மக்களுக்கு தாம் உண்மையைதான் கூறுவதாகவும், உண்மையை எடுத்து கூறுவது இனவாதம் என்றால், தாம் இனவாதிகளாகவே இருக்க தயார் என்றும் பதில் கூறினார். (இ)

## தெஹிவளை மிருகக்காட்சிச்சாலையில் 3 குட்டிகளை ஈன்ற ஜேர்மன் சிங்கம்



(கொழும்பு)

கொழும்பு தெஹிவளை தேசிய மிருகக்காட்சிச்சாலையில் புதிதாக மூன்று சிங்கக் குட்டிகள் பிறந்துள்ளன.

ஜேர்மனியின் ஹம்பர்க் மிருகக்காட்சிச்சாலை மற்றும் தென் கொரியாவின் சியோல் மிருகக்காட்சிச் சாலை ஆகியவற்றிலிருந்து இரண்டு சிங்கங்கள் தெஹிவளை மிருகக் காட்சிச் சாலைக்கு கொணடு வரப்பட்டன.


இவ்வாறு கொண்டு வரப்பட்ட பெண் சிங்கத்துக்கு சகீனா எனவும், ஆண் சிங்கத்துக்கு தோர் எனவும் பெயரிடப்பட்ட நிலையில், குறித்த இரண்டு சிங்களுக்கும் மூன்று குட்டிகள் பிறந்துள்ளன.

கடந்த ஓகஸ்ட் மாதம் 28ஆம் திகதி பிறந்த சிங்கக் குட்டிகள் ஆரோக்கியத்துடன் இருப்பதாக தேசிய மிருகக் காட்சிச்சாலை திணைக் களத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குறித்த குட்டிகளுக்கு தாய் சிங்கம் விருப்பத்துடன் பாலூட்டி வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-3-10)

## வடகொரியா மீது பொருளாதார தடைகளை விதிக்கக் கூடாது

### சீனா எதிர்ப்பு



வடகொரியா மீது பொருளாதார தடைகளை விதிக்கக் கூடாது, அதற்குப் பதிலாக அந்த நாட்டுடன் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும் எனறு சீனா தெரிவித்துள்ளது.

வடகொரியா அண்மையில் 5ஆவது முறையாக அணுகுண்டு சோதனையை நடத்தியது. இதற்கு உலக நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. அந்த நாட்டின் மீது கடுமையான பொருளாதார தடைகள் விதிக்கப்படும் என்று ஐ.நா. சபை எச்சரித்துள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக சீன வெளியுறவு அமைசசர் வாங் ஜீ கூறியிருப்பதாவது,

வடகொரியா அணுகுண்டு சோதனை நடத்தியதை சீனா கடுமையாக கண்டிக்கிறது. அதேநேரம் அந்த நாட்டின் மீது பொருளாதார தடைகள் விதிப்பதால் எவ்வித பயனும் இல்லை. அதற்குப் பதிலாக வடகொரியாவுடன் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகளை நடத்தலாம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இதனிடையே வடகொரியா விவகாரம் தொடர்பாக அமெரிக்கா, ஜப்பான், தென்கொரிய வெளியுறவு அமைச்சர்கள் நாளை அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் சந்தித்துப் பேசுகின்றனர். அப்போது வடகொரியாவுக்கு எதிராக கடுமையான பொருளாதார தடைகள் விதிப்பது குறித்து விரிவாக ஆலோசிக்கப்படவுள்ளது.

இதேவேளை வடகொரியாவின் அணுகுண்டுச் சோதனை நடவடிக்கைக்கு இலங்கை கடும் கண்டனம் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-3-10)

## மொனராகலையில் ஆலங்கட்டி மழை மகிழ்ச்சியில் மக்கள்

(கொழும்பு)

மொனராகலை பிரதேசத்தில் ஐஸ் கட்டி மழை பெய்துள்ளது.

நீண்ட காலமாக மழையின்றி வறட்சியினால் பாதிக்கப்பட்டிருந்த மொனராகலையின் சில பகுதிகளில் மழை பெய்துள்ளது.

மொனராகலை சியம்பலாண்டுவ முத்துகண்டிய என்னும் பிரதேசத்தில் ஐஸ் கட்டி மழை பெய்துள்ளது.

கடுமையான காற்றுடன் இவ்வாறு ஐஸ் கட்டி மழை நேற்று முன்தினம் பெய்துள்ளது. (இ-3-10)

## சீனிக்கு விதிக்கப்பட்ட விசேட விற்பனை பொருட்கள் சேவைகள் வரி அதிகரிப்பு

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் சீனிக்கு விதிக்கப்பட்ட விசேட விறபனை பொருட்கள் சேவைகள் வரி ஒன்று தசம் எழு ஐந்து வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கமைய இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ கிராம் சீனிக்கு விதிக்கப்பட்ட 25 சத வரி இரண்டு ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளதாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் இறக்குமதி செய்யப்படும் கறுப்பு சீனிக்கு 15 ரூபா விசேட பொருட்கள் சேவைகள் வரி அறவிடப்படும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உள்நாட்டு கறுப்பு சீனி உற்பத்தி அதிகளவில் சந்தைக்கு பிரவேசிப்பதாலும், உள்நாட்டு சீனி உற்பத்தியை பாதுகாக்கும் நோக்கிலும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனினும் சந்தையில் விறகப்படும் ஒரு கிலோ கிராம் சீனக்கான விற்பனை விலை 95 ரூபாவில் இருந்து மாற்றம் பெறாது என நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

அதற்கமைய சீனிக்கான திருத்தப்பட்ட பொருட்கள் சேவைகள் வரி நேற்று முன தினம் நள்ளிரவு முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-3-10)

## தனியாரின் காணியில் இருந்து ஒன்பது ஆர்.பி.ஜி.ஷெல்கள் மீட்பு



கிளிநொச்சி கந்தசாமி கோவிலுகு அருகில் உள்ள தனியார் காணி ஒனறில் கிணறு வெட்டும் போது ஒன்பது ஆர்.பி.ஜி. ஷெல்க்ள் மீட்கப்படடுள்ளன.

குறித்த சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது, கிளிநொச்சி கந்தசாமி கோவிலுக்கு அருகில் உள்ள தனியார் காணி ஒன்றில் நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் கிணறு வெட்டும் போது ஒன்பது ஆர்.பி.ஜி.ரக ஷெல்கள் மீட்கப்பட்டுள்ளன.

இருப்பினும் நேற்றைய தினம் காலையே குறித்த காணியினுள் வேலை செய்கின்ற ஒப்பந்தகாரரினால் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கு வழாங்கப்பட்ட தகவலை அடுத்து சம்பவ இடத்திற்கு வருகைதந்த கிளிநொச்சிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன் மீட்கப்பட்ட ஒன்பது ஆர்.பி.ஜி ரக ஷெல்களும் பாவனைக்கு உதவாத நிலையில் இருப்பதாக கிளி நொச்சிப் பொலிஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (2-312)




## மல்லாவி பொலிஸ் நிலையம் இயங்கிய காணி உரிமையாளரிடம் மீளவும் ஒப்படைக்கப்பட்டது நீதிமன்ற நடவடிக்கையை அடுத்து

(மல்லாவி)

மல்லாவியில் தனியார் காணியில் அமைக்கப்பட்டிருந்த மல்லாவி பொலிஸ நிலையம் அங்கிருந்து அகற்றப்பட்டு காணி உரிமையாளரிடம மீளவும் வீடு, காணி ஆகியவை ஒப்படைக்கப்பட்டுள ளது. இந்நிகழ்வானது கடந்த 14 ஆம் திகதி புதன்கிழமை இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் தெரியவருவதாவது.

கடந்த 2009ஆம் ஆண்டு முதல மல்லாவியில் தனியார் ஒருவருக்குச் சொந்தமான காணியில் இருந்த வீட்டில் மல்லாவி பொலிஸ் நிலையம் இது வரை இயங்கி வந்தது.

காணி உரிமையாளா தனது வீட்டையும் காணியையும் மீள ஒப் படைக்குமாறு மல்லாவி பொலிஸாரிடம் முறையிட்ட போதும் அதனை அவர்கள் கையளிக்கவில்லை.

இந்நிலையில் காணி உரிமையாளரினால் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வந்த நிலையில் நீதிமன்றத்தின் உத்தரவிற்கமைவாக மீளவும் காணி, வீடு ஆகியவற்றை உரிமையாளரிடம் ஒப்படைக்குமாறு தீர்ப்பளிக்கப்பட்டது.

இந்நிலையில் தாம் அங்கிருந்து வெளியேறுவதாயின் வேறு காணியொன்றைத் தருமாறு துணுக்காய் பிரதேச செயலாளரிடம் மனு ஒன்றை பொலிஸார் வழங்கியிருந்தனர்.

இதனையடுத்து துணுக்காய் பிரதேச செயலகம் மல்லாவி பொதுச்சந்தைக்கு முன்பாக இருந்த அரச காணியான 2.5 ஏக்கருக்கு மேற்பட்ட காணியை பொலிஸாருக்கு வழங்கியது.

இக்காணியை செப்பனிட்டு சீர் செய்த பொலிஸார் அக்காணியினுள் பொலிஸ நிலைய கட்டடங்களை அமைத்திருந்தனர்.

இப்புதிய பொலிஸ் நிலையத்தில் தமது பணியை ஆரம்பித்த பொலிஸார் தாம் ஏற்கனவே இருந்த காணியை உரிமையாளரிடம் உத்தியோகபூர்வமாக கடந்த 14ஆம் திகதி புதன்கிழமை ஒப்படைத்தமை குறிப்பிடத்தக்கது. (2-15)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 50 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 90 | 95 | 100 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 70 | 80 | 120 | 100 |
| தக்காளி | 50 | 45 | 50 | 80 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 70 | 90 | 60 | 70 |
| கோவா | 80 | 55 | 90 | 80 | 80 |
| கரட் | 80 | 70 | 100 | 120 | 80 |
| பூசணி | 40 | 25 | 40 | 40 | 40 |
| புடோல் | 50 | 30 | 40 | 40 | 50 |
| வாழைக்காய் | 100 | 60 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 80 | 90 | 80 | 100 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 100 | 60 | 70 | 120 | 80 |
| வெண்டிக்காய் | 80 | 50 | 60 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | --- | 100 | 120 | 100 |
| பயற்றங்காய் | 40 | 30 | 40 | 60 | 50 |
| லீக்ஸ் | 120 | 90 | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 30 | 35 | 40 | 60 | 40 |
| கறிமிளகாய் | 100 | 90 | 100 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 150 | 140 | 180 | 120 | 150 |
| போஞ்சி | 80 | 140 | 180 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 40 | 30 | 50 | 50 | 50 |
| கீரை - 1பிடி | 40 | 25 | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 300 | 200 | 200 | 200 | 180 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 15-30 | 25 | 20-30 | 40 |
| இராசவள்ளி | — | — | — | — | 160 |
| வெங்காயப்பூ | 80 | 100 | — | 160 | 120 |
| முள்ளங்கி | 20 | 25 | 40 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 10 | 30 | 40 | 20 |
| வல்லாரை | 15 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 40 | 30 | 40 | 80 | — |

## சட்டவிரோதமாக தயாரிக்கப்பட்ட கசிப்பை உடைமையில் வைத்திருந்த இருவர் கைதாகினர்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ அத்தியட்சகர் பிரிவில் உள்ள முள்ளியவளை பொலிஸ் பிரிவில் 3ஆம் வட்டாரம் முள்ளியவளைக் கிராமத்தில் சட்டவிரோதமாக தயாரிக்கப்பட்ட 2750 மில்லிலீற்றர் கசிப்பை தமது உடைமையில் வைத்திருந்த இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யபட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலய தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம்நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல்11 மணிக்கும்மற்றும்நண்பகல் 12 மணிக்கும் இடம்பெற்றுளளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது. முல்லைத்தீவு மாவட்ட போதைப்பொருள் தடுப்புப்பிரிவு பொலிஸாரிற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து முல்லைத்தீவு மாவட்ட போதைப்பொருள் தடுப்புப்பிரிவு பொலிஸ பொறுப்பதிகாரி உபபொலிஸ் பரிசோதகர் கருணாரத்தினம் ஜெசிந்தன் தலைமையிலான பொலிஸ் அணியினரின் சுற்றிவளைப்பின் போதே இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவத்தின் போது முள்ளியவளைப் பொலிஸ் பிரிவிலுள்ள 3ஆம் வட்டாரம் முள்ளியவளையில் நேறறு வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நபர் ஒருவரை சோதனையிட்ட போது 2ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பை வைத்திருந்தமையை அடுத்து குறித்த நபர் கைது செய்யபபட்டுள்ளார்.

இதனை அடுத்து அதே பகுதியில் பிறிதோர் இடத்தில் நண்பகல் 12 மணியளவில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய நபர் ஒருவரை சோதனையிட்ட போது தனது உடைமையில் 750 மில்லி லீற்றர் கசிப்பை வைத்திருந்த நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள இரு சந்தேக நபர்களும் தடயப் பொருட்களுடன் மேலதிக விசாரணைக்காக முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக முல்லைத் தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத் தகவலில் தெரிவிக்கபபட்டுள்ளது. (2-15)

# தமிழ் சினிமா வரலாறு

## கே.பாலச்சந்தர் இயக்கத்தில் ஜெமினிகணேசன் 252

இப்படத்தில் பிரபல இந்தி நடிகர் அசோக்குமார் நீதிபதியாக நடித்தார். தாதா மிராசி டைரக்ட் செய்தார்.

சரஸ்வதி சபதம், கந்தன் கருணை, திருவருட்செல்வர் ஆகிய 3 படங்களும் புராணப்படங்கள். சிவாஜிகணேசனுடன் சேர்ந்து ஜெமினி கணேசன் நடித்துள்ள இந்த படங்கள் ரசிகர்கள் உள்ளத்தில் இடம் பிடித்தவை.

டைரக்டர் கே.பாலச்சந்தர் இயக்கத்தில் ஜெமினிகணேசன் இருகோடுகள், தாமரை நெஞ்சம், காவியத்தலைவி உட்பட பல வெற்றிப்படங்களில் நடித்தார்.

### பணமா பாசமா

ராமு படத்தை அடுத்து ஜெமினிகணேசன் நடித்த பெரிய வெற்றிப்படம் பணமா பாசமா. கே.எஸ்.கோபால கிருஸ்ணன் வசனம் எழுதி டைரக்ட் செய்திருந்தார்.

வாழ்க்கைக்கு தேவை பணமா? அல்லது பாசமா? என்ற பிரச்சினையை மையமாக வைத்து எடுக்கப்பட்ட இந்த படம் அனைத்து தரப்பு மக்களையும் கவர்ந்தது. ஜெமினியுடன் சரோஜாதேவி, எஸ்.வரலட்சுமி, நாகேஷ், விஜய நிர்மலா ஆகியோர் நடித்திருந்தார்கள்.

குறிப்பாக இந்தப்படத்தில் ஜெமினிகணேசனின் மாமியாராக எஸ்.வரலட்சுமி மிகப்பிர்மாதமாக நடித்தார்.

கே.வி.மகாதேவன் இசையில் எல்.ஆர்.ஈஸ்வரி பாடிய இலந்தப்பயம், இலந்தப்பயம், சொக்க சிவந்த பயம் என்ற பாடல் நகரம் முதல் பட்டி தொட்டி எங்கும் கலங்கியது.

### தாமரை நெஞ்சம்

பாமா பிலிம்சின் தாமரை நெஞ்சம் படத்தில் ஜெமினி கணேசனுடன் வாணிஸ்ரீ, சரோஜாதேவி நடித்தார்கள். கே.பாலச்சந்தர் டைரக்ட் செய்தார்.


1968ஆம் ஆண்டு தமிழக அரசின் சிறந்த படத்துக்கான விருது பெற்ற படம் இது.

### இரு கோடுகள்.

அதே கே.பாலச்சந்தர்-ஜெமினிகணேசன் கூட்டணியில் பெரிய வெற்றி பெற்ற இன்னொரு படம் இரு கோடுகள்.

ஜோசப் ஆனந்தன் எழுதிய கதை. கலாகேந்திரா தயாரிப்பு.

ஜெமினியின் முதல் மனைவியான சவுகார் ஜானகி நன்றாகப் படித்து கலெக்டர் ஆகிவிடுவார். அவரிடமே ஜெமினி



கணேசன் குமாஸ்தாவாக வேலை பார்ப்பார்.

ஜெமினியின் இரண்டாவது மனைவி ஜெயந்தி. ஜெமினியையும் சவுகார் ஜானகியும் மீண்டும் ஒன்று சேர்ந்துவிடக் கூடாது என்று தவிப்பார்.

மூன்று உள்ளங்களின் உணர்ச்சிப் போராட்டத்தை அருமையாக படமாக்கியிருந்தார் கே.பாலச்சந்தர். லைப் பைல் ஆகிய வார்த்தைகளை வைத்தே வசனத்தில் விளையாடியிருப்பார்.

சகல தரப்பினரையும் கவர்ந்த படம். குமார் இசை அமைப்பில் ''புன்னகை மன்னன் பூவிழிக் கண்ணன்...'' என்ற பாடலும் படமாக்கிய முறையும் அருமை.

சிறந்த தமிழ்ப்படத்திற்கான மத்திய அரசின் பரிசு பெற்ற படம் இது.

### பூவா தலையா

இராம. அரங்கண்ணலின் அருள் பிலம்ஸ் தயாரித்த பூவா தலையா படத்தில் ஜெமினிகணேசன், ஜெய்சங்கர், ராஜஸ்ரீ, வெண்ணிற ஆடை நிர்மலா நடித்தார்கள்.

இப்படத்தையும் வசனம் எழுதி கே.பாலச்சந்தர் டைரக்ட் செய்திருந்தார். இசை எம். எஸ். விஸ்வநாதன். பணமா பாசமா போன்றே கேள்விக்கு விடை தேடும் கதை அம்சம். 100 நாள் வெற்றிப்படம்.

### சாந்தி நிலையம்

ஜெமினிகணேசன்- காஞ்சனா நடித்த சாந்தி நிலையம் வண்ணத்தில் வெளிவந்த ரம்மியமான படம்.

இயற்கை எனும் இளைய கன்னி, கடவுள் ஒரு நாள் உலகைத் தேடி என்ற பாடல்கள் முணுமுணுக்க வைத்தன.

(தொடரும்)

தன் கையே தனக்குதவி என்பவர்களுக்குத் தான் கடவுளும் உதவுகிறார்.

- ஃப்ராங்க்லின்

வலம்புரி

T.P : 021 567 1530

website : www.valampurii.lk


# தமிழகத்து சகோதரர்களே எங்கள் நெஞ்சம் பதறுகிறது

எங்கள் தமிழகத்து சகோதரர்களுக்கு; கர்நாடக மாநிலத்தில் எம் தமிழ் சகோதரர்கள் தாக்கப்பட்டனர் என்ற செய்தி அறிந்த நெஞ்சம் பதறுகிறது. உங்கள் உடலில் விழுகின்ற ஒவ்வொரு அடியும் எங்களுக்கு வலி தருவன.

எங்களுக்காக குரல் கொடுக்கின்ற எம் தமிழகத்து சகோதரர்கள் எந்த துன்பத்துக்கும் ஆளாகாமல் இருந்தாலே அது ஈழத் தமிழினத்தின் மிகப் பெரும் பலம் என்ற நினைப்போடு வாழ்கின்றவர்கள் நாம். இந்த நினைப்புக்கு எந்தப் பழுதும் வந்திடலாகாது என்றிருந்த வேளையில், கர்நாடக மாநிலத்தில் எம் தமிழகத்துச் சகோதரர்கள் தாக்கப்படுகின்றனர் என்ற தகவல் எம் நெஞ்சை பதற வைத்துவிட்டது.

இப்படியொரு நிலைமை எதற்கானது? அரசியல் சூழ்ச்சிகள் இதற்குள்ளனவா? என்ற கேள்விகளின் மத்தியில் உங்கள் மீது நடந்த தாக்குதலை ஈழத் தமிழ் மக்கள் வன்மையாகக் கண்டிக்கின்றனர். இந்தக் கண்டனம் சம்பிரதாயமானதன்று. இது ஆத்மார்த்தமானது.

நாங்கள் துன்பப்பட்டபோது தங்கள் உயிரையே துச்சமாக மதித்து தங்கள் உடலை எரியூட்டி உலகமே! என் ஈழத் தமிழ்ச் சகோதரர்களைக் காப்பாற்று! என்று அறைகூவிய தமிழகத்து உடன்பிறப்புக்கள் இன்று கர்நாடகாவில் தாக்கப்படுகின்றனர் எனும்போது, இந்த வலியை எங்களால் ஜீரணிக்க முடியவில்லை.

அன்புக்குரிய தமிழகத்து சகோதரர்களே! வந்தே மாதரம் என்ற கோசத்தோடு பாரத தேசம் முழுவதும் ஒரு கணப்பொழுதில் ஒன்றுபடுகின்ற மிகப் பெரும் ஒற்றுமை கொண்டது உங்கள் இந்திய தேசம்.

இந்தப் பெருமை என்றும் நிலைக்க வேண்டும். உங்கள் மாநிலத்து மக்கள் தொகையின் ஒரு சிறு பகுதியாகிய எங்கள் இலங்கை நாட்டில் சிங்களவர், தமிழர், முஸ்லிம் என்ற இனங்களே இன்று வரை வாழ்ந்து வருகின்றன.

ஆனால் நூறு கோடி மக்கள் தொகையை கடந்து நிற்கும் இந்திய தேசத்தில் இந்தியர்களே வாழ்கின்றனர் என்ற உண்மையை நாம் நன்கு அறிவோம்.

ஆகையால் கர்நாடக மக்களும் தமிழகத்து சகோதரர்களும் எப்பாடுபட்டேனும் ஒற்றுமையாக வாழவேண்டும்.

முன்னைய ஒற்றுமையை மீளநிறுத்தவது அவசியமாகும். வன்முறைகள் ஒருபோதும் தீர்வாகாது என்பதை கர்நாடக மக்களுக்கு எடுத்துக்கூறுவது உங்களின் கடமை.

தாக்குதலுக்கு தாக்குதலும் வன்முறைக்கு வன்முறையும் என்றால் இந்தத் தேசம் ஒருபோதும் அமைதியாக வாழ முடியாது.

இந்தச் செய்தியை வன்முறையும் பேரினவாதமும் தாண்டவமாடிய இலங்கைத் தீவிலிருந்து சொல்கிறோம்.

ஆகவேதான் அன்புக்குரிய தமிழகத்து சகோதரர்களே! உங்கள் மீது விழுந்த அடி எங்கள் மீதும் விழுந்தது. ஆயினும் நீங்கள் பொறுமையை கடைப்பிடியுங்கள். உங்களின் பொறுமை இன்னும் சில வருடங்களில் இந்திய மாநிலங்களில் தமிழகத்துக்கு தனியான இடத்தைப் பெற்றுத்தரும்.

உங்களின் உயர்வும் உங்களின் எழுச்சியும் எங்களின் பலம். இது மறுக்க முடியாத உண்மை.

பாரத பூமியில் தமிழக மக்கள் வலிமைமிக்கவர்களாக ஆட்சி அதிகாரத்தை நிர்ணயிக்கும் சக்தியாக மாறும் போது ஈழத் தமிழர்களாகிய எங்களின் வலிமை தானாகக் கூடும். இது உண்மை.

எதுவாக இருந்தபோதிலும் உங்கள் மீது நடந்த தாக்குதல் எங்களைக் கதி கலங்க வைக்கின்றது என்று பதிவு செய்து கொள்ளுங்கள்.

அதேநேரம் தமிழகத்தில் ஒரு குழப்பத்தை ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டு இத்தகைய தாக்குதல் நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கலாம் என்பதால் நீங்கள் நிதானமாக நடவுங்கள். சட்டத்தின் உதவியை நாடுங்கள். எல்லாம் வெற்றி தரும்.

# அமெரிக்க ஜனாதிபதிக்கு எதிராக 21 சிறுவர்கள் வழக்குத் தாக்கல்

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அடுத்த தலைமுறையினருக்கு காலநிலை மாற்றத்தால் ஏற்படக் கூடிய பாதக விளைவுகளைத் தடுக்க போதுமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியுள்ளதாக குற்றஞ்சாட்டி 21 சிறுவரகளை உள்ளடக்கிய குழு வொன்று அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்ட இந்த வழக்குத் தாக்கல் குறித்து சர்வதேச ஊடகங்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை செய்திகளை வெளியிட்டுள்ளன.

அமெரிக்காவிலுள்ள 8 வயதுக்கும் 16 வயதுக்கும் இடைப்பட்ட வயதுடைய மேற்படி சிறுவர்களை உள்ளடக்கிய "எங்கள் சிறுவர்களது அறக்கட்டளை" என்றழைக்கப்படும் மேற்படி குழு அமெரிக்க அரசாங்கத்துக்கு எதிராக ஒரேகன் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

அந்த சிறுவர்கள் சட்டத்தரணி ஜூலியா ஒல்ஸனுடன் இயுஜின் பிராந்தியத்திலுள்ள நீதிமன்றத்துக்குச் சென்று வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

பராக் ஒபாமாவின் அரசாங்கம் காலநிலை மாற்றம் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறி இளம் தலைமுறையினரது உரிமைகளை மீறியுள்ளது என அந்த சிறுவர்களால் தாகலசெய்யப்பட்ட மனுவில குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-3-10

# சிவகங்கையில் தி.மு.க. மறியல்;1000 பேர் கைது

சிவகங்கையில் புகையிரத மறியலில் ஈடுபட்ட தி.மு.க.வை சேர்ந்த 1,000 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

கர்நாடகாவில் தமிழர்களுக்கு எதிராக நடைபெறும் வன்முறையை கண்டித்து நேற்று முழு கடையடைப்பு போராட்டம் நடந்தது தி.மு.கவும் இதற்கு முழு ஆதரவு அளித்து புகையிரத மறியல் போராட்டம் நடத்தப்படும் என அறிவித்திருந்தது.

அதன்படி நேற்று காலை சிவகங்கை மாவட்ட செயலாளர் பெரியகருப்பன் எம்.எல்.ஏ., முன்னாள் அமைச்சர் தென்னவன் தலைமையில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தி.மு.க.வினர் விருதுநகர் புகையிரத நிலையத்தை முற்றுகையிட்டனர்.

அவர்கள் கர்நாடக அரசை கண்டித்து கோஷமிட்டனர். பின்னர் அவர்கள் திடீரென்று புகையிரத நிலையத்திற்குள் செல்ல முயன்றனர்.

அப்போது ஏற்கனவே பாதுகாப்புக்கு அங்கு நிறுத்தப்பட்டிருந்த பொலிஸார் அவர்களை தடுத்து நிறுத்தினர். ஆனாலும் 100 இற்கும் மேற்பட்டோர் புகையிரத நிலையத்திற்குள் புகுந்து அங்கே நின்றிருந்த சென்னை இராமேஸ்வரம் புகையிரதத்தை மறித்து போராட்டம் செய்தனர். சிலர் புகையிரதம் மீது ஏறி கோஷமிட்டனர்.

இதையடுத்து பொலிஸார் விரைந்து செயற்பட்டு தண்டவாளத்தில் மறியல் செய்த தி.மு.கவினரை அப்புறப்படுத்தினர். மேலும் போராட்டம் செய்த பெரிய கருப்பன், தென்னவன் உட்பட ஆயிரத்திற்கும் மேற்பட்ட தி.மு.க.வினரை பொலிஸார் கைது செய்தனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. (இ-3-10)

# கால்நடை உற்பத்தியாளர்களுக்கான பால் உற்பத்தியாளர் சங்கம் ஆரம்பம்

கிராமிய பொருளாதார அமைச்சிற்குட்பட்ட மில்கோ நிறுவனத்தினால் கிளிநொச்சி மாவட்ட கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கண்டாவளை கிராமத்தில் கால்நடை பண்ணையாளர்களின் நலன் கருதி பால் உற்பத்தியாளர் சங்கம் ஆரம்பிக்கும் நிகழ்வு கடந்த 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கண்டாவளை பொது நோக்கு மண்டபத்தில் கண்டாவளை கிராம சேவையாளர் திருமதி எஸ்.துஷ்யந்தினி தலைமை யில் நடைபெற்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது.கண்டாவளை பிரதேசத்தில் கால்நடைகளில் இருந்து பெறபடும் பாலை சந்தைப்ப டுத்தும் வசதிகளை ஏற்படுத் திக் கொடுகப்படும் முகமாக மில்கோ நிறுவனத்தினால் பண்ணையா ளர்களின் நலன் கருதி தூய பால் உற்பத்தியாளர் சங்கம் ஆரம்பிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

இதன் தலைவராக சிதம் பரப்பிள்ளை மகாதேவன். செயலாளராக திருமதி கலாநிதி பாலச்சந்திரன. உப தலைவராக வாரித்தம்பி மகேஸ்வரன் ஆகியோர் தெரிவாகினர்.

நிர்வாக உறுப்பினர் களாக வேதாரணியம் கதிர்காமு. தம்பையா ஈஸ்வரன். திருமதி ஸ்ரீஸ்வரி மகேந்திரன். குண ரத்தினம் குணசீலன். திருமதி அகிலா யசோந்தன். திருமதி சசிகலா தயாபரன். திருமதி கமலாதேவி விக்னேஸ்வரன். திருமதி சிவயோகம் இரத்தினம். வல்லிபுரம் துரைசிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இந்நிகழ்வில் மில்கோ நிறுவனதின் கிளிநொச்சி மாவட்ட பணணை போதனாசிரியரும் விரிவர்க்கல் உத்தியோகத்தருமான வாதவூரான் தயாபரன். கண்டாவளை பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.பிரதீபன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.(2-15)

# முல்லை.அபிவிருத்திக்குழு கூட்டங்கள் 19 ஆம் திகதி

முல்லைத்தீவு மாவட்டத்தின் மூன்று பிரதேச செயலக பிரிவுகளின் அபிவிருத்திக்குழுக் கூட்டங்கள் நாளை மறுதினம் திங்கட்கிழமை இடம்பெறவுள்ளதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி குழு இணைத் தலைவருமான வைத்தியர் சிவப்பிரகாசம் சிவமோகன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு புதுக்குடியிருப்பு பிரதேச அபிவிருத்திக்குழு கூட்டமும் முற்பகல் 11 மணிக்கு கரைதுறைப்பற்று பிரதேச அபிவிருத்திக்குழு கூட்டமும் மாலை 3 மணிக்கு ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டமும் இடம் பெறவுள்ளது. முக்கிய மாக இராணுவத்தினரின் காணி சுவீகரிப்பும் அதனால் மககள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகவும் வீட்டுத்திட்டம் உள்ளிட்ட பல பிரச்சினைகள் தொடர்பாக தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த மூன்று பிரதேச அபிவிருத்திக்குழு கூட்டங்களும் கடந்த மாதம் இடம் பெறவிருந்து பிற்போடப்பட்ட நிலையில் நாளை மறுதினம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து 6மணி வரை யாழ்.பிரதேசத்தில வில்லூன்றி, பண்ணைப் பிரதேசம், ஆஸ்பத்திரி வீதி வேம்படி சந்தியிலிருந்து சத்திர சந்தி வரை, கந்தப்பசேகரம் வீதி, மகாத்மா காந்தி வீதி, முனீஸ்வரன் வீதி, கஸ்தூரியார் வீதி ஆஸ்பத்திரி வீதி சந்தியிலிருந்து வின்சர் சந்தி வரை, மினசார நிலைய வீதி, பெரிய கடை வீதி, பிறவுண் வீதி, அரசடிவீதி புகையிரதகடவையிலிருந்து தட்டார் தெரு சந்தி வரை, கே.கே.எஸ். வீதி நாச்சிமார் கோவிலிருந்து சிவன் கோவில் வரை, நாவலர் வீதியில் ஐந்து சந்தியிலிருந்து இலுப்பையடி சந்திவரை, கஸ தூரியார் வீதியில் அரசடி வீதி சந்தியிலிருந்து ஸ்ரான்லி வீதி சந்தி வரை, மானிப்பாய் வீதியில் ஓட்டு மடம் சந்தி யிலிருந்து கே.கே. எஸ் வீதி வரை, அசாத் வீதி, வி.ஏ.தம்பிலேன், பிரப் பங்குளம் வீதி, பொன்னப்பா வீதி, சிவலிங்கப் புளியடி, கன்னாதிட்டி, மணிக்கூட்டு வீதி, சிவன்பண்ணை வீதி, காதி அபூபக்கர் வீதி, கம்பஸ் லேன், மருதனார்மடம், ரொட்டியாலடி, அம்பலவாணர் வீதி, பெரியமதவடி, இலங்கை வங்கி முன் ஒழுங்கை, மருதனார்மடம் - யாழ்.நுண்கலைப் பீடம், தொழில் நுட்பக் கல்லூரி, பல்கலைக்கழக கல்லூரி, ஹரிகரன் அச்சகம் பிறைவேற் லிமிட்ட், அண்ணா மலையான் சிறி ராகவேந்திரா என்ர பிறைசஸ் பிறை வேற் லிமிட்டட், வியாபார அபிவிருத்தி முகாமையாளர் பி.எல்.சி, போதனா வைத் திய சாலை, யாழ் கொமர்சல் வங்கி, யாழ் . தேசிய சேமிப்பு வங்கி, யாழ். இலங்கை வங்கி, ரில்கோ விடுதி, சுகாதார திணைக்களம், கார்கில்ஸ் பூட் சிற்றி, யாழ்.வைத்தியசாலை (மூன்று மாடிக் கட்டடத் தொகுதி), அபி கட்ட டம், யாழ்.விடுதி, பல்கலைக் கழக தங்கு விடுதி ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் கோம்பாவில், இரணைப்பாலை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும் (இ-9)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்




❖ பொருளும் பெயரும் போதிய பயனைத் தராது. புகழும் கல்வியும் தராது.பயனளிப்பது அன்பே. துன்பங்கள் வைரக்கல் சுவர்போலக் குறுக்கிட்டாலும் அதனைப் பிளந்து கொண்டு முன் செல்வது ஒழுக்கமே.

❖ மிகச்சிறந்த பணியை நாம் செய்வதும் மிகப்பெரிய திறமையைக் காட்டுவதும் எப்போது? நான் என்னும் நினைவை அறவே மறந்து தனக்கென ஒன்றுமின்றி இரு. வருவது வரட்டும் என்று சிறிதும் கவலையற்றிரு. அப்போதுதான் நீ உண்மையாக ஏதாவது பணி செய்ய முடியும்.

❖ காம எண்ணமும் காமச் செயலைப் போன்று தீயதாகும். ஆசையை அடக்குவதே மிகச் சிறந்த பலனை விளைவிக்கும். நல்லனவோ தீயனவோ உனது செயல்களை உமிழ்ந்தபின் மீண்டும் அவற்றை ஒருபோதும் நினைக்காதே. செய்தது செய்தாயிற்று. மூட நம்பிக்கையை தூர எறி. மரணமே எதிர்வந்தாலும் பலவீனத்திற்கு இடங்கொடுக்காதே. கழிந்ததை எண்ணிக் கலங்காதே. சென்றதைக் குறித்து சிந்திக்காதே. உன் நற்செயல்களையும் நினைவில் வைக்காதே. கட்டற்று நில்.





இருபாலை கிழக்கு பாரதி கலாமன்ற விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்ற போது...

# இந்தியா சிறப்பாகச் செயற்படும் முத்தையா முரளிதரன் தெரிவிப்பு

இலங்கை அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் டெஸ்டில் 800 விக்கெட்டுக்கள் வீழ்த்தி உலக சாதனைப் படைத்துள்ள இவர், அனில் கும்ப்ளே மற்றும் விராட் கோலியின் கூட்டணியில் இந்தியா உச்சாணி நிலைக்குச் செல்லும் என்று கூறியுள்ளார்.

இதுகுறித்து முத்தையா முரளிதரன் கூறுகையில்,

“கும்ப்ளே ஒரு திறமையான நபர். அத்துடன் இந்திய சூழ்நிலையை முற்றிலும் அறிந்துள்ளவர். என்ன செய்ய வேண்டும் என்பது அவருக்கு நன்றாகத் தெரியும்.



கும்ப்ளேயின் வழிகாட்டுதலின் வழியில் இந்திய அணி நியூசிலாந்திற்கு எதிரான தொடரை மட்டுமல்ல. இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலியாவிற்கு எதிரான தொடரையும் வெல்லும்.

விராட் கோலி சிறப்பாக செயற்பட்டுக் கொண்டிருக்கிறார். இந்திய அணி வெளிநாட்டு மண்ணில் வெற்றி பெற்று கொண்டிருக்கிறது. துடுப்பாட்ட வீரர்கள் இங்குள்ள சூழ்நிலையை தெரிந்திருக்கும் நிலையில் சுழற்பந்து வீச்சாளர்கள் சிறப்பாக செயற்படுவார்கள். இது இந்தியாவிற்கு மிகப்பெரிய அனுகூலமாக இருக்கும்” என்றார்.

## இறுதிப்போட்டி

இருபாலை விளையாட்டுக்கழகம் நடத்தும் இருபாலையின் கிரிக்கெட் சமர் இறுதிப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.30 மணிக்கு இருபாலை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் சங்கானை கிங்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கொக்குவில் காமாட்சி விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

இவ்விரு அணிகள் மோதும் இறுதிப்போட்டிக்கு பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் கஜதீபன் கலந்து கொள்வார். (கு)

# ஓய்வு பெறுகிறார் சர்வான்

மேற்கிந்தியத் தீவுகளின் முன்னாள் அணித்தலைவர் ராம் நரேஷ் சர்வான். சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார்.



36 வயதான சர்வான். மேற்கிந்தியத் தீவுகள் சார்பாக 87 டெஸ்ட் போட்டிகளில் 15 சதங்கள் உள்ளடங்கலாக 40.01 என்ற சராசரியில் 5.842 ஓட்டங்களையும் 181 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 5 சதங்கள் உள்ளடங்கலாக 42.67 என்ற சராசரியில் 5.804 ஓட்டங்களையும் பெற்றதோடு. 18 இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளில் விளையாடி. 2 அரைச்சதங்களையும் பெற்றார்.

இவற்றுக்கு மேலதிகமாக. 4 டெஸ்ட் போட்டிகள் உட்பட 11 சர்வதேசப் போட்டிகளுக்கு மேற்கிந்தியத் தீவுகள் அணிக்குத் தலைமை தாங்கியிருந்தார்.

இறுதியாக. 2013ஆம் ஆண்டிலேயே சர்வதேசப் போட்டி ஒன்றில் விளையாடிய அவர். அதன் பின்னர் தேர்வாளர்களால் கருத்திலெடுக்கப்படாது இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிம்பாவே வீரர்கள் போராட்டம் இலங்கையுடனான தொடரில் சிக்கல்

தங்களுக்கு வழங்கவேண்டிய கொடுப்பனவுகளை வழங்கவில்லையெனத் தெரிவித்து சிம்பாவே அணிக்காக விளையாடும் ஹராரேயைச் சேர்ந்த வீரர்கள். பயிற்சிகளில் ஈடுபடுவதற்கு மறுப்புத் தெரிவித்து. எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இம்மாத முடிவில். பாகிஸ்தான் "ஏ" அணிக்கெதிரான தொடரொன்று இடம்பெறவுள்ளதோடு. அதைத் தொடர்ந்து. இலங்கை அணிக்கெதிரான தொடர் இடம்பெறவுள்ளது. இந்நிலையில். சிம்பாவே கிரிக்கெட் சபையின் இந்நிலைமையால். அவ்விரு தொடர்கள் தொடர்பாகவும் கேள்விக்குறிகள் எழுந்துள்ளன.

ஹராரேயில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் பயிற்சி முகாமில். ஹராரேக்கு வெளியே வசிக்கும் வீரர்கள் பங்குபற்றவில்லை. அவர்களை ஹராரேக்கு அழைப்பதற்குப் போதிய பணம் இல்லாத நிலையில். ஹராரேயில் வசிக்கும் வீரர்கள் மாத்திரமே. இதில் பங்குபற்றவிருந்தனர். அவர்களே. இப்போது இம்முகாமில் பங்குபற்ற மறுத்துள்ளனர். இவற்றுக்கு மேலதிகமாக. பயிற்சிகளுக்குத் தேவையான பந்துகளோ அல்லது வலைப் பயிற்சிகளுக்குத் தேவையான வலைகளோ வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்தாண்டு ஜூலை தொடக்கம். வீரர்களுக்கான போட்டி ஊதியங்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுவதோடு. இவ்வாண்டு ஜூலையுடன். வீரர்களின் ஒப்பந்தங்கள் காலாவதியாகியுள்ளதாகவும். புதிய ஒப்பந்தங்களை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் அறிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கெதிரான தொடர். 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடராகவே இதுவரை காணப்படுகின்ற போதிலும். அத்தொடர். முத்தரப்பு ஒருநாள் சர்வதேசப் போட்டித்தொடராக மாற்றப்படுமென முன்னர் தகவல்கள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# விராட் கோலியின் புதிய ஹெயார் ஸ்ரைல்




நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கு வீரர்கள் தயாரோ இல்லையோ முடியெல்லாம் வெட்டி விராட் கோலி ரெடியாகி விட்டார். ஒரு மாதிரியான டிசைனில் முடி வெட்டியுள்ளார் கோலி. அதை போட்டோ பிடித்து தனது டுவிட்டர் பக்கத்திலும் போட்டுள்ளார். 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இந்தியாவும் நியூசிலாந்தும் மோதவுள்ளன. இந்தியாவில் நடைபெறும் இந்தப் போட்டியில் வெல்ல இந்திய அணி ஆயத்தமாகி வருகிறது. அணியும் கூட அறிவிக்கப்பட்டு விட்டது.

இந்நிலையில் கப்டன் விராட் கோலி நியூசிலாந்து தொடருக்குத் தயாராகி விட்டார். இந்தத் தொடருக்காக அவர் புதிய ஹெயார் டைலுக்கும் மாறியுள்ளார். இந்த ஹெயார் ஸ்ரைலையும் அவர் உலகுக்கு வெளிக்காட்டியுள்ளார். செமஸ்ரைல் பாஸ் தனது புதிய ஹெயார் ஸ்ரைலை படம் பிடித்துப் போட்டுள்ள கோலி அபெனி ஜார்ஜ் எல்லாப் பக்கமும் சுப்பராக கவர் செய்து விட்டார். இது எனக்குப் பிடித்துள்ளது என்று கூறியுள்ளார்.

# முத்தமிழ் விழா - 2016 இரண்டாம் நாள் நிகழ்வு








தமிழ் மக்கள் பேரவையின் கலை, கலாசார உபகுழுவின் ஏற்பாட்டில் வடக்கு - கிழக்கு மற்றும் மலையகத் தமிழ் கலைஞர்கள் ஒன்றாக இணைந்து சிறப்பிக்கும் முத்தமிழ் விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வு மட்டக்களப்பில் நேற்று நடைபெற்றது. மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக பேராசிரியர் சி.மௌனகுரு, சிறப்பு விருந்தினராக மட்டக்களப்பு முன்னாள் மேலதிக அரசாங்க அதிபர் ரி.அருணகிரிநாதர் ஆகியோர் பங்கேற்று சிறப்பித்திருந்ததுடன், கலைஞர்களது பாரம்பரிய கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.


# மரண அறிவித்தல்



## யாக்கோப்பு சந்தியோகு

பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் செம்பியன்பற்று வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட யாக்கோப்பு சந்தியோகு நேற்று (16.09.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யாக்கோப்பு - விக்டோறியா தம்பதிகளின் அன்பு மகனும், மரியமலரம்மா (நேசமுத்து) அவர்களின் அன்புக் கணவரும், செல்வராணி, லலிதா, வனிதா, அன்ரன்யோயிஸ் (இத்தாலி), ஜெனா (லண்டன்), ஜெறோம் ஆகியோரின் தகப்பனாரும், மரியதாஸன்குலாஸ், யோகறஞ்சன், மணிறாஜ், றெச்சு (இத்தாலி), றோமணி (லண்டன்), றீற்றா ஆகியோரின் மாமனாரும், செல்வன், காலஞ்சென்ற விமலன் மற்றும் ஜென்சி, யான்சி, டஸ்ரன் (லண்டன்), நொயிலின், டன்சிகா, சுவர்னா, சுகுணா, நவீன்ராஜ், சுஜானா, ஜெயானி, றெக்சன் (கொலண்ட்), றேக்கா (லண்டன்), பிறிட்ணி (லண்டன்), பிறைற்றன் (லண்டன்), சுகன்யா, சுவேதா, ஆகாஸ், இந்திரன், றங்கன், மாலினி, ஜெயா, ஜெகன், நிஷாந்தன் (லண்டன்), மேரி (கொலண்ட்) ஆகியோரின் பேரனும், ஸ்ரேயா, நியூறி, ஆகாஸ், அகில், அபிலாஸ், அஸ்வின், பூஜா, விதுசன், கன்சிகா, தனுஷா, தாறுஜா, நஷீம், நஷீபா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (17.09.2016) சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : மகன் - ஜெனா,
மருமகள் - றோமணி (லண்டன்)

(5933)


## நாவற்குழியில்...

இந்த திட்டத்தினை நடைமுறைப்படுத்தவுள்ளோம்.

அந்த வகையில் நாவற்குழிப் பிரதேசத்தில் 60 ஏக்கர் காணி உள்ளது. அதில் உள்ள குடும்பங்களை ஒழுங்குபடுத்தவுள்ளோம். மேலும் முதல்கட்டமாக அப்பகுதியில் 250 குடும்பங்களை குடியமர்த்தி அவர்களுக்கு வீட்டுத் திட்டமும் வழங்கப்படவுள்ளது. இந்த திட்டம் அடுத்த மாதமளவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அதற்கு அடுத்த கட்டமாக தொடர்மாடி குடியிருப்புக்களை அப்பகுதியில் அமைத்து மத்திய தர குடும்பங்களை குடியமர்த்துவதற்கான திட்த்தை நடைமுறைப்படுத்தவுள்ளோம். இத் திட்டங்களை ஒழுங்குமுறையில் நடைமுறைப்படுத்துவதற்கு முழு ஒத்துழைப்பையும் நாம் வழங்குவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## ஆயுதங்கள் மீ...



மேற்பட்ட தோட்டாக்கள் இருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும் மீட்கப்பட்ட தோட்டாக்கள் பயன்படுத்த முடியாத அளவுக்கு துருப்பிடித்து காணப்படுவதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

சம்பவம் குறித்து அனுராதபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-4)

## நல்லிணக்கத்...

ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி, சமஷ்டி மற்றும் ஓரளவு மத சார்பற்ற அரசியலமைப்பின் மூலம் பல சர்வதேச நாடுகளின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன.

தென்னாபிரிக்கா மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகளில் காணப்பட்ட இனப்பிரச்சினைகளுக்கு இவ்வாறான சமஷ்டி அரசமைப்பு மூலமே தீர்வு காணப்பட்டுள்ளது. எனவே அவ்வாறான உலக நாடுகளை முன்னுதாரணமாகக் கொண்டு இலங்கையும் செயற்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார். (செ)

## சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் பொதுக்கூட்டம் நாளை 18-ம் திகதி ஞாயிறுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர்கூடத்தில் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் தலைவர் க. ஆனந்த குமாரசுவாமி தலைமையில் இடம்பெறவுள்ளது.

சமூகத்தில் இடம்பெறுகின்ற அநீதிகளுக்கு எதிராகக் குரல்கொடுத்து வருகின்ற, அவ் அநீதிகளைச் சமூகத்திலிருந்து அகற்றுவதற்காகப் பாடுபட்டு வருகின்ற சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் எதிர்கால வேலைத்திட்டங்கள் தொடர்பாகக் கலந்துரையாடிச் செயற்படுவதற்காக பொது நலனில் அக்கறையுள்ள அனைவரையும் இப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (செ)

# நான் வடக்கு; நீ கிழக்கு வேண்டாம்...

மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றும் போது,

எமது அரசியல் விவகாரங்களை அரசியல் தலைமைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கும், அரசியல் தீர்வு சட்டமூலங்களில் தமிழர்களின் வருங்கால நிரந்தர இருப்பை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் பரிந்துரைகளை மேற்கொள்வதற்கும் மற்றும் தமிழ் மக்கள் சார்ந்த இன்னோரன்ன விடயங்களில் தமிழ மக்களுக்கு பலமாக நின்று உதவுவதற்கும் தமிழ் மக்கள் பேரவை என்ற ஒரு அமைப்பு உருவாகியது.

அவர்களின் நோக்கம், அவர்கள் மேற்கொள்ளவிருந்த முயற்சிகளில் தெளிவுத் தன்மை காணப்பட்டது. ஒவ்வொருவிடயத்தையும் அலசி ஆராய்ந்து முடிவுகளை மேற்கொள்ளக்கூடிய அறிவுசார் அங்கத்தவர்களைக் கொண்ட சபையாக தமிழ் மக்கள் பேரவை மிளிர்ந்தது.

இவர்களின் இந்த புதிய முயற்சி தமிழ் மக்களின் விடிவுப் பாதைக்கான ஒரு உந்துசக்தியாக அமையும் என்ற காரணத்தினால் நானும் அந்த அமைப்புக்கு அனுசரணை வழங்க முன்வந்தேன். ஆனால் எக்காலத்திலும் ஒரு அரசியல் கட்சியாக மாற்றம்பெறக்கூடாது என்ற நிபந்தனையுடனேயே இணைந்து கொண்டேன்.

நான் என் நீதித்துறைப் பயணத்தில் காலடி பதித்ததே இந்த மட்டு மண்ணில்தான். புராதன இந்து ஆலயங்களில் ஏற்படும் சர்ச்சைகளை நீதிமன்றங்களுக்குச் செல்லாது மக்களே தமது பிணக்குகளைத் தீர்த்து வைக்கும் வகையில் ஒரு கட்டமைப்பை உருவாக்கி அதற்கான யாப்பையும் ஆக்கிக் கொடுத்தேன்.

ஆனால் சிறையில் சுமார் இரு வருடங்கள் மறியலில் இருந்த மாவை.சேனாதிராஜா, காசி ஆனந்தன் போன்றோருக்கு பிணை அளித்ததன் காரணமாக உடனேயே நான் சாவகச்சேரிக்கு மாற்றலாக்கப்பட்டேன். 37 வருடங்களின் பின்னர் பிறிதொரு கோலத்தில் உங்கள் முன் நிற்கின்றேன். மாற்றம் ஒன்றே மாநிலத்தின் மாறாத தோற்றம் என்றார் புத்த பகவான்.

எமது கலை, கலாசாரம், இலக்கியம் அனைத்திற்கும் அடிநாதமாக விளங்குவது எமது மொழி. மொழி இன்றேல் கலை இல்லை, கலாசாரம் இல்லை, இலக்கியம் இல்லை. எம் பாரம்பரியத்திற்கான வடிவம் மொழியே.

தமிழ்மொழியின் பயன்பாடு மற்றும் இலக்கியப் பிரயோகம் என்பன எமது இளைய சமூகத்தினரிடம் எவ்வாறான வளர்ச்சிப் பாதையில் செல்கின்றது என்பதையும் அதன் பயன்பாடு சுமுகமான பாதையில் செல்லாது மருவிச் செல்கிறது எனின் அதற்கான காரணங்களையும் அவற்றை சீர்படுத்தக் கூடிய வழிமுறைகளையும் ஆராய்தல் நன்மை பயக்கும் என்று கருதுகின்றேன்.

தமிழ்மொழி என்பது உலகின் தொன்மையான மொழிகளில் ஒன்றாகவும், செம்மொழி என்ற சிறப்பைப் பெற்ற இலக்கிய வளங்களைக் கொண்ட மொழியாகவும் அமைந்துள்ளது.

இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடிகளாக விளங்குபவை. இலட்சிய நோக்கம் கொண்டவை. ஆனால் இன்றைய சமுதாயம் தமிழ் இலக்கியத்தைப் புறக்கணித்து வருவது மனவருத்தத்தைத் தருகின்றது. எமது வீர வரலாற்றுக் காவியங்கள் கவனிப்பாரற்று கிடப்பில் போடப்பட்டுள்ளன. அறநூல்கள் அநாதைகள் ஆகி விட்டன.

ஆனால் எமது புராதன இலக்கியத்தினுள் புதையல்கள் பொதிந்திருக்கின்றன என்பதை மட்டும் இங்கு கூறிவைக்கின்றேன். தமிழ்மொழியை ஐயந்திரிபறக் கற்காமை ஒரு பாரிய பிரச்சினையாகத் தமிழ மாணவ மாணவியரிடையே வளர்ந்து கொண்டு செல்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. வெறும் விற்பனைப் பொருளாகிவருகின்றது மொழி.

தமிழ் இலக்கியத்தை முறையாகக் கற்பிக்க ஆசிரியர்கள் இல்லாமையால் கணிசமான மாணவர்கள் தமிழ் இலக்கியத்தைக் கைவிட்டு வருகின்றார்கள். இந்த விடயம் ஆழமாக ஆராயப்பட வேண்டியுள்ளது. பிறமொழிப் புலமை மாணவர்களை வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்லும் என்பதில் ஐயம் இல்லை.

தன்னை அறிந்தே பிறரை அறிய முற்பட வேண்டும். தன் மொழி அறிந்தே பிறமொழி பாண்டித்தியம் பெற வேண்டும். இல்லையேல் நாம் கலப்பினக் காடையர்கள் ஆகிவிடுவோம். தமிழை இலக்கணத் தமிழாகப் பேச வேண்டும் என்று நான் கூறவில்லை. கொச்சையாகப் பேசாதீர்கள் என்றுதான் கூறுகின்றேன்.

இயற்கையுடன் இணைந்த இலக்கியச் சுவை என்பவற்றைத் தொலைத்துவிட்டு இன்று பொதுக் கொள்கைகளின் கீழ் இயங்க முற்பட்டுள்ளோம். அத்துடன் பழைய தமிழ் இலக்கியங்களைப் படித்துப் புரிந்து கொள்ளுதல் கடினம் என்ற மனப்பாங்கில் தமிழை ஒதுக்கி இலகுவான பாடங்களை இலகுவில் கற்க விரும்பும் பல்கலைக் கழக மாணவர்களின் போக்குக் கூட தமிழ்மொழிப் பிரயோகத்தின் பின்னடைவிற்கான காரணங்களில் சில என்று அடையாளம் காட்டலாம். ஆகவே மொத்தத்தில் பல காரணங்கள் எமது மொழிப் பிரயோகத்தை வெகுவாகப பாதித்துள்ளன எனலாம்.

இவ்வாறு மருவிச் சென்று கொண்டிருக்கும் தமிழ் மொழியின் தனித்துவத்தையும் அதன் இலக்கியப் பாவனையையும் மீண்டும் ஒருமுறை கட்டியெழுப்பி உயரிய ஸ்தானத்தில் தக்க வைக்க முயற்சிப்பது காலத்தின் கட்டாயமாக உள்ளது.

நாம் பார்வையாளர்களாக இருக்காது மொழி வளர்ச்சியில் எம்மையும் பங்காளர்களாக இணைத்துக் கொள்ள வேண்டும்.

எம் தமிழினத்தை இனி ஒன்றுபடச் செய்யப் போவது அரசியல் இல்லை. எமது தமிழ், எமது தமிழ் இலக்கியம், எமது தமிழ்க் கலைகள், எமது தமீழ்ப் பாரம்பரியங்கள், எமது தமிழ் வாழ்க்கை முறை. எமது சமூக ஒருமைப்பாடே வட கிழக்கு மாகாணங்களின் சமரசத்திற்கும் சமஷ்டிக்கும் வழி அமைப்பன.

இதுவரை காலமும் நாங்கள் பலவிதங்களில் எமது முரண்பாடுகளையே முன்னிறுத்தி வந்துள்ளோம். நான் வேறு குடி, நீ வேறு குடி என்றோம். நான் வடக்கு,நீ கிழக்கு என்றோம், நான் விவசாயி, நீ மீன்பிடிப்பவன் என்றோம். நான் தமிழன், நீ முஸ்லிம் என்றோம். எம்மை எல்லாம் இனிமேலாவது தமிழ்மொழி நம் அனைவரையும் ஒன்றுபட வைக்கட்டும்! தமிழ் மொழியின், அதன் இலக்கியத்தின், அதன் பாரம்பரியத்தின், அதன் இலட்சியத்தின் அழகில் இனி ஒன்றுபட முன் வருவோம்

வேற்றுமைகள் இருக்கத்தான் செய்யும். ஆனால் நாம் அன்பால் ஒன்றுபட முடியும். தமிழ் அழகால் ஒன்றுபட முடியும். இலக்கிய அறிவால் ஒன்றுபட முடியும். அந்த ஒற்றுமையை வட கிழக்கு மாகாண மக்களாகிய நாம் யாவரும் வரவேற்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

# சகலரும் ஏற்...

தலைவருமான இரா.சம்பந்தன் மீண்டும் தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டில் உருவாக்கும் புதிய அரசியல் யாப்பானது சகல மக்களுக்கு ஏற்புடையதாகவும் நாடு பிளவுபடாத வகையிலும் ஒருமித்த நாட்டினுள் சகலரும் சம உரிமையுடன் வாழக்கூடியதாகவும் அமையும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை எனவும் அவர் கூறினார்.

திருகோணமலை, சம்பூர் பிரதேசத்தில் நேற்று வெள்ளிக்கிழமை "கிழக்கின் எழுச்சி -2016" எனும் தொனிப்பொருளிலான விவசாயக கண்காட்சி நடைபெற்றது. இதன் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், தற்போது உருவாக்கப்படும் புதிய அரசியல் யாப்பானது மக்களிடம் சமர்ப்பிக்கப்பட்டு, அது சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்பட்டு மக்களின ஆணையைப் பெற்ற பின்னரே அமுலுக்கு கொண்டுவரப்படும.

எனவே, எவரும் எவரையும் ஏமாற்றுவார்கள் என்று நாம் கற்பனை செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றார். இந்த மேடையில் நான் அரசியல் பேச விரும்பவில்லை. எனினும், அண்மைக் காலமாக பல்வேறு மாறுபட்ட கருத்துகள் ஆங்காங்கே தெரிவிக்கப்படுகின்றன. சில இனங்களின் அரசியல் தலைவர்கள் அவர்களுடைய இனங்களை ஏமாற்றுவதற்காக பேசி வருவதாக தெரிவிக்கின்றனர்.

இதற்கு பலவிதமான கருத்துகளை நான் கூறலாம். ஆனால், மிகச் சுருக்கமாக கூறுவதானால், எவரும் எவரையும் ஏமாற்றவும் இல்லை. ஏமாற்றவும் முடியாது. யாரையும் ஏமாற்றி உருவாக்கப்படும் அரசியல் யாப்பு திருப்திகரமான, நிதானமான, நிலைபேறான அரசியல் தீர்வாக அமையமுடியாது என்றார். மேலும், சம்பூரில் இந்த விவசாயக் கண்காட்சி வரவேற்கத்தக்கது. காரணம் மீள்குடியேற்றத்துக்கு பின்னர் இவ்வாறான செயற்பாடு அவசியமானது எனவும் அவர் கூறினார். —(செ)

# நாவற்குழியில் 250 குடும்பங்...

யாழ் மாவட்டத்தில் உள்ள அரச காணிகளில் அத்துமீறி குடியமர்ந்துள்ள 250 குடும்பங்கள் விரைவில் நாவற்குழி பிரதேசத்தில் குடியமர்த்தப்படவுள்ளதுடன், அவர்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் அடுத்தமாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறை பிரதி அமைச்சர் இந்திக்க பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

யாழ் மாவட்டத்தில் உள்ள குடியேற்றங்கள் தொடர்பாகவும் மக்களின் வீட்டு தேவைகள் பற்றிய கலந்துரையாடல் ஒன்று நேற்றைய தினம் பிரதி அமைச்சர் மற்றும் யாழ் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் ஆகியோர் தலைமையில் இடம்பெற்றது.

கலந்துரையாடலின் முடிவில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் உள்ள மக்கள் யுத்தத்தின் பின்னர் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளார்கள். மிக முக்கியமாக காணி, வீடு இல்லாத பிரச்சினை அதிகமாகவுள்ளது. எனவே விசேடவிதமாக அபிவிருத்தியில் கவனம் செலுத்தி மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும்.

வீடமைப்பு தொடர்பாக நாடுமுழுவதும் 200 திட்டங்களை நடைமுறைப்படுத்தி அத்துமீறி குடியமர்ந்துள்ள மக்களுக குரிய சாதகமான முடிவுகளை எடுப்பதற்கு தீர்மானித்து வருகிறோம். அதேபோன்று யாழ் மாவட்டத்தில் உள்ள மக்கள் வெவ்வெறு இடங்களில் அத்துமீறி குடியேறியுள்ளார்கள். அவர்களை ஒழுங்கு படுத்த வேணடும். எமது அமைச்சர் சஜித் பிரேமதாசவின் வழிகாட்டலின் கீழ்

23ஆம் பக்கம் பார்க்க....

நீங்கள் தொழில் தேடுபவரா?
முன்னணி நட்சத்திர ஹொட்டேல்களில்
Front Office, Restaurant, Room Service,
Kitchen போன்ற பகுதிகளில் வேலைவாய்ப்புடன்
O/L உடன் Diploma in Hotel Management
CERTIFICATE – DIPLOMA – DEGREE
With FREE English Course
Up to 30% Discount
பயிற்சிக் காலத்திலேயே உழைக்கும் வாய்ப்பு
கற்கைநெறி நிறைவில் நிரந்தர வேலைவாய்ப்பு
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு
புதிய பிரிவுகள் ஆரம்பம் Week & Weekend Batch
அனுமதிகளுக்கு 077 3616 798
www.sikaram.lk
Sikaram Academy
021 222 0011
SIKARAM ACADEMY
Business - Hospitality - English
SCHOOL of HOSPITALITY
C-5791 இல.175, 1ஆம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி), யாழ்ப்பாணம்.

# போர்க்குற்ற விசாரணை...

தேசிய கலந்துரையாடல்கள், சகவாழ்வு மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் உறுதிப்படுத்தியுள்ளார்.

சர்வதேச நீதிபதிகளின் பங்களிப்புடன், யுத்த குற்ற விசாரணை இடம்பெற வேண்டுமென வலியுறுத்தப்பட்டு வந்த நிலையில், கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த நிகழ்வில் சிங்கள மொழியில் உரையாற்றிய அமைச்சர் மனோ கணேசன் தொடர்ந்தும் குறிப்பிடுகையில்,

'கடந்த காலங்களில் எமது நாடு சர்வதேசத்தினால் ஏற்றுக்கொள்ளப்படாத ஒரு நாடாக காணப்பட்டது. இன்று நிலைமை அவ்வாறு இல்லை. ஜனாதிபதியினதும், பிரதமரினதும் வழிகாட்டலின் கீழ் எமது அமைச்சரவை எமது நாட்டிற்கு நற்பெயரை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

எவரது அழுத்தத்திற்கும் அடிபணிந்து நாம் இதனைச் செய்யவில்லை. நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு தொடர்பிலான நடவடிக்கைகளை முன்னெடுக்கையில் சர்வதேசத்தின் அழுத்தம் காணப்படுவதாக சிலர் கூறுகின்றனர். எமக்கு எந்தவொரு அழுத்தமும் கொடுக்கப்படவில்லை.

யாருடைய அழுத்தத்திற்கும் அடிபணிய வேண்டிய தேவையில்லை. பான் கீ மூன், ஒபாமா, மோடி யார் வேண்டுமாலும் இலங்கைக்கு வரலாம். அதில் எமக்கு பிரச்சினை இல்லை.

எனினும் எமக்கு வேண்டியதையே நாம் செய்வோம். அவர்களை வரச் சொல்லிவிட்டு சண்டை பிடிக்கவும் மாட்டோம்.

கடந்த காலங்களில் சர்வதேச பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுத்து அவர்கள் இங்கு வரும் போது அவரகளுக்கு எதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவர்களுக்கு எதிராக சுவரொட்டி பிரசாரங்கள், உண்ணாவிரதங்கள், ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. அந்த மாதிரியான கேலி கூத்தடிக்கும் அரசாங்கம் அல்ல இந்த அரசு.

இன்று சர்வதேச யுத்தக்குற்ற வசாரணைகள் குறித்து பேசுகின்றனர். சர்வதேச விசாரணைகள் எனும் போது சர்வதேச நீதிபதிகளின் பங்களிப்பு இருக்கும் என சிலர் எம்மை அச்சுறுத்தினர். சர்வதேச நீதிபகள் உள்ளடக்கப்படமாட்டார்கள் என ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் உறுதிபட கூறினர். எனினும் சிலர் அதனை எதிர்த்து வாதிட்டனர்.

தற்போது சர்வதேச நீதிபதிகள் அற்றவகையிலேயே விசாரணை பொறிமுறை அமையும் என்ற உண்மை தெரியவந்துள்ளது.

இதன் மூலம் எமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக்கொள்வோம். எங்களுக்கு தேவையான வகையில் நாமே முடிவெடுப்போம் என்றும் அமைச்சர் மனோ கணேசன் கூறினார். (செ-4)

வேலைவாய்ப்பு
யதுசன் காமன்ஸ் தையல் நிலையத்திற்கு தையலில் அனுபவம் உள்ள பெண் தேவை.
19.09.2016 அன்று நேரில் சமுகம் கொடுக்கவும்
அம்பாள்குளம் பழைய சந்தை. (அருகாமை) கிளிநொச்சி.
தொடர்புகளுக்கு :- 077 4582 344 டினேஸ்
(H-5786)

அனைத்து நாடுகளுக்குமான விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK – 550*/= Kg
DELIVERY IN 3 - 5 DAYS (நிபந்தனைகளுக்குட்பட்டது)
மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.
தொடர்புகளுக்கு: 0768226240
●யாழ்ப்பாணம் ●கிளிநொச்சி ●நெல்லியடி ●பருத்தித்துறை ●வல்வெட்டித்துறை
V2 TRAVELS

Win Repair
A/C களும், சகலவிதமான குளிர்சாதனப் பெட்டிகளும் உங்கள் வீடுகளுக்கு வந்து திருத்திக் கொடுக்கப்படும்.
தொடர்பு – 077 9648942
(5932)

தேவை
வடமராட்சி பருத்தித்துறையில் கட்டிட வேலைகளிற்கான மேசன் மற்றும் கூலியாட்கள் தேவைப்படுகின்றனர்.
குறிப்பு :- தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்
தொடர்புகளுக்கு :- 0777795904
0770275845
(C-5790)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.09.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.